பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி

Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 புரட்டாதி 07 புதன்கிழமை (23.09.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 279

[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

## எதிர்க்கட்சியினரின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில்

# 20 ஆவது திருத்தம் சபையில் சமர்ப்பிப்பு




கறுப்புப் பட்டி அணிந்து எதிரணியினர் பாராளுமன்றில் களேபரம்

03ஆம் பக்கம் பார்க்க

## இலங்கையில் சமூகங்களுக்கிடையிலான

# சமாதானத்தையும் பாதுகாப்பையும் சர்வதேசம் உறுதிப்படுத்த வேண்டும்

## ஐ.நா ஆணையாளருக்கான கடிதத்தில் விக்னேஸ்வரன்



(யாழ்ப்பாணம்)

மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் இலங்கை மீதான பார்வை சர்வதேச சமூகங்களுக்கு மீண்டும் சமாதானத்தையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த வேண்டிய அவசியத்தை அவர்களுக்கு எடுத்துக் காட்டுகின்றது.

இதனை அடைய எடுக்கப்படும் சகல முயற்சிகளுக்கும் தமிழ் மக்கள் உற்ற துணையாக இருப்பார்கள் என்பதை உங்களுக்கு சொல்லி வைக்கின்றேன் என தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் மிசெல் பச்லெட் ஜெரியாவிற்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் இதைக் குறிப்பிட்டுள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது. 23

இளவாலை வடக்கில்

## தோட்டக் காணியில் வெடி பொருட்கள் கண்டுபிடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இளவாலை வடக்கில் தோட்டக் காணி 23

சண்டிலிப்பாயில்

## வீடு புகுந்து தந்தை, மகன் மீது வாள்வெட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சண்டிலிப் 23

# தமிழ்க் கட்சிகள் இன்று மீண்டும் ஒன்றுகூடுகின்றன

(யாழ்ப்பாணம்)

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலை அனுட்டிப்பதில் தடைகளை ஏற்படுத்தும் அரசின் முயற்சிகளை கைவிடக் கோரி, ஒன்றுதிரண்டுள்ள தமிழ் அரசியல் கட்சிகள் மீண்டும் இன்று ஒன்றாக 23

## மகிந்த - மோடி சந்திப்பில்

# 13 ஆவது திருத்தம் குறித்து பேச்சு ஏதும் இடம்பெறாது

(கொழும்பு)

இலங்கைப் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு இடையிலான முக்கியத்துவமிக்க கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 26ஆம் திகதி நடைபெற வுள்ளது. 23

## 20 ஐ சவாலுக்குட்படுத்தி

# உயர்நீதிமன்றத்தில் மனுத் தாக்கல்

## பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என மனுவில் சுட்டிக்காட்டல்

(கொழும்பு)

20ஆவது திருத்தச் சட்டத்தை சவாலுக்குட்படுத்தி குறித்த வரைபுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாக்கெடுப்பு இல்லாமல் 20ஆவது திருத்தத்தை நிறைவேற்ற முடியாது என தாக்கல் செய்த மனுவில் சுட்டிக் காட்டப் பட்டுள்ளது.

(23ஆம் பக்கம் பார்க்க)

# 20 ஆவது திருத்த சட்டமூலத்தால் நாட்டுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது

## எதிர்க்கட்சி தலைவர் சஜித் குற்றச்சாட்டு

(கொழும்பு)

மக்களின் ஜனநாயகம், பாராளுமன்றின் கௌரவத்தை இல்லாதொழிக்கும் வகையில்தான் 20ஆவது திருத்தச்சட்ட மூலம் நேற்று (செவ்வாய்க்கிழமை) கொண்டுவரப்பட்டுள்ளது என எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.



இதற்கான எதிர்ப்பினை நாம் இவ்வேளையில் பதிவு செய்துக் கொள்கிறோம். எமது மனசாட்சியை சில்லறைகளுக்கு விற்கும் தரப்பு நாம் கிடையாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

20ஆவது, திருத்தச்சட்டமூலம் தொடர்பாக சஜித் பிரேமதாச மேலும் கூறியுள்ளதாவது, “20 இன் ஊடாக ஆணைக்குழுக்களுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. தணிக்கை ஆணைக்குழு முற்றாக இல்லாதொழிக்கப்பட்டுள்ளது.

அரசமைப்புச் சபையை இவர்கள் இல்லாதொழித்துள்ளார்கள். பொலிஸ் ஆணைக்குழுவுக்கான அதிகாரம் இல்லாதொழிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியையும் பிரதமரையும் ஒரு பொம்மையாக மாற்ற நாம் விரும்பவில்லை. நாம் ஜனநாயகத்தை பலப்படுத்தவே இவ்வாறு எதிர்ப்புக்களை வெளியிட்டு வருகிறோம்.

19இல் குறைகள் உள்ளமையை நாமும் ஏற்றுக் கொள்கிறோம். எனவே, இவற்றை நிவர்த்தி செய்து 19ஐ பலப்படுத்தி, ஜனநாயகத்தை மேலும் வலுப்படுத்தவே நாம் முயற்சிக்க வேண்டும்.

அதைவிடுத்து தனிநபரை பலப்படுத்த திருத்தச்சட்டமொன்றைக் கொண்டுவரக் கூடாது. 20ஆவது தொடர்பாக ஆராய குழுவொன்று ஸ்தாபிக்கப்பட்டது.

எனினும், இந்தக் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையை புறந்தள்ளி, திருத்தங்கள் எதுவும் மேற்கொள்ளாமல்தான் 20 கொண்டுவரப்பட்டுள்ளது. இது ஜனநாயகத்துக்கு விழுந்த மரண அடியாகும்”-என அவர் குறிப்பிட்டுள்ளார்.

(ம-03)


**வீடு வாடகைக்கு**

யாழ். நகரில், K.K.S வீதி, கின்னர் லேனில் திருமணம் மற்றும் சுப காரியங்கள் தங்கிநின்று செய்வதற்குரிய வீடு, சகல தளபாட வசதிகளுடன் கிழமை, மாத அடிப்படையில் வாடகைக்கு வழங்கப்படும் அல்லது அலுவலக பாவனைகளுக்கும் வழங்கப்படும். (4064)

**தொடர்பு - 077 285 0753**



**ஓராண்டு சென்றதுவோ உத்தமியே...**

அன்னை மடியில் 11.01.1948



ஆண்டவன் அடியில் 23.09.2019

அமரர்

**பரமேஸ்வரி பரராஜசிங்கம்**

( திதி: புரட்டாதி அபரபக்க தசமி 11.10.2020 )

அன்பொழுக இல்லறத்தின் மாண்பைப் பேணி
அணுவளவும் அறம்பிசகா திருந்த அன்னை
முன்னுறவே குடும்பமொடு சுற்றம் தாண்டி
முழுமையுறு செல்நெறியால் வாழ்வை வென்று
என்னதவப் பயனெனவே எண்ணி நிற்க
எமதன்னை உடல்நீத்து ஆண்டு ஒன்றோ
நின்னருளில் வாழ்ந்திடுவோம் காலம் பூராய்
நிர்மலனின் திருத்தாளில் இனிது வாழ்வாய்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கலைக்கோயில், சின்னத்தாய்,
புலோலி தெற்கு, புலோலி.

- குடும்பத்தினர்

(4060)


# யாழில் 100 கிலோ மாட்டிறைச்சி மீட்பு

## ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஐந்து சந்தி பச்சைப் பள்ளிக்கு அருகாமையில், சட்டவிரோதமாக இறைச்சியாக்கப்பட்ட 100 கிலோ மாட்டிறைச்சி, விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

நேற்று காலை 10 மணியளவில் விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த இரகசியத் தகவலினடிப்படையில், குறித்த மாட்டிறைச்சி கைப்பற்றப்பட்டுள்ளது.

சம்பவத்தின்போது, முச்சக்கர வண்டியில் 100 கிலோ மாட்டிறைச்சியை கொண்டு செல்ல முற்பட்டவேளை, விசேட அதிரடிப் படையினரால் குறித்த மாட்டிறைச்சி கைப்பற்றப்பட்டுள்ளதுடன், இறைச்சியாக்குவதற்குத் தயார் நிலையில் இருந்த 33 ஆடுகளும் விசேட அதிரடிப் படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேவேளை, சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் அப்பகுதியைச் சேர்ந்த ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் பொலிஸ் அத்தியட்சகர், யாழ்ப்பாணம் விசேட அதிரடிப்படை முகாமைத்துவ அதிகாரி மற்றும் பொலிஸ் பரிசோதகர் ஆகியோரின் உத்தரவின் பேரில், புலனாய்வுத்துறையினரின் உதவியுடன், இக்கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-03)

## முகமாலை முன்னரங்கில்

# மீட்கப்பட்ட எலும்புக்கூடு பெண் போராளியினுடையது

(கிளிநொச்சி)

முகமாலை முன்னரங்கில் மீட்கப்பட்ட எலும்புக்கூடு பெண் போராளியினுடையது என அடையாளம் காணப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் அகழ்வுப் பணிக்காக திகதியிடப்பட்டிருந்தது. பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் குறித்த பகுதியினை பாதுகாப்பு செய்துவந்த நிலையில் நேற்றைய தினம் மதியம் 3 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி த.சரவணராஜா மற்றும் சட்ட வைத்திய அதிகாரி ஆகியோர் முன்னிலையில் அகழ்வுப் பணி முன்னெடுக்கப்பட்டது.

இதில் இரு பெண் போராளிகளின் இலக்கத் தகடுகள் மீட்கப்பட்டது. ஒரு தொகுதி எலும்புக்கூடு மீட்கப்பட்டது. விடுதலைப்புலிகளால் வழங்கப்படும் இலக்கத்தகடு மீட்கப்பட்டுள்ளது. அதில் த.வி.பு ஞா 0302 மற்றும் த.வி.பு. ஞ 0188 என அடையாளம் காணப்பட்டுள்ளது. பி பிளஸ் மற்றும் ஓ பிளஸ் இரத்த வகையைச் சேர்ந்தவர்கள் எனவும் அடையாளம் காணப்பட்டுள்ளது. அது சோதியா படையணியை சேர்ந்தவருடையது என அடையாளம் காணப்பட்டுள்ளது.

குறித்த எலும்புக்கூட்டின் மண்டையோடும் மீட்கப்பட்டுள்ளது. எதிரியிடம் அகப்பட்டால் தமது உயிரை மாய்ப்பதற்காக விடுதலைப்புலிகளால் வழங்கப்படும் சைனட்(குப்பி) ஒன்றும் பெண் போராளிகள் இடுப்பில் அணியும் பட்டியும் மீட்கப்பட்டது. அத்துடன் உரப்பைகள், விடுதலைப்புலிகளின் வரிச் சீருடைகள், பச்சை கலர் சீருடைகள், பாட்டா ஒன்று, பற்றிகள், சம்போ போத்தல்கள் போன்றவையும் மீட்கப்பட்டுள்ளது. துப்பாக்கி ஒன்று, கைக்குண்டு இரண்டு, மகசீன் 8, கோல்சர் கவர் மூன்று போன்றவையும் மீட்கப்பட்டுள்ளது.

தொடர்ந்தும் இன்றைய தினமும் அகழ்வுப் பணி முன்னெடுக்கப்பட உள்ளதாக கிளிநொச்சி மாவட்ட நீதவான் தெரிவித்தார். (ம-03,315)

## பாண்டியர்களின் பழங்காலத்து

# நாணயக் குற்றிகள் மன்னாரில் கண்டுபிடிப்பு

(மன்னார்)

மன்னார் நானாட்டான் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட வடக்கு வீதி என்னும் இடத்தில் மீன் மற்றும் வாள் சின்னங்கள் பொறிக்கப்பட்ட 1900ற்கும் மேற்பட்ட நாணயக் குற்றிகள் மற்றும் சட்டி பானை, ஓட்டுத் துண்டு போன்ற தொல் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.


கடந்த வெள்ளிக்கிழமை காணியின் உரிமையாளரால் புதிய வீடு அமைப்பதற்கு என அத்திவாரம் தோண்ட முற்பட்ட சமயத்தில் குறித்த நாணயங்கள் மற்றும் தொல்பொருட்கள் மீட்கப்பட்டது.


குறித்த விடயம் தொடர்பாக நானாட்டான் பிரதேச சபையின் உப தவிசாளருக்கு தெரியப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து உப தவிசாளர் குறித்த விடயம் தொடர்பாக முருங்கன் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் கவனத்திற்கு கொண்டு வந்தார். அதனைத் தொடர்ந்து குறித்த நாணயக் குற்றிகள் முருங்கன் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்த நாணயக் குற்றிகள் யாவும் மன்னார் நீதிமன்றத்தின் ஊடாக தொல்பொருள் திணைக்களத்திற்கு கையளிக்கப்படவுள்ளதாக முருங்கன் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

(ம - 03, 285)

# அமளிதுமளிக்கிடையில் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது
## 20வது திருத்தச் சட்டமூலம்





(கொழும்பு)

அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டமூலம் முதல் வாசிப்புக்காக எதிர்க்கட்சியின் எதிர்ப்புக்கு மத்தியில் நேற்று பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

நீதித்துறை அமைச்சர் அலி சப்ரி அரசியலமைப்பின் 20 ஆவது திருத்த வரைபினை நேற்று செவ்வாய்க்கிழமை பாராளுமன்றில் விவாதத்துக்காகவும், நிறைவேற்றத்திற்காகவும் சபையில் சமர்ப்பித்தார்.

இதன்போது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சபையில் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட நிலையில் சபையில் அமளிதுமளி ஏற்பட்டது.

அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் குரல் எழுப்புவதுடன் பதாகைகளையும் சபையில் ஏந்தியவாறு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் 20 ஆவது அரசியல் அமைப்பு சட்டமூலம் தொடர்பில் எந்தவொரு குடிமகனுக்கும் திருத்த வரைபிற்கு எதிராக ஏழு நாட்களுக்குள் உயர் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்ய முடியும் என்று பாராளுமன்ற செயலகம் ஏற்கனவே அறிவித்துள்ளது.

உயர்நீதிமன்றத்தின் முன் அரசியலமைப்பிற்கு சவால் விடுவதே இதன் நோக்கம் என்பதுடன் அவ்வாறு சவால்கள் இல்லாவிடின் 20 ஆவது திருத்த வரைபு 7 நாட்களுக்கு பாராளுமன்றத்தில் இரண்டாவது வாசிப்பிற்காக விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும். (2-7)

# 20ஆவது திருத்தச்சட்டத்தை தோற்கடிக்க பெரும்பான்மையினை நிரூபியுங்கள்
## எதிர்க்கட்சிக்கு பந்துல பதில்



(கொழும்பு)

20 ஆவது அரசியலமைப்பு திருத்த சட்டமூலம் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில், எதிர்க்கட்சியினர் தமது பலத்த எதிர்ப்பினை வெளியிட்டு வருகின்றனர்.

குறித்த சட்டமூலம் அமளிதுமளிகளுக்கு மத்தியில் நீதியமைச்சர் அலி சப்ரியினால் சபையில் முன்வைக்கப்பட்டது.

இந்த நிலையில், சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியினர், தமது கைகளில் கறுப்புப் பட்டிகளை அணிந்தும், பதாகைகளை ஏந்தியவாறும் எதிர்ப்பினை வெளியிட்டு வருகின்றனர்.

அத்துடன், குறித்த சட்டமூலம், ஜனநாயக விரோத செயற்பாடாகும் எனவும், அது நாட்டுக்கு அழிவை ஏற்படுத்துவதாகவும் எதிர்க்கட்சியினர் கோஷங்களை எழுப்பியுள்ளனர்.

இவ்வாறு பாராளுமன்றத்தில் எதிர்ப்பு வெளியிடுகின்றமை பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளுக்கு, விரோதமானவை என அமைச்சர் பந்துல சுட்டிக்காட்டினார்.

அத்துடன், 20 ஆவது திருத்தத்தை தோற்கடிக்க வேண்டும் எனில், எதிர்க்கட்சியினர் நீதிமன்றத்தை நாட வேண்டும் எனவும், அல்லது அதனை தோற்கடிப்பதற்கான பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த நிலையில், 20 ஆவது திருத்தத்தை கொண்டு வருவதற்காகவே, ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் மக்கள் செல்வாக்கு கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார். (2-7)

# மட்டு. அபிவிருத்திக் குழுவின் இணைத் தலைவராக பிள்ளையான்



(கல்முனை)

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத் தலைவராக மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கையொப்பமிட்ட இவருக்கான நியமனக் கடிதம், பிரதமர் மகிந்த ராஜபக்ஷவினால் நேற்று காலை வழங்கி வைக்கப்பட்டது. இவருடன் கிழக்கு மாகாண ஆளுநர் திருமதி அநுராதா யஹம்பத்தும் இணைத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். (2-7)

# 15ஆம் ஆண்டு நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

பகிரங்க சேவைகள் ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் யாழ்ப்பாண பிரதேச பிரிவுச் சங்கத்தின் 15 ஆம் ஆண்டு நிறைவு விழா மலர் வெளியீடும் வருடாந்தப் பொதுக்கூட்டமும் எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

யாழ்.பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் தலைவர் வி.சிறிசக்திவேல் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் சா.சுதர்சன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக ப.சே.ஓ.ந.நிதிய உப தலைவர் எஸ்.சுப்பிரமணியம், கணக்காளர் சூ.அகிலன், உதவிப் பிரதேச செயலாளர் திருமதி றோய் றொபின்சன் சோபிகா, நிர்வாக உத்தியோகத்தர் திருமதி பா.விஜயலக்சுமி ஆகியோருடன் கௌரவ விருந்தினராக ப.சே.ஓ.ந.நிதிய மாவட்ட சங்கத் தலைவர் என்.சிவரஞ்சன் கலந்து கொள்வார். (5)

# யாருடைய அதிகாரமும் இல்லாமல் போகலாம்; பிரதமருடைய அதிகாரம் இல்லாமல் போக இடமளிக்க முடியாது



(கொழும்பு)

யாருடைய அதிகாரத்தை இல்லாமல் செய்தாலும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் அதிகாரத்தை இல்லாமல் ஆக்க எவருக்கும் இடமளிக்கப் போவதில்லை என, அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான எஸ்.எம். மரிக்கார் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

20ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தின் மூலம் பிரதமருக்கு 19ஆவது திருத்தச் சட்டத்தில் வழங்கப்பட்ட அதிகாரங்கள் இரத்துச் செய்யப்பட உள்ளதாக

**- அளுத்கமகே -**

விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் மரிக்கார் இந்த கேள்வியை எழுப்பியிருந்தார்.

20ஆவது திருத்தச் சட்டம் பாராளுமன்றத்தில் நேற்று நீதியமைச்சரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-7)

# மனித குலத்திற்கு தீங்கு விளைவிக்கும் கஞ்சாவை உற்பத்தி செய்ய அனுமதி வழங்கக் கூடாது

## இல்லையேல் விளைவு மோசமாகும்

## பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை

(கொழும்பு)

**மருத்துவத்தேவைகளுக்காக கஞ்சாவை உபயோகிக்க முடியும் என்பதால் அதனை உற்பத்தி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட வேண்டும் என்றவாறான கருத்துக்கள் அண்மைக் காலத்தில் முன்வைக்கப்பட்டு வருகின்றன. ஏனைய போதைப்பொருட்களைப் போன்றே இதுவும் நாட்டின் இளைஞர், யுவதிகளின் எதிர்காலத்தை முற்றாக அழித்துவிடும் என பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை வலியுறுத்தினார்.**



கஞ்சா உள்ளிட்ட அனைத்து போதைப்பொருட்களும் நாட்டிலிருந்து முற்றாக இல்லாதொழிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் நோக்கில் கொழும்பிலுள்ள அனைத்து இலங்கை பௌத்த மகா சம்மேளன கட்டடத் தொகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை விசேட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை வலியுறுத்தினார். அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

கஞ்சாவை மருத்துவ தேவைகளுக்காகப் பயன்படுத்த முடியும் என்பதால், கஞ்சா உற்பத்திக்கு சட்டரீதியாக அனுமதி வழங்கப்பட வேண்டும் என்றவாறான கருத்துக்கள் அண்மைக்காலத்தில் முன்வைக்கப்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது. நாட்டிலிருந்து போதைப்பொருள் முற்றாக ஒழிக்கப்பட வேண்டும் என்று அனைத்துத்தரப்பிரும் வலியுறுத்துகின்ற னர்.

ஆனால் அதனை பயன்படுத் துவோருக்கு தீங்கேற்படுத்தக்கூடிய மற்றொரு பொருளாக இருக்கின்ற கஞ்சா பாவனையை ஏன் ஊக்குவிக்கின்றார்கள் என்ற விசனமே இதனால் ஏற்பட்டது.

இது எமது நாட்டின் இளைஞர், யுவதிகளின் எதிர்காலத்தை சீரழிக்கின்ற நடவடிக்கையாகவே அமையும்.

எனவே போதைப்பொருட்களைப் போன்றே கஞ்சா பாவனையும் முற்றாக இல்லாதொழிக்கப்பட வேண்டும். பெரும் நாசத்தை ஏற்படுத்தும் ஒரு பொருளை இல்லாமல் செய்துவிட்டு, அதேபோன்ற மற்றொரு பொருளின் உற்பத்தியை ஒருபோதும் ஊக்குவிக்கக் கூடாது.

ஆகவே கஞ்சா உற்பத்திக்கு சட்டபூர்வ அனுமதியை வழங்கக்கூடிய எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்கவேண்டாம் என்று ஜனாதிபதி மற்றும் பிரதமரை வலியுறுத்திக்கேட்டுக் கொள்கிறோம் என அவர் தெரிவித்தார். (ஜ-4)

# குறுகிய மனம் கொண்ட தேரரினாலேயே குழப்பம்; ஞானசார தேரர் பாராளுமன்றம் செல்வது உறுதி

## எங்கள் மக்கள் சக்தி தீர்மானம்



(கொழும்பு)

எங்கள் மக்கள் சக்தி கட்சிக்கு கிடைக்கப் பெற்ற ஒரு தேசியப் பட்டியல் ஆசனத்திற்கு அக்கட்சியின் தலைவர் சமன் பெரேராவை பரிந்துரை செய்து அவர் சுயமாக பாராளுமன்ற உறுப்பினர் பதவியை துறந்ததன் பின்னர் அவ்விடத்துக்கு பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் ஞானசார தேரரை நியமிக்க எங்கள் மக்கள் சக்தி கட்சியின் செயற் குழு தீர்மானித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பில் எங்கள் மக்கள் சக்தி கட்சியின் தலைவர் சமன் பெரேரா குறிப்பிடுகையில்,

எங்கள் மக்கள் சக்தி கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் வேதிரிகம விமல திஸ்ஸ தேரர் குறுகிய நோக்கங்களை கொண்டு செயற்பட்டமையின் காரணமாக. கிடைக்கப் பெற்ற ஒரு தேசியப்பட்டியல் விவகாரம் பிரதான பிரச்சினையாக தோற்றம் பெற்றுள்ளது.

பாராளுமன்றத்துக்கு தான் செல்ல வேண்டும் என இவர் கடந்த ஓகஸ்ட் மாதம் 7 ஆம் திகதி தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு தேசியப் பெயர்ப்பட்டியலில் தனது பெயரை பரிந்துரை செய்துவிட்டு தலைமறைவாகினார்.

கிடைக்கப் பெற்ற ஒரு தேசியப் பட்டியல் ஆசனம் கட்சிக்குள் பிரதான பிரச்சினையாக தோற்றம் பெற்றுள்ளது. கட்சியின் மத்திய குழுவின் அனுமதி இல்லாமலேயே வேதிரிகம விமலதிஸ்ஸ தேரர் தனது பெயரை தேசிய பட்டியல் ஆசனத்துக்கு பரிந்துரை செய்தார். கடந்த 7ஆம் திகதிக்கு பின்னர் இவர் கட்சியின் பொதுச்செயலாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்டு பதில் பொதுச்செயலாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க கட்சியின் செயற்குழு தீர்மானித்துள்ளது.

எமக்குக் கிடைத்துள்ள ஒரு தேசியப்பட்டியல் ஆசனம் பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் ஞானசார தேரருக்கு வழங்கப்பட வேண்டும் என்பது வாக்களித்த 67 ஆயிரம் மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

எங்கள் மக்கள் சக்தி கட்சி சார்பில் பாராளுமன்றத்துக்கு அக்கட்சியின் தலைவராக என்னை அனுப்பி பின்னர் நான் சுயமாகவே பதவி விலகி அவ்விடத்துக்கு பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் ஞானசார தேரரை நியமிக்க கட்சி செயற்குழு தீர்மானித்துள்ளது. உயர் நீதிமன்றின் தீர்ப்பு கிடைக்கப் பெற்ற பின்னர் இந்நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என அவர் தெரிவித்தார். (ஜ-4)



# சர்வாதிகார ஜனாதிபதி உருவாகுகிறார்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சர்வாதிகார ஜனாதிபதியை உருவாக்க தயாராகி வருகிறது என்பதை தான் ஆரம்பத்திலேயே சுட்டிக்காட்டியதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

களுத்துறையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தி கட்சியினரின் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

20வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் தற்போது ஏன் கொண்டு வரப்படுகிறது. 19 வது திருத்தச் சட்டத்திற்கு ஆதரவாக நாங்கள் அனைவரும் கைகளை உயர்த்தினோம்.

பாராளுமன்றத்திற்கு இருக்கும் அனைத்து அதிகாரங்களையும் ஜனாதிபதியின் கீழ் கொண்டு வர முயற்சித்து வருகின்றனர்.

ஜே.ஆர். ஜெயவர்தன உருவாக்கிய அரசியலமைப்புச் சட்டத்தில் அப்படியான விடயங்கள் இல்லை. ஜே.ஆர். ஜெயவர்தனவின் அரசியலமைப்புச் சட்டத்தில் இதனை விட அதிகாரங்கள் குறைவு.

தற்போது ஜனாதிபதிக்கு முழுமையான சர்வாதிகார பலத்தை வழங்க முயற்சிக்கின்றனர். இன்னும் சில ஆண்டுகளில் வெளிநாடுகளில் உள்ளவர்கள் அனைவரும் பாராளுமன்றத்திற்குள் இருப்பார்கள்.

இலங்கையை சேர்ந்த எவருக்கும் பாராளுமன்றத்திற்கு செல்ல முடியாமல் போகும். சர்வாதிகார அரசாங்கமே உருவாகப் போகின்றது என்பதை நான் அன்று சத்தமிட்டு கூறினேன். சர்வாதிகார ஜனாதிபதி உருவாகப் போகிறார். நான் அன்று கூறியதையே தற்போதும் கூறுகிறேன் எனவும் குமார வெல்கம தெரிவித்தார். (ஜ-4)

# திலீபனின் நினைவேந்தலுக்கு அரசு ஒருபோதும் அனுமதிக்காது

## வகுப்பெடுக்கும் கெஹலிய

**(கொழும்பு)**

**உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த திலீபனுக்கு நினைவேந்தலை நடத்துவதற்கு அனுமதிக்குமாறு விடுத்த கோரிக்கையை அரசு ஒருபோதும் ஏற்றுக் கொள்ளாது என ஊடகப் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல திட்டவட்டமாகத் தெரிவித்தார்.**



இன்று திலீபனுக்கு அனுமதி கொடுத்தால் நாளை விடுதலைப் புலிகளின் தலைவருக்கும் தமிழ்செல்வனுக்கும் அனுமதி கோருவர்.

எனவே அத்தகையதொரு நடவடிக்கைக்கு அரசாங்கம் ஒருபோதும் அனுமதிக்காது என மேலும் சுட்டிக்காட்டினார். வடக்கின் தமிழ்க்கட்சிகள் திலீபனின் நினைவேந்தலை நடத்துவதற்கு அனுமதிக்குமாறு கோரிக்கை விடுத்திருந்தமை



குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# கமநலசேவை நிலையங்களுக்கு விற்பனை நிலையங்கள் வேண்டும்


(நெளுக்குளம்)

வவுனியாவில் அமைக்கப்பட்டுள்ள பொருளாதார மத்திய நிலைய கடைத்தொகுதியில் வவுனியா மாவட்டத்தில் உள்ள எட்டு கமநல சேவை நிலையங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் விற்பனை நிலையங்கள் ஒதுக்கப்பட வேண்டுமென ஓமந்தை கமநல சேவை நிலையத்தினர் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

நேற்று முன்தினம் வவுனியா மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்திலேயே இக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இதன்போது அபிவிருத்திக் குழுவின் இணைத் தலைவராகக் கலந்துகொண்ட வடமாகாண ஆளுநர் இது தொடர்பில் மாவட்ட செயலாளர் நடவடிக்கைகளை மேற்கொள்வார் எனத் தெரிவித்தார். (5-4-299)

# சிறுத்தையின் உடல் மீட்பு



(கொழும்பு)

துப்பாக்கிச் சூட்டில் பலியான சிறுத்தையின் உடல், மஸ்கெலிய தேயிலை தோட்டத்தில் நேற்றுக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# சுங்கத் திணைக்களத்தில் ஸ்கான் இயந்திரம் அறிமுகம்

(கொழும்பு)

சுங்கத் திணைக்களத்தில் இடம்பெறும் மோசடிகளை கண்டறிய புதிதாக ஸ்கான் இயந்திரம் ஒன்றை அறிமுகப்படுத்தவுள்ளதாக சுங்கத் திணைக்களத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

சுங்கத் திணைக்களத்தில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் மோசடிகளைக் குறைப்பதற்காகவே குறித்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என திணைக்களத் தகவல்கள் மேலும் தெரிவித்துள்ளன. (ஜ-4)

# கொரோனாத் தொற்று 3,299 ஆக அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டில் 12 பேர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

வெளிநாடுகளில் இருந்து வந்தவர்களுக்கே தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்து நாடு திரும்பிய ஒருவர், இந்தியாவிலிருந்து நாடு திரும்பிய இருவர், மாலைதீவிலிருந்து திரும்பிய 8 பேர், சவுதி அரேபியாவிலிருந்து நாடு திரும்பிய ஒருவரும் இதில் அடங்குகின்றனர். இதனடிப்படையில், நாட்டில் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களின் எண்ணிக்கை 3,299 ஆக அதிகரித்துள்ளது. (ஜ-4)

# எமது காணிகளை அளவீடு செய்ய அதிகாரமில்லை சுமண ரத்ன தேரரை கைது செய்யுங்கள்

## மட்டு.மக்கள் ஆர்ப்பாட்டம்



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - பன்குடாவெளி தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளை தாக்கிய அம்பிட்டிய சுமண ரத்ன தேரரைக் கைது செய்யுமாறு கோரி ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நேற்று முற்பகல் 10.30 மணியளவில் பன்குடாவெளியில் தொல்பொருள் திணைக்களத்தினால் அடையாளப்படுத்தப்பட்டுள்ள காணிக்கு முன்பாக ஒன்றுதிரண்டு தேரரை கைது செய்யுமாறு தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.


இவ் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட காணி உரிமையாளர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

தாங்கள் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்த காணிகளை புராதன தொல்பொருட்கள் உள்ள இடம் எனக் கோரி நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து 40 பேர்ச் காணியை தொல்பொருள் திணைக்களம் அடைத்து வைத்துள்ளது.

ஆனால் குறித்த 40 பேர்ச் காணியை தவிர ஏனைய வயல் காணிகளில் விவசாயம் செய்யுமாறு எமக்கு அனுமதி வழங்கியுள்ளனர். நாங்கள் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்த உறுதி காணிகள் தொல்பொருள் திணைக்களத்தினால் அபகரிக்கப்பட்டு ஆய்வுகள் நடைபெற்று வரும் நிலையில், இதற்கு எந்த சம்பந்தமும் இல்லாத பிக்கு சட்டத்தை மீறி இந்த பகுதிக்குள் நுழைந்து அங்கு கடமையில் இருந்த அரச அதிகாரிகளைத் தாக்கினார்.

எமது காணிகளை அளவீடு செய்ய பிக்குவிற்கு அதிகாரம் இல்லை. அவர் எமது காணிக்குள் வரக் கூடாது. அவரை உடனடியாக கைது செய்ய வேண்டும். இந்த நாட்டில் தமிழர்களை யாரும் அடிக்கலாம் என்ற நிலை உருவாகியுள்ளது எனத் தெரிவித்தனர். (ஜ-4)





**நாகர்கோவில் மகாவித்தியாலயத்தின் மீது இலங்கை விமானப் படையினரின் விமானங்கள் நடத்திய குண்டுவீச்சு தாக்குதலில் பலியான மாணவர்களின் 25 ஆம் ஆண்டு நினைவு தினம் நேற்று செவ்வாய்க்கிழமை பாடசாலையில் இடம்பெற்றது. தொடர்ந்து உயிரிழந்தவர்களின் உறவினர்கள் மலர் மாலைகளை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.**

**(படங்கள்:- கரணவாய் செய்தியாளர்)**

# திக்கம் வடிசாலையின் அபிவிருத்திப்பணிகள் எதிர்வரும் டிசெம்பரில் நிறைவுபெறும்

(யாழ்ப்பாணம்)

திக்கம் பிரதேசத்தில் அமைந்துள்ள வடிசாலை நிலையத்தின் மீள் உருவாக்கம் பற்றிய கலந்துரையாடல் ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை யாழ். மாவட்ட செயலகத்தின் அபிவிருத்தி ஒருங்கிணைப்பு அதிகார சபையில் பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவரும், யாழ்.மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத் தலைவருமான அங்கஜன் இராமநாதன் தலைமையில் பனை அபிவிருத்தி அதிகார சபையின் பங்கேற்புடன் இடம்பெற்றது.



இக் கலந்துரையாடலில் வடமாகாண பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் கிருஷாந்த பத்திராஜ, யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன், மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன் (காணி), பருத்தித்துறை பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி மற்றும் பனை அபிவிருத்தி சபை உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அதனை தொடர்ந்து திக்கம் பிரதேசத்திலுள்ள வடிசாலை 185.2 மில்லியன் ரூபாய் ஒதுக்கீட்டில் மீள்கட்டுமான பணிகள் இடம்பெற்று கொண்டிருப்பதனை கண்காணிப்பதற்காக அங்கஜன் இராமநாதன் அப்பகுதிக்கு விஜயம் மேற்கொண்டு முன்னேற்றங்கள் பற்றி கேட்டறிந்து கொண்டார்.

கடந்த ஒரு வருட காலமாக இக் கட்டுமானப்பணிகள் முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில் இவ்வருடம் டிசெம்பர் மாதம் பணிகள் நிறைவுபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. (5-4)

## ஆன்மீகச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தின் வாராந்தச் சொற்பொழிவு நாளை மறுதினம் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணியளவில் நடைபெறும். இதில் இளம் சைவப்புலவர் சிவநெறிச் செம்மல் த.மனோஜ்குமார் "ஆறுமுகமான பொருள்" என்னும் தலைப்பில் ஆன்மீகச் சொற்பொழிவாற்றுவார். (5)

## ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் 9ஆவது ஆண்டு விழா எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் முதியோர் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (5)

## 10 லீற்றர் கசிப்புடன் பெண் கைது

(தருமபுரம்)

வட்டக்கச்சி இராமநாதபுரம் பகுதியில் சட்டவிரோத கசிப்பு விற்பனையிலீடுபட்ட குடும்பப் பெண் கைது செய்யப்பட்டுள்ளார். தருமபுரப் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய 10 லீற்றர் கசிப்புடன் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டார். தருமபுரம் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட பெண்ணிடம் விசாரணைகள் மேற்கொண்ட பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டார். (5-4-316)

# வாகன இலக்கத்தகடுகளை பெற்றுக்கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தில் யாழ்.அலுவலகத்திற்கு கடந்த 17 ஆம் திகதி கிடைக்கப்பெற்ற வாகன இலக்கத்தகடுகளின் பட்டியல், யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச செயலகங்களிலும் மாவட்ட செயலகத்திலுள்ள மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திலும் பொதுமக்களின் பார்வைக்காக அறிவிப்புப் பலகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் மாவட்டச் செயலக இணையத்தளத்திலும் பார்வையிடலாம்.

இதற்கமைய, புதிதாக வாகனங்களைப் பதிவு செய்த உரிமையாளர்கள் வாகனப் பதிவுப்புத்தகம், தேசிய அடையாள அட்டை என்பவற்றையும் மாகாணங்களுக்கிடையே வாகன உரிமை மாற்றம் பெற்றவர்கள் மேற் குறித்த இரு ஆவணங்களுடன் பழைய வாகன இலக்கத்தகடுகள் மற்றும் வாகன இலக்கம் பொறித்த ஒட்டும் தாள் **(Sticker)** என்பவற்றையும் யாழ்.மாவட்ட மோட்டார் வாகனப்போக்கு வரத்து அலுவலகத்தில் சமர்ப்பித்து தங்கள் வாகனங்களு க்குரிய இலக்கத்தகடுகளைப் பெற்றுக் கொள்ளுமாறு யாழ். மாவட்ட போக்குவரத்துத் திணைக்கள பிரதி ஆணையாளர் ய.பரந்தாமன் அறிவித்துள்ளார். (5)

# நல்லூர் - நெடுங்கேணி புனித திருத்தல யாத்திரை

(குப்பிழான்)

வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலய வருடாந்தப் பொங்கல் உற்சவத்தை முன்னிட்டு நாட்டில் நிரந்தர அமைதி, சாந்தி, சமாதானம், நல்லிணக்கம், இனங்களுக்கிடையேயான ஒற்றுமை வளரவும், உலகமெல்லாம் அச்சுறுத்தி வரும் கொரோனா நோய் விலகவும் இறையருள் வேண்டி தரிசன யாத்திரை நடைபெறவுள்ளது.


இத்தரிசன யாத்திரை எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை காலை 6.30 மணியளவில் நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்திலிருந்து நெடுங்கேணி வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் வரை இடம்பெறவுள்ளது.

இலங்கை முதலுதவிச் சங்க இந்து சமயத் தொண்டர் சபையின் ஒழுங்கமைப்பில் நல்லூர் தவத்திரு வேலன் சுவாமிகளின் ஆசீர்வாதத்துடன் நடைபெறவுள்ள யாத்திரையில் கலந்து கொள்பவர்கள் வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் சென்று பொங்கல் பொங்கி பூசை, பஜனைகளில் ஈடுபட்டு நேர்த்திகளை நிறைவு செய்து திரும்ப ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மேற்படி தரிசன யாத்திரையில் இணைய விரும்பும் பக்தர்கள் கலாசார உடையணிந்து இறை பக்தியுடன்" கலந்து கொள்ள வேண்டுமென ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இத் தரிசன யாத்திரையில் கலந்து கொள்ள விரும்புவோர் 0779236552 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (5-4-18)

# தன்னிறைவுக் கிராமமாக மாற்ற உதவுங்கள் கமக்கார அமைப்பு கோரிக்கை



(சாவகச்சேரி)

தென் மராட்சி-மறவன் புலவு கிராமத்தை விவசாயத்தில் தன்னிறைவு பெற்ற கிராமமாக மாற்ற அனைவரும் உதவ வேண்டும் என மறவன் புலவு கமக்கார அமைப்பின் உப தலைவர் செ.ஆனந்தரஞ்சன் கோரிக்கை விடுத்துள்ளார்.

அண்மையில் சீலெக்ஸ் காற்றாலை நிறுவனத்தினரால் அமைத்துக் கொடுக்கப்பட்ட கமக்கார அமைப்பின் அலுவலகம் மற்றும் உரக்களஞ்சியத் திறப்பு விழா நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவ்ர் மேலும் தெரிவிக்கையில், 1999 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து உயிரைத் தவிர ஏனைய அனைத்தையும் இழந்து மீண்டும் வந்து குடியமர்ந்துள்ளோம்.

மறவன்புலவு கிராம வீதிகள் ஐம்பது வருட காலமாக புனரமைப்பு இன்றிக் காணப்படுகின்றன.

அத்துடன் மறவன்புலவு கிராமத்தில் விவசாயக் குளங்கள் காணப்படுகின்றன. அவற்றை ஆழமாக்கி புனரமைக்க வேண்டிய தேவைப்பாடு உள்ளது.

அத்துடன் இங்குள்ள வாய்க்கால்களை அகலமாக்கி கொங்கிறீட் வாய்க்காலாக மாற்றிய மைக்க வேண்டும். இதனால் நீரை சேகரித்து கோடை காலத்திலும் பயன்படுத்த முடியும்.

அத்துடன் நெல் விளைச்சலின் பின்னர் சிறுதானிய உற்பத்தியில் சிறந்த விளைச்சலை பெறுவதற்கு கிராம மக்கள் மற்றும் அயல் கிராம மக்கள் கால்நடைகளை கட்டுப்படுத்தி ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்திருந்தார். (5-4-30)

# வீடு புகுந்து தாக்குதல் தந்தை, மகன் காயம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சண்டிலிப்பாய் பகுதியில் நேற்று அதிகாலை வீடொன்றுக்குள் புகுந்த இரண்டு பேர் தந்தை மற்றும் மகன் மீது தாக்குதல் நடத்தி விட்டு தப்பி சென்றுள்ளனர்.

சம்பவத்தில் படுகாயமடைந்த தந்தையும், மகனும் யாழ். போதனா வைத்தியசாலையில் மேலதிக சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மானிப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (5-8)

# சட்டவிரோத செயற்பாடுகளுக்கு விரைவில் தீர்வு - டக்ளஸ்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கடற்பரப்பில் இடம்பெறும் சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளுக்கு விரைவில் தீர்வு பெற்றுக்கொடுக்கப்படும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்றுப் பாராளுமன்றில் உறுதியளித்துள்ளார்.

வடமாகாணத்தில் முன்னெடுக்கப்படும் சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடு உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த போதே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இவ்வாறு குறிப்பிட்டார். (5-8)



# அரசியலமைப்பிற்கு எதிராக எதிரணியினர் நீதிமன்றம் செல்லலாம்

## பிரச்சினையில்லை என்கிறார் வாசு

(கொழும்பு)
எதிர்க்கட்சியினர் அரசியலமைப்புத் திருத்த சட்டமூலத்திற்கு எதிராக நீதிமன்றம் செல்வதில் தமக்குப் பிரச்சினை கிடையாது என நீர்வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைத்த போதே, அவர் இதனைத் தெரிவித்தார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அவர்கள் நீதிமன்றத்துக்கு செல்வது நல்லவிடயம் தான். அத்துடன் 19 ஆவது திருத்தத்தில் காணப்படுகின்ற சில விடயங்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.

குறிப்பாக தகவல் அறியும் சட்டம், ஜனாதிபதியின் பதவிக் காலத்தை ஐந்து வருடமாக மட்டுப்படுத்தல், இரண்டு முறைகள் மாத்திரமே போட்டியிட முடியும் என்ற விடயம் போன்ற 19 இல் காணப்படுகின்ற முக்கிய விடயங்களை நாம் பாதுகாக்க வேண்டும்.

பிரஜாவுரிமை இல்லாத நபர்களுக்கு பாராளுமன்றத்திற்கு பிரவேசிக்கின்ற உரிமை மறுக்கப்படுகின்றமை போன்ற விடயங்களைப் பாதுகாக்க வேண்டும் என்பதே எனது நிலைப்பாடாகும்" என தெரிவித்தார். (ஐ-4)

# பல விபத்துக்களில் ஐவர் உயிரிழப்பு

(கொழும்பு)
நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் ஏற்பட்ட வீதி விபத்துக்களில் 5 பேர் உயிரிழந்துள்ளனர்.

அம்பாந்தோட்டை - அம்பலந்தொட்டை வீதியில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்திற்கு அருகே, காரை தள்ளிச் சென்ற ஒருவர் மீது லொறி மோதியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

விபத்தில் காயமடைந்த நபர் அம்பாந்தோட்டை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரி ழுந்தார்.

இதேவேளை, ஹபராதுவை பொலிஸ் பிரிவில் பொன ஸ்விடாவ, ரூமஸ்ஸல அருகே சாரதியின் கட்டுப்பாட்டிலிருந்து மீறிச் சென்ற ஆட்டோவில்மோதி பெண்ணொருவர் உயிரிழந்தார். மேலும் ஹபரணை - திருகோணமலை பரகஸ் வெவ பிரதேசத்தில் சாரதியின் கட்டுப்பாட்டினை இழந்து ஆட்டோ ஒன்று கவிழ்ந்ததில் 27 வயது டைய நபர் ஒருவர் உயிரிழந்தார்.

இதேவேளை, குருநாகல்- கண்டி வீதியில் மில்லவ பிர தேசத்தில் 46 வயதுடைய ஒருவரும், கொழும்பு - கண்டி வீதியின் யக்கல பிரதேசத்தில் 41 வயதுடைய ஒருவரும் விபத் துக்குள்ளாகி உயிரிழுந்தனர். (ஐ-4)

# அரசியலமைப்பு திருத்தம் தொடர்பில் மக்கள் கருத்தைப் பெறத் தயார்



(கொழும்பு)
19 ஆவது திருத்தத்தை நீக்குவதற்கு மக்களின் கருத்துக் கோரல் வேண்டும் எனில், அதனை ஏற்றுக்கொள்ளத்தயார் என கல்வியமைச்சரான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றின் போது, அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"19 ஆவது திருத்தத்தை துண்டு துண்டாக புறக்கணிப்பதாக நாம் கூறவில்லை.19 ஆவது திருத்தத்தை இந்த நாட்டின் சட்டப் புத்தகத்தில் முழுமையாக நீக்குவதாக நாம் மிகவும் தெளிவாக கூறினோம்.

19 ஆவது திருத்தத்தின் பிரகாரம் அரசியலமைப்புத் திருத்தத்தை நீக்குவதற்கு மக் களின் கருத்துக் கோரல் அவசியம் எனில் அதனை மாத்திரம் நாம் மாற்றப் போவதில்லை.

19 ஆவது திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள அனைத்து விடயங்களையும் நாம் மிகவும் தெளிவாக நீக்கிவிட்டு 20 ஆவது திருத்தத்தை முன் வைப்போம் என்பதை தயக்க மின்றி நாட்டு மக்களுக்கு கூறுகின்றோம்" என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-4)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: ரேவதி 1
கி.பா: 41 செவ் 2 இல்
தகைமை/தொழில்: க.பொ.த.சா/த. நகைக்கடை ஊழியர் மற்றும் உண்டியல்
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண் வெளிநாடு Citizen உள்ள பெண்
தொ.இ: B/11206

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: கேட்டை 2
கி.பா: செவ் 10 இல் உயரம்: 5'4"
தகைமை/தொழில்: க.பொ.த.உ/த. தபால் ஊழியர்
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/11208

பிறப்பு: 1995 கிறிஸ்தவம்
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா: செவ் 12 இல் உயரம்: 5'5"
தகைமை/தொழில்: க.பொ.த.உ/த. தனியார் நிறுவனக் கணக்காளர்
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: B/11210

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: மூலம் 3
கி.பா: 0 செவ் 6 இல் உயரம்: 5'6"
தகைமை/தொழில்: பட்டதாரி பொறியியலாளர் (தனியார்)
எதிர்பார்ப்பு: தகுந்த உத்தியோகம் கொழும்பில் வேலை செய்யும் பெண் விரும்பத்தக்து
தொ.இ: B/11211

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: சித்திரை 4
கி.பா: சூரி.செவ் 5 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: B.Tech (Civil) Engineer
எதிர்பார்ப்பு: பொறியியலாளர் மட்டும்
தொ.இ: G/11224

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை 2
கி.பா: செவ் 2 இல்
தகைமை/தொழில்: பட்டதாரி ஆராய்ச்சி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: B.Sc. பொறியியலாளர்
தொ.இ: G/11231

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: கேட்டை 2
கி.பா: 43 செவ் 4 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: CIMA Audit
எதிர்பார்ப்பு: தகுந்த அரச, தனியார் வங்கி உத்தியோகத்தர்
தொ.இ: G/11237

பிறப்பு: 1994 கிறிஸ்தவம்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:தனியார் கணக்காளர்
எதிர்பார்ப்பு: Accountant, Engineer
தொ.இ: G/11240

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


# மைத்திரியிடம் விசேட வாக்குமூலம்

(கொழும்பு)
முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் முன்னிலையானார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசேட வாக்கு மூலம் ஒன்றை வழங்குவதற்காகவே அவர் குறித்த ஆணைக் குழுவில் முன்னிலையானார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வரும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன் னிலையாகுமாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

# மனித உரிமைகள் ஆணைக்குழுவில் அதிகளவான முறைப்பாடுகள்

(கொழும்பு)
இலங்கை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவிற்கு இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, 2020 ஆம் ஆண்டின் ஆரம்பம் முதல் இதுவரையிலான காலப் பகுதியில் 2 ஆயிரத்து 74 முறைப் பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக குறிப் பிடப்பட்டுள்ளது.

மேலும், குறித்த முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக் கப்பட்டு வருவதாகவும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த முறைப்பாடுகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாடப்பட்டதன் பின்னர் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ஐ-4)

# தடைசெய்யப்பட்ட பொருட்கள் மீட்பு

(கொழும்பு)
இறக்குமதி செய்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ள மற்றும் மட்டுப்படுத்தப் பட்டுள்ள வெளிநாட்டு மதுபானம் உள் ளிட்ட 80 கோடி ரூபாவிற்கு அதிகம் பெறுமதியான பொருட்களை சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

மஞ்சள், வெளிநாட்டு மதுபானம், சீஸ், பெஸ்டா, காய்கறிகள் மற்றும் ஒலிவ் எண்ணெய் உள்ளிட்ட பொருட்களே இவ்வாறு கைப்பற்றப்பட்டதாக சுங்கத் திணைக்களத்தின் ஊடக பேச்சாளர் சுனில் ஜயரத்ன தெரிவித்தார். குறித்த பொருட்கள் பல தடவைகளாக கொண்டு வரப்பட்ட நிலையில், அவற்றில் 10 இலட்சத்து 15 ஆயிரம் கிலோ மஞ்சளும் உள்ளடங்குவதாக சுனில் ஜயரத்ன மேலும் தெரிவித்தார். (ஐ-4)

# நுண்கடன்களில் சிக்குண்ட பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு கூட்டுறவு சங்கங்கள் ஊடாக குறைந்த வட்டியில் கடன்

## கிளி.அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன்

(முறிகண்டி)

**நுண்நிதி கடன்களிலே சிக்குண்டவர்களை வெளியேற்றுவதற்கேற்ற வகையிலே கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாகக் குறைந்த வட்டியில் கடன் பெற்று சுயதொழிலில் முன்னேறிச் செல்வதற்கு ஏற்ற விதத்திலே முன்னெடுக்கப்படவுள்ளது.**




நுண்கடனால் பாதிக்கப்பட்டவர்கள் நுண்கடன் தேவையுடையவர்களின் பிரச்சினைக்குத் தீர்வை எட்டுவது தொடர்பில் அரசாங்கத்தினால் அமைச்சரவையில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளது என கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி கூட்டுறவு சபை மண்டபத்தில் இடம்பெற்ற பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் எதிர்கொள்ளும் சவால்களும் அடைந்த வெற்றிகளும் எனும் தொனிப்பொருளில் விழுது ஆற்றல் மையத்தின் நிழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இன்றைய நிகழ்வில் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பில் எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. அவற்றில் அனைத்தையும் உடனடியாக செய்ய முடியாது. ஆனால் தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் விடயங்களும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

சமூக பாதுகாப்புத் தொடர்பான விடயங்களில் சமூகமட்ட அமைப்புக்கள் பொலிஸாரினுடைய ஒத்துழைப்பு எமக்குத் தேவையாக இருக்கின்றது. அதற்கான செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம்.

காணி, கல்வி, வீடமைப்பு உள்ளிட்ட விடயங்களில் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்ற விடயத்தினை குறிப்பிட்டுள்ளீர்கள். நான் ஏற்கனவே குறிப்பிட்டது போன்று வீடு உள்ளிட்ட விடயங்கள் பெண் தலைமைத்துவ குடும்பங்களை முன்னுரிமைப்படுத்தியே வழங்கப்படுகின்றது.

தொழில் முயற்சியில் ஈடுபட்டுள்ளோருக்கான சந்தை வாய்ப்புக்கள் இல்லை எனவும் குறிப்பாக பனை உற்பத்தி பொருட்களை வேறு இடங்களிலிருந்து குறைந்த விலையில் கொண்டு வரப்பட்டு விற்பனை செய்யப்படுவது தொடர்பிலும் இங்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

உண்மையில் பனை உற்பத்தி தொடர்பான விடயங்களிற்கு பனை அபிவிருத்தி சபை உள்ளது. அதேவேளை கூட்டுறவுச் சங்கங்களும் காணப்படுகின்றன. அவர்களுடன் இணைந்து குறித்த பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.


நுண்கடன் பிரச்சினை தொடர்பிலும் இங்கு கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. இவ்விடயம் தொடர்பில் அண்மையில் மத்திய வங்கி ஆளுநர் கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டு இவ்விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்து சென்றிருக்கின்றார்.

நுண்நிதி கடன்களிலிலே ஈடுபட்டவர்கள், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் புதிதாக கடன்களைப் பெறுவதற்கு தேவையோடு இருப்பவர்கள் போன்றவர்களை இவ்வாறான நிறுவனங்களிற்குள் தள்ளாமல் அவர்களுடைய தேவைகளை எவ்வாறு தீர்க்கலாம் என்பது தொடர்பில் அமைச்சரவையில் தீர்மானம் மேற்கொ ள்ளப்பட்டிருக்கின்றது.

வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் இவ்விதமாக நுண்நிதி கடன்களிலே சிக்குண்டவர்களை வெளியேற்றுவதற்கேற்ற வகையிலே கூட்டுறவு சங்கங்கள் ஊடாக குறைந்த வட்டியில் கடன் பெற்று சுயதொழிலில் முன்னேறிச் செல்வதற்கு ஏற்ற விதத்தில் முன்னெடுக்கப்படவுள்ளது எனவும் அரசாங்க அதிபர் தெரிவித்தார். (5-4-100)

# நின்ற வாகனங்களை வந்த வாகனம் மோதியது

## இருவர் படுகாயம்



(நெளுக்குளம்)

வவுனியா - கண்டி ஏ-9 வீதி பூவயா இராணுவ சோதனைச் சாவடியில் நான்கு வாகனங்கள் மோதியதில் இருவர் காயமடைந்துள்ளனர்.

இவ் விபத்து சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது.

நேற்றுக் காலை மதவாச்சி ஏ-9 வீதி பூவயா பாலம் அருகே நான்கு வாகனங்கள் மோதியதில் இரண்டு பேர் படுகாயமடைந்ததுடன் வாகனங்கள் பலத்த சேதங்களுக்குள்ளாகியுள்ளதாக மதவாச்சி பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியாவை நோக்கி பயணிக்கும் வாகனங்களை பூவயா பாலம் அருகேயுள்ள இராணுவ சோதனைச் சாவடியில் நிறுத்தி சோதனை மேற்கொண்டிருந்த மூன்று வாகனங்கள் மீது லொறி மோதி விப்த்து ஏற்பட்டது.

இராணுவச் சோதனை சாவடியின் முன்பாக லொறி, கப்ரக வாகனம், ஹயஸ் வாகனம் மூன்றும் தொடராக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போது வேகமாக வந்த லொறி ஒன்று மோதியதால் கப்ரக வாகனத்துக்கும் ஹயஸ் வாகனத்திற்கும் பலத்த சேதம் ஏற்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் சாரதியைக் கைது செய்த மதவாச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (5-4-299)

# ஏ-9 வீதியில் விபத்து

## அதிர்ஷ்டவசமாக தப்பிய சாரதி



(யாழ்ப்பாணம்)

பச்சிலைப்பள்ளி - பளைப் பகுதி ஏ-9 வீதியில் டிப்பர் ஒன்று விபத்திற்குள்ளாகியது.

இவ்விபத்து நேற்றுக் காலை 7 மணியளவில் குறித்த வாகனத்தின் பின் சில்லு காற்றுப் போனதால் இந்த அனர்த்தம் ஏற்பட்டது.

விபத்தில் டிப்பர் பலத்த சேதத்திற்கு உள்ளாகியது. எனினும் சாரதியும் அதிர்ஷ்டவசமாகத் தப்பியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (5-8)

# சிறப்பான ஒத்துழைப்புக்கள் கிடைத்ததால் சிறப்பாக பணியாற்ற முடிந்தது

## பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர்

(நெளுக்குளம்)

வன்னிப் பிராந்தியத்தில் நான் கடந்த ஒன்பது மாதங்களாக பிரதிப் பொலிஸ்மா அதிபராகக் கடமையாற்றியுள்ளேன்.

வன்னிப் பிராந்தியத்தை வளப்படுத்துவதற்கு இங்குள்ள பொது அமைப்புக்கள், சிவில் சமூக அமைப்புக்கள் வர்த்தகர்கள், ஊடகங்களின் ஒத்துழைப்புக்கள் மற்றும் முயற்சிகள் மிகவும் சிறப்பாக எனக்குக் கிடைத்துள்ளன.

இதன் காரணமாகவே என்னால் சிறப்பாக கடமையாற்ற முடிந்துள்ளது. நான் வன்னிப் பிராந்தியத்திற்கு சேவையாற்ற வரும்போது மகிழ்வுடன் வந்து கடமையாற்றினேன். அதேபோலவே தற்போது இங்கிருந்து மகிழ்ச்சியுடன் திரும்பிச் செல்கின்றேன்.


நேற்று முன்தினம் வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் தம்மிக்க பிரியந்தவின் பிரியாவிடை நிகழ்வு வன்னிப்பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அலுவலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற போது அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடமையின் அமைப்பின்படி இடமாற்றம் என்பது எந்நேரத்திலும் வரலாம். ஒழுக்கமுள்ள உத்தியோகத்தர்கள் என்ற ரீதியில் அதற்குக் கௌரவமளித்து இடமாற்றத்தைப் பெற்று அந்தப்பிரதேசங்களுக்கு செல்ல வேண்டி நிலை ஏற்பட்டுள்ளது.

உங்களில் சிலர் என்னை இங்கு தொடர்ந்து கடமையாற்றுவதற்கு முயற்சித்தார்கள். இது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கின்றது.

எனக்குக்கிடைக்கின்ற உத்தரவுகளை நான் ஒருபோதும் மாற்ற நினைப்பதில்லை. எனக்குக் கிடைக்கின்ற உத்தரவுகளைச் செயற்படுத்துவது தான் எனது நோக்கம். உங்களுடைய அக்கறைக்கு எனது நன்றிகளைத் தெரிவிப்பதுடன் நாங்கள் ஒரே நாட்டின் மக்கள். நாங்கள் தனிப்பட்ட ரீதியில் இன மதங்களைக் கொண்டாலும் நாங்கள் அனைவரும் இந்நாட்டின் மக்கள். எனது காலத்தில் நான் அனைவரையும் ஒரே ரீதியாகத்தான் எண்ணினேன். உங்களிடமிருந்து எனது கடமைக்காலத்தில் கிடைத்த ஒத்துழைப்பு மிகவும் சிறப்பானது என அவர் மேலும் தெரிவித்தார். பிரியாவிடை நிகழ்வில் பொது அமைப்பினர்கள், வர்த்தகர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (5-4-299)

# உள்ளூராட்சி சபைகளின் நிர்வாகமும் பணிப்பொறுப்புகளும் - ஒரு தொகுப்பு



25

**கலாநிதி க.தவலிங்கம்**
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

- உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் அங்கீகாரத்தினை வர்த்தமானிப் பத்திரிகை மூலம் பிரசித்தப்படுத்தல் (பொருள்கோடல் கட்டளைச் சட்டத்தின் 17 (1) ஆம் வாசகம்)
- ஆளுகைப் பிரதேசத்திலுள்ள மக்களுக்கு அறியப்படுத்துதல் (மாநகர சபை ஆணையாளரின் சுற்றறிக்கையிலுள்ள அறிவுறுத்தல்கள்)
- மதிப்பீடு மேற்கொள்வதற்காக விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளல் (பி.ச 146(1))
- சொத்துக்களின் ஆண்டுப் பெறுமதியை மதிப்பிடல் (பி.ச 140(1))
- வரி வீதத்தைச் (சதவீதம்) சபை தீர்மானித்தல் மற்றும் அதற்கு கௌரவ அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளல் (பி.ச 134(5))
- மதிப்பீட்டுப் பட்டியல் தொடர்பாகப் பகிரங்க விளம்பரமொன்றை மேற்கொள்ளல் (பி.ச 141(1))
- ஆதனவரி விதித்தல் (பி.ச 134(1))
- மதிப்பீட்டினை அறிவித்தல் மற்றும் மாற்றுக் கருத்துக்களை அழைத்தல் (பி.ச 141(3))
- ஆதன வரி சேகரித்தல் (பி.ச 134(6))
- கொடுப்பனவு செலுத்தத் தவறுபவர்களுக்குப் பிடியாணை மற்றும் இறுதி அறிவித்தல் வழங்குதல் (பி.ச 158(1))
- 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 140 (1) ஆம் வாசகம் "புதிய மதிப்பீடொன்றைத் தயாரிப்பதற்குக் குறிப்பிட்ட பிரதேச சபை எல்லைக்குள் காணப்படும் ஒவ்வொரு வீடு, கட்டடம், காணி மற்றும் வசிப்பிடத்தினதும் ஆண்டுப் பெறுமதியானது பிரதான மதிப்பீட்டாளரால் அல்லது பிரதேச சபையினால் நியமிக்கப்படும் நபர் ஒருவரினால் அல்லது நபர்களினால் மதிப்பீடு செய்யப்படும்."

### பிரதேச சபைகளின் கணக்கு முறைமை

மாநகரசபைகள் மற்றும் நகரசபைகள் தொடர்பாக செயற்படுத்தப்படும் விக்கிரமநாயக்க கணக்கு முறைமையின் கீழ் தினசரி, மாதாந்தம் மற்றும் ஆண்டுதோறும் தயாரிக்கப்படும் கணக்கு ஆவணங்கள் மற்றும் அறிக்கைகள் பல அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. அதேசமயம் பிரதேச சபை கணக்குகளின் கீழ் 1989.04.17 ஆம் திகதிய 554/5 இலக்கங்கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக்கமைய குறிப்பிடப்பட்ட பிரதேச சபை நிதி மற்றும் நிர்வாக ஒழுங்கு விதிகளின் கீழ் (Pradeshiya Sabha Financial & Administrative Rules) கீழ் கணக்கு நடவடிக்கைகளுக்கு ஏற்புடைய PS 1 – PS 46 எனப் பெயர் குறிப்பிடப்பட்ட கணக்குப் படிவங்களும் 46 அறிக்கைகளும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

PS 1 – PS 46 வரையிலான ஆவணங்களுள் பிரதேச சபைகளின் இறுதி கணக்குகளைத் தயாரிப்பதற்காக நேரடியாக PS 1 – PS 19 வரையிலான படிவங்கள் மாத்திரம் ஏற்புடையதாகும். அவற்றின் விபரங்களாவன: PS 1 பற்றுச்சீட்டு ; PS2 காசாளரின் நாளாந்தப் பதிவுப் புத்தகம் -வரவுகள் PS3 நாளாந்த பற்றுச்சீட்டு பதிவேடு PS4 நாளாந்தப் பற்றுச்சீட்டு வகுப்பு அட்டவணை; PS5 தொகுப்புக் காசேடு; PS6 மாதாந்த வருமதிகள் கூற்று; PS7 அரசிறை அறவீடு, நிலுவை அறவீடு பற்றிய மாதாந்தக் கூற்று; PS8 சில்லறைக் காசேடு PS9 உப அலுவலக சேர்ப்புக் கணக்குப் பதிவேடு; PS10 பிரதான காசேடு; PS11 கொடுப்பனவுகள் பற்றிய காசுப்புத்தகம்; PS12 வாக்குப் பணங்கள் பதிவேடு; PS13 மாதாந்தத் திரட்டிய செலவினங்கள் பகுப்பாய்வு; PS14 செலவினங்கள் பற்றிய மாதாந்தத் திரட்டிய பொழிப்பு; PS15 மாதாந்தத் திரட்டிய வருமதிகளின் பகுப்பு; PS16 மாதாந்தத் திரட்டிய பெறுகைகளின் பொழிப்பு; PS17 வருமான செலவினக்கணக்கு; PS18 ஐந்தொகைக்கான பதிவுகள்; PS19 வருமானத் தொகுப்புப் பதிவேடு; PS35 கொடுப்பனவு உறுதிச்சீட்டு என்பனவாகும்.

### பிரதேச சபை ஒன்றின் கணக்கு வைத்தல் பற்றி பிரதேச சபை நிதி மற்றும் நிர்வாக ஒழுங்கு விதிகளில் உள்ள ஏற்பாடுகள்

பிரதேச சபையொன்றின் தவிசாளர் உள்ளூர் நிதியத்தின் முறையான கட்டுக்கோப்புக்கும் செலவழிப்புக்கும் தனிப்பட்ட முறையிலும் பணரீதியாகவும் பொறுப்புடையவராதல் வேண்டுமென்பதுடன் சபை உத்தியோகத்தர்களது நிதிக் கடமைகளின் நிறைவேற்றுக்கும் பொறுப்புடையவராதல் வேண்டும். ஆதலால் அவர் தனது பதவியினர்கள் உடனடியாகவும் சரியாகவும் அவர்களின் கடமைகளை நிறைவேற்றுவதனை உறுதிப்படுத்தும் அதிகாரத்தை பிரயோகிக்க வேண்டும். அத்துடன் அதனை நிறைவேற்றும் நோக்கில் தேவைப்படுகின்ற ஒழுக்காற்று நடவடிக்கையை அவர் எடுக்க வேண்டும், அல்லது அத்தகைய நடவடிக்கை எடுப்பதற்கு சபையிடம் வேண்டுகோள் விடுவிக்கவும் வேண்டும். (ஏற்பாடு /ஒழுங்கு விதி 3)

அமைச்சரானவர் அதிகாரமளிக்கப்பெற்ற உத்தியோகத்தர்களைக் கொண்டு எந்தப் பிரதேச சபையினதும் கணக்குகளைத் திடீர் சோதனை செய்ய அலுவலர்களுக்கு அதிகாரமளிக்கலாம். அத்தகைய உத்தியோகத்தர்கள் நியாயமான எல்லா நேரங்களிலும் சபைத் தவிசாளரது கட்டுக்கோப்பின் கீழும் ஏனைய அலுவலர்களினதும் கட்டுக்கோப்பின் கீழுமுள்ள எல்லாப் பதிவேடுகளையும் உறுதிச்சீட்டுக்களையும் சோதனையிடும் உரித்துடையவராதல் வேண்டும். (ஏற்பாடு /ஒழுங்கு விதி 6)

கணக்காய்வாளர் தலைமை அதிபதியும் அவருடைய அலுவலர்களும் நியாயமான எல்லா நேரங்களிலும் கணக்குகளுடன் தொடர்பு கொண்ட எல்லாப் புத்தகங்களையும் பதிவேடுகளையும் திரட்டுக்களையும் சோதனையிட உரித்துடையவர்களாதல் வேண்டும். சபைகளின் அலுவலர் ஒவ்வொருவரும் அத்தகைய ஆவணங்களைச் சோதனையிடுவதற்குரிய வசதிகளை அவர்களுக்கு அளிப்பதோடு அவர்கள் கேட்கும் எல்லாக் கேள்விகளுக்கும் பதிலிறுத்தலும் வேண்டும். (ஏற்பாடு/ஒழுங்கு விதி 7)

காசாளர் அல்லாத எவரும் பணம் பெறுவதற்கு அல்லது கொடுப்பதற்கு அனுமதிக்கப்படமாட்டார். (ஏற்பாடு/ ஒழுங்கு விதி 146)

காசாளர் அரசிறை எழுதுநரால் வழங்கிய பற்றுச்சீட்டுப் படிவம் அல்லது உத்தரவுச் சீட்டுப்படிவம் இன்றி எவரிடமிருந்தும் பணம் பெறுதல் ஆகாது. (ஏற்பாடு /ஒழுங்கு விதி 147)

காசாளர் இதற்குரிய அட்டவணையில் தரப்பட்டுள்ள PS2 என்ற அமைப்பிலான தமது நாளாந்தப் பற்றுச்சீட்டுக்களின் பதிவுச்சுவடி வைத்திருத்தல் வேண்டும். (ஏற்பாடு/ஒழுங்கு விதி 148)

இதற்குரிய அட்டவணையில் தரப்பட்டுள்ள PS4 என்ற அமைப்பிலான நாளாந்த வரவுகளின் வகை பற்றிய பதிவேடு ஒன்று பேணப்படல் வேண்டும். (ஏற்பாடு/ஒழுங்கு விதி 151)

இதற்குரிய அட்டவணையில் தரப்பட்டுள்ள PS6 என்ற அமைப்பிலான வரவுகள் பற்றிய மாதாந்தக் கூற்றொன்று வைக்கப்படல் வேண்டும். (ஏற்பாடு /ஒழுங்கு விதி 152)

இதற்குரிய அட்டவணையில் தரப்பட்டுள்ள PS7 என்ற அமைப்பிலான அரசிறை, அரசிறை நிலுவைகளின் மாதாந்தச் சேகரிப்புக் கூற்றொன்று பிரதேச சபைத் தலைமை அலுவலகத்திலும் ஒவ்வோர் உப அலுவலகத்திலும் வைக்கப்படல் வேண்டும். (ஏற்பாடு/ஒழுங்கு விதி 153)

இதற்குரிய அட்டவணையில் தரப்பட்டுள்ள PS9 என்ற அமைப்பில் எல்லா உப அலுவலகங்களினதும் சேகரிப்புக் கணக்குப் பற்றிய பதிவேடு ஒன்று பிரதேச சபைத் தலைமை அலுவல கத்தில் பேணப்படல் வேண்டும். (ஏற்பாடு/ ஒழுங்கு விதி 154)

இதற்குரிய அட்டவணையில் தரப்பட்டுள்ள PS10 என்ற அமைப்பிலான கொடுப்பனவுக் காசேடு ஒன்று பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் பேணப்படல் வேண்டும். (ஏற்பாடு / ஒழுங்கு விதி 155)

இதற்குரிய அட்டவணையில் தரப்பட்டுள்ள PS11 என்ற அமைப்பிலான கொடுப்பனவுக் காசேடு ஒன்று பிரதேச சபைத் தலைமை அலுவலகத்தில் பேணப்படல் வேண்டும். (ஏற்பாடு / ஒழுங்கு விதி 156)

இதற்குரிய அட்டவணையில் தரப்பட்டுள்ள PS13 என்ற அமைப்பிலான திரட்டிய செலவினம் பற்றிய மாதாந்தப் பகுப்பாய்வு ஒன்று பிரதேச சபைத் தலைமை அலுவலகத்தில் வைக்கப்படல் வேண்டும். (ஏற்பாடு /ஒழுங்கு விதி 157)

இதற்குரிய அட்டவணையில் தரப்பட்டுள்ள PS14 என்ற அமைப்பிலான திரட்டிய செலவினம் பற்றிய மாதாந்தத் தொகுப்பு ஒன்று பிரதேச சபைத் தலைமை அலுவலகத்தில் வைக்கப்படல் வேண்டும். (ஏற்பாடு/ஒழுங்கு விதி 158)

இதற்குரிய அட்டவணையில் தரப்பட்டுள்ள PS15 என்ற அமைப்பிலான திரட்டிய வரவுகள் பற்றிய மாதாந்தத் தொகுப்பு ஒன்று பிரதேச சபைத் தலைமை அலுவலகத்தில் வைக்கப்படல் வேண்டும். (ஏற்பாடு/ஒழுங்கு விதி 159)

இதற்குரிய அட்டவணையில் தரப்பட்டுள்ள PS16 என்ற படிவத்திற்கிணங்க திரட்டிய வரவுகள் பற்றிய மாதாந்தத் தொகுப்பு ஒன்று பிரதேச சபைத் தலைமை அலுவலகத்தில் வைக்கப்படல் வேண்டும். (ஏற்பாடு/ஒழுங்கு விதி 160)

இதற்குரிய அட்டவணையில் தரப்பட்டுள்ள PS17 என்ற படிவத்திற்கிணங்க அரசிறை, செலவினக் கணக்கு ஒன்று பிரதேச சபைத் தலைமை அலுவலகத்தில் பேணப்படல் வேண்டும். (ஏற்பாடு/ஒழுங்கு விதி 161)

இதற்குரிய அட்டவணையில் தரப்பட்டுள்ள PS18 என்ற படிவ அமைப்பிற்கு ஏற்ப ஒவ்வோர் ஆண்டு முடிவிலும், பிரதேச சபையினால் ஐந்தொகை ஒன்று தயாரிக்கப்படல் வேண்டும். (ஏற்பாடு/ ஒழுங்கு விதி 162)

இதற்குரிய அட்டவணையில் தரப்பட்டுள்ள PS19 என்ற அமைப்பிலான தொகுப்பு அரசிறைப் பதிவேடு ஒன்று பிரதேச சபைத் தலைமை அலுவலகத்தில் பேணப்படல் வேண்டும். (ஏற்பாடு/ஒழுங்கு விதி 163)

செயலாளர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஓர் உத்தியோகத்தர் இசைவான கணக்கீட்டு ஆவணங்களை நாள்தோறும் சரி பார்த்து அதிலுள்ள பதிவுகளின் செம்மை பற்றி முதலெழுத்து ஒப்பமிடல் வேண்டும். (ஏற்பாடு/ஒழுங்கு விதி 164)

பிரதான பேரேடு ஒன்று பராமரிக்கப்பட்டு, அதில் பின்வரும் கணக்குகள் திறக்கப்படல் வேண்டும். அரசிறை, செலவினம், முற்பணங்கள், வைப்புக்கள், கடன்கள், நிலையான வைப்புக்கள் அத்துடன் அவசியமானவை எனக் காணப்படும் ஏதேனும் மற்றைய கணக்குகளும் (ஏற்பாடு/ஒழுங்கு விதி 165)

பிரதான பேரேட்டில் பதிதற் பொருட்டு குறிப்புப் புத்தகம் ஒன்று வைக்கப்படுதல் வேண்டும். (ஏற்பாடு/ஒழுங்கு விதி 166)

(தொடரும்...)

## இராசிபலன்

23.09.2020
புரட்டாதி 07, புதன்கிழமை
சப்தமி பின்னிரவு 1.48 மணிவரை
கேட்டை பின்னிரவு 12.40 மணிவரை
சுபநேரம் 4.32-6.02 மணிவரை
இராகுகாலம் 12.02-1.32 மணிவரை
சந்திராஷ்டமம் - பரணி, கார்த்திகை வளவன்


மேஷம்

உடல் நலனில் கவனம் தேவை, விரயங்கள் மேலோங்கும் நாள், மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், எடுத்த காரியங்களில் சிறு தடங்கல் ஏற்படலாம்.


ரிஷபம்

குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும் நாள், கடன் தொல்லைகள் குறையும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம்.


மிதுனம்

வியாபார விருத்தி ஏற்படும் நாள், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், உற்சாகத்துடன் பணி புரிவீர்கள், நன்மைகள் நடைபெறும் நாள்.


கடகம்

தொழிலில் புதிய முதலீடுகளைச் செய்யும் எண்ணம் உருவாகும், மற்றவர்கள் நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும்.


சிம்மம்

சுப செய்திகள் வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் சந்திப்பில் பெருமையடைவீர்கள், பெற்றோர் வழியில் அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.


கன்னி

உயர்வான சிந்தனைகள் மனதில் தோன்றும், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், உறவினர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வழிபாடு குதூகலம் தரும்.


துலாம்

பக்குவமாக நடந்து பாராட்டு பெறுவீர்கள், சேமிப்பு உயரும் நாள், புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம், தொழில் மேன்மையுண்டு.


விருச்சிகம்

குடும்பத்தில் சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரலாம், உறவினர் பகை அகலும், எண்ணங்கள் எளிதில் நிறைவேறலாம், கற்பனை மிகுதியான நாள்.


தனுசு

கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும், சுபகாரியச் செலவுகளில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.


மகரம்

வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்வீர்கள், இலாபகரமான நாள், பலரது அன்பிற்கும் பாத்திரமாவீர்கள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும் நாள்.


கும்பம்

அன்பு நண்பர்களின் ஆதரவு கிடைக்கும், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்டபடி நிறைவேறும் வாய்ப்புண்டு.


மீனம்

திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், எதிர்பார்ப்புகள் நிறைவேறும் நாள், கடுமையான எதிர்ப்புகள் கூட திடீரென சாதகமாகிவிடும், புதிய முயற்சிகள் கைகூடும்.

உன் உடலை அன்பால் மட்டுமே "அடக்கி" ஆள முடியும்

# பட்டாசு தொழிற்சாலையில் தீ ஒருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

கொழும்பை அண்மித்த புறநகர் பகுதியான கட்டான பகுதியிலுள்ள பட்டாசு தொழிற்சாலை ஒன்றில் ஏற்பட்ட வெடிப்பு சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் பட்டாசுத் தொழிற்சாலை திடீரென தீப்பிடித்து எரிந்ததில் அங்கு கடமையாற்றிய பாதுகாவலர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த நபர் 65 வயது மதிக்கத்தக்கவர் எனவும் இச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஜ-4)

# ஜப்பானில் கோப்பிக்கு மவுசு

## கோப்பிக் கிராமங்கள் அமைக்கப்படும் என்கிறார் பந்துல

(கொழும்பு)

**ஜப்பானில் இலங்கைக் கோப்பிக்கு அதிக கிராக்கி இருப்பதாகவும் நுவரெலியா மாவட்டத்தில் கோப்பி வளரும் கிராமங்கள் அமைக்கப்படும் எனவும் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.**





நுவரெலியா போன்ற மலைப்பகுதிகளில் பயிரிடப்படும் இந்த வகை கோப்பி இன்னும் ஏற்றுமதியிலிருந்து அதிக வருமானத்தை ஈட்டுகிறது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த வகைக் கோப்பி மீது ஜப்பானின் வலுவான ஆர்வம் ஏனைய நாடுகளிலும் பிரபலப்படுத்தப்படலாம் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

கோப்பி விவசாயிகளுக்கு சாத்தியமான அனைத்து உதவிகளையும் வழங்கத் தயாராக இருப்பதாகவும் கோப்பித் தோட்டங்கள் வளமாகிவிட்டால் ஏற்றுமதி வருவாய் மூன்று முதல் நான்கு மடங்கு அதிகரிக்கும் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, தேயிலைக்கு இதுவரை புகழ் பெற்ற நம் நாடு விரைவில் கோப்பிக்கும் உலகப்புகழ் பெறும் என்று அமைச்சர் பந்துல குணவர்தன நம்பிக்கை வெளியிட்டார். (ஜ-4)

# அதாவுல்லாவின் ஆடையால் பாராளுமன்றில் குழப்பம்



(கொழும்பு)

அரச தரப்புப் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம். அதாவுல்லா அணிந்திருந்த உடை குறித்து நேற்றுப் பாராளுமன்றத்தில் ஆட்சேபனைகள் எழுப்பப்பட்டன.

அதாவுல்லாவை பாராளுமன்றத்திலிருந்து நீக்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

எவ்வாறாயினும் உடையில் எந்தப் பிரச்சினையும் இல்லை என்று பாராளுமன்ற செயலகம் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தனவிற்கு அறிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# போலி செய்திகளை வெளியிடுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

போலியான செய்திகளை வெளியிடுவதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பில் அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளது.

இணையத்தளங்கள் மற்றும் சமூக ஊடகங்கள் வழியாக போலியான செய்திகள் பரப்பப்படுவதாக முறைப்பாடுகள் முன் வைக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் இதற்கு எதிராக நடவடிக்கைகளை எடுக்கும் நோக்கில் புதிய சட்ட திட்டங்களை வகுப்பது தொடர்பில் நீதியமைச்சு கவனம் செலுத்தியுள்ளது.

போலியான தகவல்களுக்கு எதிரான சட்டங்கள் தற்போது காணப்படுகின்ற போதிலும் மறுசீரமைக்கப்பட்ட சட்டமூலம் நீதியமைச்சர் அலி சப்ரியினால் நேற்று முன்தினம் அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் போலியான செய்திகளை வெளியிடுவதற்கு எதிராக எதிர்காலத்தில் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# வடமாகாண பாடசாலைகளில் இரண்டாம் தேசிய மொழியின் (சிங்களம் - விருப்புப் பாடம்) வளர்ச்சிப் போக்கு



(நேற்றைய தொடர்ச்சி...)

அட்டவணை 04

| | | |
|---|---|---|
| | யா/வட்டு இந்து கல்லூரி | 1 |
| | யா/அருணோதயாக் கல்லூரி | 1 |
| வடமராட்சி | யா/ஹாட்லி கல்லூரி | 1 |
| | யா/மெதடிஸ்ற் மகளிர் உயர் தரப்பாடசாலை | 1 |
| தென்மராட்சி | யா/றிபேர்க் கல்லூரி | 1 |
| | யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி | 1 |
| | யா/மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம் | 1 |
| | யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம் | 1 |
| வவுனியாவடக்கு | வ/ஓமந்தை மத்திய கல்லூரி | 1 |
| வவுனியாதெற்கு | வ/வவுனியா விபுலானந்தா கல்லூரி | 1 |
| | வ/பெரிய கோமரசங்குளம் | 1 |
| | வ/வவுனியா C.C.T.M.S | 1 |
| | வ/வவுனியா சிவப்பிரகாசம் மகளிர் கல்லூரி | 1 |
| | வ/மூன்று முறிப்பு G.T.M.S | 1 |
| | வ/திருஞான சம்பந்தர் வித்தியாலயம் | 1 |
| | வ/சிறீநாகராஜா வித்தியாலயம் | 1 |
| | வ/செட்டிக்குளம் மகா வித்தியாலயம் | 1 |
| | வ/அல்-ஹாமியா மகா வித்தியாலயம் | 1 |

இப்பாடசாலைகளுக்குத் தேவையான வழிகாட்டல்களைச் செய்ய சில வலயங்களில் ஆசிரிய ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். விபரம் பின்வருமாறு. (அட்டவணை 05)

அட்டவணை 05

| வலயம் | ஆசிரிய ஆலோசகர் |
|---|---|
| யாழ்ப்பாணம் | 1 |
| வலிகாமம் | 1 |
| வடமராட்சி | 1 |
| முல்லைத்தீவு | 1 |
| வவுனியாவடக்கு | 1 |

இவர்களுக்கு போதிய மொழித் தேர்ச்சி உண்டு. அதேநேரத்தில் இவர்களுக்கான தேவை கல்வித் துறைக்கு அப்பால் அதிகம் உண்டு. அதனால் வலயங்கள் இவர்களை அண்மித்த கண்காணிப்பின் கீழ் வைத்து பாடசாலை ஆசிரியர்கள் பயன் பெறும் வகையில் இவர்களை வழிப்படுத்த வேண்டும்.

2005 ஆம் ஆண்டில் இருந்து இலங்கையின் பல பகுதிகளிலும் இரண்டாம் தேசிய மொழி சிங்களம் தொடர்பான விழிப்புணர்வுச் செயலமர்வுகள் நடத்தப்பட்டன.

2009 ஆம் ஆண்டு அளவில் வடமாகாணத்தில் இச்சிங்கள மொழியை போதிக்க 6 வலயங்களில் இருந்து 60 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு வளவாளருக்கும் ஆசிரியர்களுக்குமான பயிற்சிகள் வழங்கப்பட்டன.

2016 ஆம் ஆண்டிலிருந்து வடமாகாணத்தில் உள்ள அனைத்து இடைநிலை பாடசாலைகளும் இம்மொழியை கற்பிக்க வேண்டும் என்ற முடிவு எடுக்கப்பட்டது.

அதற்கமைவாக ஆசிரியர் வளம் உள்ள பாடசாலைகளில் இப்பாடத்தினை கற்பிப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டன. பல பாடசாலைகள் இப்பாடத்தினை சிறப்புற நடத்தி வந்தன.

ஆசிரியர் இடமாற்றங்கள் முகாமைத்துவத்தில் இருக்கும் சிலரது அசமந்தப் போக்குகள் போன்றவைகளால் இப்பாடத்தினை கற்பிப்பதில் பல பின்னடைவுகளைச் சந்திக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

எனினும் சில வலயக் கல்விப் பணிப்பாளர்கள், பல அதிபர்கள், ஆசிரியர்கள் இதற்கு போதிய ஆதரவை வழங்கினார்கள். மாகாணக் கல்வி அமைச்சும் மாகாணக் கல்வித் திணைக்களமும் ஆதரவான போக்கை வழங்கி வந்தன.

ஆரம்பத்தில் 60 ஆசிரிய வளவாளர்கள் வடமாகாணத்தில் இருந்தனர். ஆனால் தற்பொழுது அவர்கள் சிதறுண்டுள்ளனர். மாகாணக் கல்வி அமைச்சும் இரு முறை நிரந்தர ஆசிரியர்களை நியமிப்பதற்காக விளம்பரம் செய்தது. ஆனால் போதிய அளவானோர் கிடைக்கவில்லை. இரண்டாம் தேசிய மொழி சிங்களத்தை கற்பிப்பதற்கு இந்த மாகாணத்தில் வசிப்பவர்களிடம் இருந்தே நியமிக்கப்பட வேண்டும்.

இந்நாட்டின் சகோதர மொழியான ஒன்றை மாணவர்கள் கற்பதன் ஊடாக எதிர்காலத்தில் அவர்கள் ஓர் ஆரோக்கிய நிலையைப் பெறுவார்கள்.

எந்த விடயத்தையும் தூர நின்று சந்தேகமாகப் பார்க்கின்ற ஒரு நிலை மாறி உண்மைத் தன்மையை அறிய வேண்டுமானால் சகோதர மொழியான இரண்டாம் தேசிய மொழி சிங்களத்தைக் கற்பதனால் மாணவர்கள் பயனடைவர். போகும் வழியெல்லாம் அவர்கள் சிறப்படைவர்.

வவுனியா மாவட்டத்தில் கிட்டத்தட்ட 24 சிங்கள மொழி மூலப் பாடசாலைகள் உள்ளன. இரண்டாம் தேசிய மொழி தமிழை கற்பிக்க பெரும்பாலான பாடசாலைகளில் ஆசிரியர்களும் உள்ளனர். அதனால் பெரும்பாலான மாணவர்களுக்குத் தமிழ் தெரியும். அவர்களின் கலாசார பின்னணியும் சற்று மாறுபட்டது. சிங்கள மொழி பேசுகின்ற ஆசிரியர்களில் சிலருக்குத் தமிழும் நன்கு தெரியும்.

ஆசிரியர்கள் இடையே கலப்புத் திருமணங்களும் நடைபெற்றுள்ளன. மடுக்கந்த தேசிய பாடசாலையில் வெசாக் விழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் அப்பாடசாலை மாணவர்களும் வவுனியா மாவட்டத்தில் உள்ள தமிழ்ப் பாடசாலைகளின் மாணவர்களும் கலந்துகொண்டிருந்தனர். இந்த விழாவிற்கு மதத்தலைவர்கள், கிராமத்தில் உள்ள பெரியோர்கள் அயல் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

அந்த விழாவின் நிகழ்வுகளைத் தமிழிலிருந்து சிங்களத்திற்கும் சிங்களத்தில் இருந்து தமிழிற்கும் மொழி பெயர்த்தவர்கள் க.பொ.த.உயர்தரம் கற்றுக் கொண்டிருந்த சிங்கள மொழி மூல மாணவர்களே.

இந்நிகழ்வு அப்பாடசாலைக்குப் பெருமை தேடிக் கொடுத்தது. இப்பொழுதும் எம் கண் முன்னே அந்தக் காட்சிகள்தான் வருகின்றன.

பல்லின மக்கள் வாழும் இந்த நாட்டிலே இருக்கின்ற மொழிகளை அனைத்து மாணவர்களும் அறிவதன் ஊடாக பல பிரச்சினைகளில் இருந்து விடுபட வாய்ப்புகள் உள்ளன. அனைவரும் இணைந்து வாழ கற்றுக் கொள்வர். அரசியல் இதற்கான உந்து சக்தியைக் கொடுக்க வேண்டும். சிறுபான்மை மொழியைப் பெரும்பான்மை மாணவர்கள் ஏன் கற்க வேண்டும் என யோசிப்பது தவறானதாகும். அதனால் இலங்கையில் உள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் இந்த பாடத்தைக் கற்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். சிங்கள மாணவர்கள் இரண்டாம் தேசிய மொழி தமிழையும் தமிழ் மாணவர்கள் இரண்டாம் தேசிய மொழி சிங்களத்தையும் கற்க வேண்டும். அதற்கமைவாக சிங்கள, தமிழ் ஆசிரியர்கள் நாடு பூராகாவும் நியமிக்கப்பட வேண்டும். தற்பொழுது ஆறு கட்டாய பாடங்கள் உள்ளன. இந்தக் கட்டாய பாடங்களுடன் இரண்டாம் தேசிய மொழி சிங்களம், தமிழ் ஆகியவற்றை ஏழாவது கட்டாய பாடமாகச் சேர்த்தால் அனைத்து மாணவர்களும் பயனடைவார்கள். அத்துடன் நாட்டின் ஆரோக்கியமான சமூக வளர்ச்சிக்கும் அது வித்திடும் என்பதனை மனதில் கொண்டு கல்வி கொள்கை வகுப்பாளர்கள் கவனத்திலெடுத்து தொழிற்படுதல் சாலவும் சிறந்தது எனக் கருதப்படுகின்றது.

(முற்றும்)

**வீ.இராசையா**
ஓய்வுநிலை மாகாணக் கல்விப்பணிப்பாளர், வடமாகாணம்.

# பாரதம்

## ஒரேநாளில் ஒரு இலட்சத்திற்கும் அதிகமானோர் குணமடைந்தனர்


(டில்லி)

இந்தியாவில் ஒரே நாளில் ஒரு இலட்சத்திற்கும் அதிகமானோர் கொரோனாவிலிருந்து குணமடைந்துள்ளார்கள். நேற்றைய நிலவரப்படி இந்தியாவில் கடந்த 24 மணி நேரத்தில் 75,083 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அதே சமயம் 1,053 பேர் கொரோனா தொற்று பாதிப்பால் உயிரிழந்துள்ளனர்.

இந்தியாவில் இதுவரை கொரோனா பாதித்தவர்கள் எண்ணிக்கை 55 இலட்சத்தை தாண்டி, 55 இலட்சத்து 62 ஆயிரத்து 664 ஆக உள்ளது. தொற்று பாதிப்புடன் 9 இலட்சத்து 75 ஆயிரத்து 861 பேர் சிகிச்சை பெற்று வரும் நிலையில், 44 இலட்சத்து 97 ஆயிரத்து 868 பேர் தொற்றில் இருந்து குணமடைந்துள்ளனர்.

கொரோனா பாதிப்பால் இந்தியாவில் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 88 ஆயிரத்து 935 பேர் உயிரிழந்துள்ளனர். நேற்று ஒரே நாளில் 1,01,468 பேர் குணமடைந்ததால் தற்போது சிகிச்சை பெற்று வருபவர்களின் எண்ணிக்கை 10 இலட்சத்திற்கு கீழ் குறைந்துள்ளது. இந்த தகவல்களை மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

## போராளிக் குழுத்தலைவர் தொடர்பில் தகவல் தருவோர்க்கு சன்மானம்




(போலோடா)

கொலம்பியாவில் அரசுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்து வரும் தேசிய விடுதலை இராணுவம் எனும் போராளிக் குழுவின் தலைவர் வில்வர் வில்லேகாஸ் பலோமினோ குறித்து தகவல் தெரிவிப்பவர்களுக்கு ஐந்து மில்லியன் அமெரிக்க டொலர் வழங்கப்படும் என்று அமெரிக்க அரசு அறிவித்துள்ளது. (2)

## 2024இல் நிலவிற்கு விண்வெளி வீரர்கள்

### - நாசா திட்டம் -

(வோஷிங்டன்)

2024ஆம் ஆண்டு நிலவுக்கு மீண்டும் விண்வெளி வீரர்களை அனுப்ப நாசா திட்டமிட்டு இருக்கிறது. இதற்காக 3 வெவ்வேறு திட்டங்களை வகுத்து வருகிறது. நிலவுக்கு அமெரிக்கா கடந்த 1969ஆம் ஆண்டு மனிதனை அனுப்பியது.

நிலவில் முதன் முதலில் கால் வைத்த முதல் நபர் என்ற பெருமையை நீல் ஆம்ஸ்ட்ரோங் பெற்றார்.

அப்பலோ விண்கலம் மூலம் சென்று நீல் ஆம்ஸ்ட்ரோங் நிலவில் காலடி வைத்து 50ஆவது ஆண்டு நிறைவு விழாவை கடந்த ஆண்டு ஜூலை 10ஆம் திகதி நாசா கொண்டாடியது.

இந்த நிலையில் நிலவுக்கு மீண்டும் விண்வெளி வீரர்களை அனுப்ப நாசா திட்டமிட்டு இருக்கிறது. இதற்காக 3 வெவ்வேறு திட்டங்களை வகுத்து வருகிறது. 2 விண்வெளி வீரர்களை அனுப்ப முடிவு செய்துள்ள நாசா அவர்களில் ஒரு பெண் விண்வெளி வீராங்கனை நிலவுக்கு விண்வெளி வீரர்களை அனுப்பும் திட்டத்துக்கு 28 பில்லியன் டொலர் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த தொகை 2021-25ஆம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் உள்ளடக்கியதாக இருக்கும். வருகிற 2024ஆம் ஆண்டு விண்வெளி வீரர்களை நிலவுக்கு அனுப்ப திட்டமிடப்பட்டு இருக்கிறது. (2)

## இங்கிலாந்தில் கொரோ

## அத்தியாவசிய பொரு

(லண்டன்)

**கொரோனா 2வது அலை ஊரடங்கு அச்சத்தால் அ பொருட்கள் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் ஏற்பட்டு கட்டுப்பாடுகளால் மீண்டும் அத்தியாவசியப் பொருட்களு என்ற அச்சம் இங்கிலாந்து மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.**

பல்பொருள் அங்காடிகளில் குவியும் மக்கள் அத்தியாவசியப் பொருட்களை வாங்கிக் குவிப்பதால் பல கடைகளில் ஷெல்ப்கள் காலியாக இருக்கின்றன. பல்பொருள் அங்காடிகள் தங்களிடம் போதுமான




தமிழினப் படுகொலைக்கு நீதி கோரி, அனைத்துலக சுயாதீன விசாரணையை வலியுறுத் ள்ள ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் 45 ஆவது கூட்டத்தொடர் நடைபெற்று வரும்

## 2100ஆம் ஆண்டிற்குள் உ

### விஞ்ஞானிகள் எச்சரிக்கை

(நியூயோர்க்)

கிறின்லாந்து மற்றும் அண்டார்டிகாவில் பனிக்கட்டிகள் உருகி 2100ஆம் ஆண்டுக்குள் உலக கடல் மட்டம் 38 சென்ரி மீற்றருக்கும் அதிகமான அளவுக்கு உயரும் என்று நாசா தலைமையிலான ஆய்வில் தெரிய வந்துள்ளது.

பசுமை இல்லா வாயுக்கள் வெளியேற்றம் தொடர்ந்தால் கிறீன்லாந்து மற்றும் அண்டார்டிகாவில் பனிக்கட்டிகள் உருகி 2100 ஆம் ஆண்டுக்குள் உலக கடல் மட்டம் 38 சென்ரிமீற்றருக்கும் அதிகமான அளவுக்கு உயரும் என்று நாசா தலைமையிலான ஆய்வில் தெரிய வந்துள்ளது. (2)

## கொரோனாவிற்கு எதிரான

## உலக சுகாதார அமைப்பு பா

(மொஸ்கோ)

கொரோனா தடுப்பூசியை உருவாக்கியதற்காக குறிப்பாக 'ஸ்புட்னிக் வி' தடுப்பூசிக்காக ரஷ்யாவுக்கு உலக சுகாதார அமைப்பு மிகுந்த பாராட்டு தெரிவிக்கிறது.

கொரோனாவுக்கு எதிராக பல்வேறு நாடுகள் தடுப்பூசி தயாரிப்பில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன. இதில் முதல் நாடாக ரஷ்யா கடந்த மாத தொடக்கத்திலேயே தடுப்பூசி ஒன்றை பதிவு செய்து கொண்டுள்ளது.

ரஷ்யாவின் தயாரிப்பான 'ஸ்புட்னிக் வி' தடுப்பூசிக்கு 20-க்கும் மேற்பட்ட நாடுகள் 100 கோடிக்கும் அதிகமான டோஸ்க




ளுக்கு ஒப்பந்தம் போட்டுள்ளன. இதைப்போல இந்த தடுப்பூசியை அதிக




# ...ானா இரண்டாவது அலை
# ...நட்களுக்கு தட்டுப்பாடு

**...ல் இங்கிலாந்தில் மீண்டும் ...ட்டு உள்ளது. கொரோனா ...களுக்கு தட்டுப்பாடு ஏற்படும் ...ு.**

...ன.
...ன

கையிருப்பு இருப்பதாக அறிவித்தாலும், வார இறுதியில் கடைகளுக்கு சென்ற பிரித்தானியர்கள் ஷெல்ப்கள் காலியாக இருப்பதைக் கண்டு அதிர்ச்சியுற்றனர்.

இதனால் முன்போலவே மீண்டும் பொருட்களை வாங்கிக் குவிக்கவேண்டும் என்ற அச்சம் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது தெளிவாகவே தெரியவந்துள்ளது. இன்னொரு பக்கம், சில பிரபல பல்பொருள் அங்காடிகள், கடைகளுக்கு கூடும் மக்கள் கூட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்காக பாதுகாவலர்களை நிறுத்த இருப்பதாக அறிவித்துள்ளன.

இதற்கிடையில், கடைகளுக்கு சென்று பொருட்கள் இல்லாமல் ஏமாற்றமுற்ற மக்கள், சமூக ஊடகங்களில் காலியாக இருக்கும் ஷெல்ப்களை படம்பிடித்து பதிவேற்றம் செய்து வருகிறார்கள். (2)




...றுத்தி சுவிஸ் ஜெனீவா நகரத்தில் மாபெரும் போராட்டமொன்று நடத்தப்பட்டது. ஜெனீவாவிலு ...ரும் நிலையில், நேற்று முன்தினம் திங்கட்கிழமை இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

# ஏழைகள் பசியாற நூதன ஏற்பாடு

(அறந்தாங்கி)

அறந்தாங்கியில் ஏழைகள் பசியாற நூதன ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதாவது இதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட இடத்தில் இருப்பவர்கள் உணவு வைக்கலாம், இல்லாதவர்கள் உணவை சாப்பிடலாம்.

அறந்தாங்கி பகுதியை சேர்ந்த சமூக ஆர்வலர்கள் இணைந்து பசியுடன் வாடுபவர்கள் பசியாற நூதன ஏற்பாடு செய்துள்ளனர்.

அதன்படி அறந்தாங்கி நகராட்சி தாலுகா அலுவலக வீதியில் பொது இடத்தில் கண்ணாடிப் பெட்டி வைத்துள்ளனர். இந்தப் பெட்டியில் காலை, மதியம், இரவு ஆகிய 3 வேளைகளும் உணவு வைக்கப்பட்டு இருக்கும்.

பசியுடன் இருப்பவர்கள் யார் வேண்டுமானாலும் இந்த உணவை எடுத்து சாப்பிடலாம். இதற்கு பணம் எதுவும் வசூலிக்கப்படமாட்டாது.

அதேபோல் வசதி படைத்தவர்கள் உட்பட உணவு தானம் செய்ய விரும்புபவர்கள் ஹோட்டலில் வாங்கியோ அல்லது வீட்டில் சமையல் செய்து கொண்டு வந்தோ உணவு வைக்கலாம்.

இதனை இல்லாதவர்கள் எடுத்து சாப்பிடும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.




அதேநேரத்தில் கண்ணாடி பெட்டியில் உள்ள உணவை ஆய்வு செய்ய சமூக ஆர்வலர்கள் சார்பில் குழுவும் அமைக்கப்பட்டுள்ளது. இந்த குழு பழைய சாப்பாடு வைக்காத வகையில் கண்காணிப்பார்கள். இந்த கண்ணாடி பெட்டியை நேற்று சமூக ஆர்வலர்கள் வைத்தனர்.

சமூக ஆர்வலர்களின் இந்த செயலை பொதுமக்கள் பாராட்டினர். மேலும் இந்த கண்ணாடி பெட்டியில் பிறந்த நாள் கொண்டாடுபவர்கள், ஏதாவது சுப நிகழ்ச்சிகள் நடத்துபவர்கள் உணவு வைப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (2)

# ...உயரும் கடல்மட்டம்

...ம்



...00
...டம்
...ன
...லை
...ுள்
...(2)

# ...ா ரஷ்ய தடுப்பூசிக்கு ...பாராட்டு

...ன.
...திக

அளவில் தயாரிக்க 5 நாடுகளும் ஒப்பந்தம் போட்டுள்ளன.

இந்த நிலையில் ரஷ்ய சுகாதார அமைச்சர் மிகெயில் முராஸ்கோவை உலக சுகாதார அமைப்பின் ஐரோப்பிய பிராந்திய தலைவர் ஹன்ஸ் குளுஜ் சந்தித்து பேசினார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறுகையில், 'கொரோனா தடுப்பூசியை உருவாக்கியதற்காக குறிப்பாக 'ஸ்புட்னிக் வி' தடுப்பூசிக்காக ரஷ்யாவுக்கு உலக சுகாதார அமைப்பு மிகுந்த பாராட்டு தெரிவிக்கிறது. பாதுகாப்பு மற்றும் வலிமையான ஒரு தடுப்பூசியை உருவாக்கியதற்காக ரஷ்யாவுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்' என்று தெரிவித்தார். (2)

# தாஸ்மானியா தீவில் சிக்கி 90 திமிங்கிலங்கள் உயிரிழப்பு



(மெல்பேர்ன்)

அவுஸ்திரேலியாவின் தாஸ்மானியா **(Tasmania)** கடற்கரையில் சிக்கிய 270 திமிங்கிலங்களில் 90 திமிங்கிலங்கள் உயிரிழந்துள்ளன.

சிக்கியுள்ளவற்றில் மேலும் பல உயிரிழக்கக்கூடுமென அஞ்சப்படுகின்றது.

தாஸ்மானியா தீவின் மேற்குக் கடற்பகுதியில் திமிங்கிலங்கள் சிக்கிக்கொண்டிருப்பது நேற்று முன்தினம் கண்டறியப்பட்டது.

இந்தநிலையில் எஞ்சியுள்ள திமிங்கிலங்களின் உயிரைக் காப்பாற்றுவதற்கான முயற்சிகளில் கடல்வாழ் உயிரினங்கள் தொடர்பான நிபுணர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இதற்காக தந்திரமான நடவடிக்கைகள் சில மேற்கொள்ளப்படுவதுடன், அதற்கு சில தினங்கள் எடுக்குமெனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

திமிங்கிலங்கள் கரைக்கு வந்ததற்கான காரணம் என்ன வென்பது இதுவரை தெரியவில்லையென அறிவிக்கப்பட்டுள்ளது. (2)

# அங்கொட லொக்காவின் மனைவியின் வங்கிக்கணக்கில் 2 கோடி ரூபா பணம்



(கொழும்பு)

இந்தியாவுக்குத் தப்பியோடிய நிலையில், அங்கு மாரடைப்பால் உயிரிழந்ததாக நம்பப்படும் பிரபல பாதாள உலகத் தலைவன் அங்கொட லொக்கா எனும் மத்துமகே லசந்த பெரேராவின் மனைவியின் வங்கிக் கணக்கொன்றில் உள்ள 2 கோடி ரூபாவுக்கும் அதிக பணத் தொகை தொடர்பில் விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

எம்பிலிபிட்டிய பகுதியைச் சேர்ந்த நிசங்சலா என்பவரின் வங்கிக் கணக்குத் தொடர்பிலேயே இவ்வாறு விசேட விசாரணைகளை தாம் ஆரம்பித்துள்ளதாக, நுகேகொடை வலய குற்றத் தடுப்புப் பிரிவினர் நேற்று முன்தினம் கொழும்பு நீதவான் நீதிமன்றுக்கு விசேட முதல் தகவல் அறிக்கை ஊடாக அறிவித்துள்ளனர்.

இதேவேளை அங்கொட லொக்காவின் மிக நெருங்கிய சகாவும் தற்போது டுபாய்க்குத் தப்பியோடியுள்ள பலித்த பிரியங்கர என்பவரின் வங்கிக் கணக்குகள் தொடர்பிலும் விசேட விசாரணைகள் இடம்பெறுவதாக விசாரணையாளர்கள் நீதிமன்றுக்கு அறிவித்துள்ளனர்.

அத்துடன் தற்போது கைது செய்யப்பட்டுள்ள "சிம்பு சமன்" எனப்படும் நபரின் வங்கிக் கணக்குத் தொடர்பிலும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நீதிமன்றுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

பாதாள உலக நடவடிக்கைகள் மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகள் ஊடாக சம்பாதிக்கப்பட்ட கறுப்புப் பணம் தொடர்பில் இடம்பெறும் விசேட விசாரணைகளில் ஒரு பகுதியாக மேற்படி விசாரணைகள் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-7)

## முதன் முறையாக உப பொலிஸ்மா அதிபராக
# பெண் பொலிஸ் அதிகாரி நியமனம்

**(கொழும்பு)**

**பொலிஸ் திணைக்களத்தின் சிறுவர் மற்றும் மகளிர் பணியகப் பிரிவைச் சேர்ந்த பொலிஸ் அத்தியட்சகரான பிம்சானி ஜாசிங்கராச்சி உப பொலிஸ்மா அதிபராக சிபாரிசு செய்யப்பட்டுள்ளார்.**




இலங்கை பொலிஸ் துறை வரலாற்றில் முதன் முறையாக பெண் பொலிஸ் அதிகாரியொருவர் உப பொலிஸ்மா அதிபராகப் பதவி உயர்வு பெற்றுள்ளமை இதுவே முதல் முறை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1997 இல் பொலிஸ் இன்ஸ்பெக்டராக தனது சேவையைத் தொடர்ந்த பிம்சானி ஜாசிங்கராச்சி, பின்னர் 2017 பொலிஸ் அத்தியட்சகர் பதவிக்கு தரமுயர்த்தப்பட்டிருந்தார்.

இந்நிலையில் அவர் தற்போது உப பொலிஸ்மா அதிபராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார். (2-7)

## ஹெலியில் வந்த உடல் உறுப்புகள்

(கொழும்பு)

இலங்கை வரலாற்றில் முதல் முறையாக இரண்டு கல்லீரல்களையும் இரண்டு சிறுநீரகங்களையும் பொலநறுவையிலிருந்து கொழும்புக்கு ஹெலிகொப்டர் மூலம் வெற்றிகரமாக கொண்டுவரப்பட்டுள்ளது.

இலங்கை விமானப்படைக்கும் சுகாதார அமைச்சிற்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி Bell 412 ஹெலிகொப்டர் மூலம் குறித்த உடல் உறுப்புக்கள் கொண்டு வரப்பட்டுள்ளன.

பொலநறுவை மாவட்ட பொது வைத்தியசாலையில் இருந்து கொழும்புத் தேசிய வைத்தியசாலைக்கு வெற்றிகரமாகக் கொண்டு வரப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த முக்கிய உறுப்புகளைக் கொண்டு செல்வது தொடர்பாக நேரத்தைச் சேமிப்பதன் மூலம் பொதுமக்களுக்கு நன்மை பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த நடவடிக்கை இலங்கை விமானப்படையின் வெற்றிகளில் ஒன்றாகக் கருதப்படுகின்றது. (ஜ-4)

# வானிலிருந்து விழுந்த வலை

(சிலாபம்)

சிலாபம் - ஆதாஹறநாகார பிரதேசத்தில் வானில் இருந்து மீன் வலை ஒன்று விழுந்ததாக சிலாபம் நகர சபையின் தலைவர் துஷான் அபேசேகர தெரிவித்துள்ளார்.

இந்த மீன் வலை கீழே விழும் போது அடை மழை பெய்துள்ளது. 250 அடி நீளமும் 300 கிலோ கிராம் நிறையும் கொண்ட இந்த வலை வானில் இருந்து விழும் காட்சியைப் பலரும் அவதானித்துள்ளனர்.

இதனைப் பார்த்த பலரும் வலையை கொண்டு செல்ல முயற்சித்த போதிலும், நகர சபையின் தவிசாளர் அதற்கு இடமளிக்காமல் சபையின் தலைவருக்கு அறிவித்துள்ளார். இந்த வலையின் சிறப்பு என்னவென்றால், முடிச்சுகள் இல்லாதது மற்றும் கிழிந்தவுடன் மீண்டும் தைக்க இயலாது எனத் தெரிவிக்கப்படுகின்றது. (2-7)

# இன்று ஒரு தகவல்

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

## கடவுள் பயம்!

"தெய்வத்துக்குப் பயந்து நடந்துகொள்ளுங்கள் என்று சொல்கிறார்களே...அந்தத் தெய்வ பயம் தேவைதானா?" என்று ஒரு பெரியவரைப் பார்த்துக் கேட்டார் ஒருத்தர்.

"கடவுளைப் பயத்தின் மூலமாக அடையவே முடியாது" என்று பதில் சொன்னார் அந்தப் பெரியவர். (ரஜனீஷ்) அதற்கு உதாரணமாக ஒரு கதையையும் சொன்னார்.

ஒரு யாசகன் ஒரு அநாதைச் சிறுவனை வளர்த்துக் கொண்டிருந்தானாம். அவர்கள் இருந்த குடிசைக்குப் பக்கத்தில் ஒரு சுடுகாடு இருந்ததாம். இந்தச் சின்னப் பையன் இரவு வேளையில் அந்தச் சுடுகாடு பக்கமாக போய் ஏதாவது குறும்பு செய்யாமல் இருக்க வேண்டுமே என்று நினைத்தான் அந்த யாசகன். அதற்காக அந்தப் பையனிடம் சொன்னான்.

"இதோ பாரப்பா...இரவு வேளையில் அந்தச் சுடுகாட்டுப் பக்கம் போனால்...அங்கே இருக்கும் பேய்கள் உன்னைப் பிடித்துத் தின்றுவிடும்" என்று சொல்லி பயமுறுத்தி வைத்தான்.

அந்தப் பையன் படித்து வாலிபனாக வளர்ந்து விட்டான். இருந்தாலும் இன்னும் அவனுக்கு பேய் பற்றிய பயம் ஓயவில்லை. ஒருநாள் யாசகன் அந்தப் பையனை ஒரு வேலை காரணமாக வெளியூருக்கு அனுப்ப வேண்டியிருந்தது...அவன் அந்தச் சுடுகாட்டைத் தாண்டிப் போயாக வேண்டும்... இரவு நேரம்.. இவன் பயந்து நடுங்க ஆரம்பித்து விட்டான். இப்போது என்ன செய்வது என்று யோசித்தான் அந்த யாசகன்.

ஒரு தாயத்தை எடுத்தான். அந்தப் பையனுடைய கையில் அதைக் கட்டினான். கட்டிவிட்டு..."இனிமேல் அந்தப் பேய்கள் உன்னை ஒன்றும் செய்ய முடியாது... கடவுள் அந்தப் பேய்களிடம் இருந்து உன்னைக் காப்பாற்றுவார்..." என்றான். இப்போது அந்தப் பையனுக்கு தைரியம் வந்தது.

துணிச்சலாகத் திரும்பிப் போய் விட்டான். அப்படிப் போகும் போது யோசித்தான். "இப்போது...நாங்கள்...பேய்களைப் பார்த்து பயப்படுகிறோம்...இந்தப் பேய்கள் கடவுளைப் பார்த்துப் பயப்படுகிறது என்றால் அந்தக் கடவுள் எவ்வளவு பெரிய பேயாக இருக்க வேண்டும்?" இப்படி நினைக்க ஆரம்பித்தான். உடனே பேய் பயத்தை விட கடவுள் பயம் அதிகமாகப் போச்சு. அதே பயம்...கடவுளின் தரகர்கள் மாதிரி நடிக்கும் போலி மனிதர்கள் மேலேயும் ஏற்பட்டுப் போச்சு. பாவம் அந்தப் பையன். இரவிலே பேய்க்காக பயந்தான். பகலில் மகா பேயான கடவுளுக்காகப் பயந்தான். போலிச் சாமியார்களைப் பார்த்தும் பயப்பட ஆரம்பித்து விட்டான்.

இப்போது தான் அந்த யாசகன் விபரீதத்தை உணர்ந்தான். அந்தப் பையன் கையில் கட்டிய தாயத்தைக் கழற்றி அவன் முன்னாலேயே அடுப்பில் வீசினான். அன்றைக்கு இரவே அவனை அழைத்துக்கொண்டு அந்த காட்டுக்குப் போனான். அங்கே பேய் பிசாசு எதுவும் இல்லை என்பதை சுட்டிக் காட்டினான். எதற்காகப் பேயைப்பற்றிச் சொன்னேன்? எதற்காக தாயத்துக் கட்டி விட்டேன் என்னும் உண்மையை விபரமாகச் சொன்னான். அந்த இளைஞனுக்கு இப்போது மனதில் ஒரு தெளிவு உண்டாகியது.

அவன் மனதுக்குள்ளே இருந்த பேய், பிசாசு எல்லாம் போய்விட்டது...பயத்தினாலே உருவான போலிக் கடவுளும் "போயிட்டு வருகிறேன்" என்று சொல்லிவிட்டு போய்விட்டார்.

மனிதனுக்கு "தான்" என்னும் எண்ணம் இருக்கிறது பாருங்கள்... அதனாலே உருவாகும் துன்பங்கள்...கவலைகள்... பாதுகாப்பற்ற நிலை...மரண பயம்...இதிலிருந்து எல்லாம் தப்புவதற்குக் கடவுளே கதி என்னும் சரணாகதி நிலையை அவன் உருவாக்கிக் கொள்கிறான் என்றார் அந்தப் பெரியவர்.

இது ஒரு பக்கம் இருக்கட்டும். இந்தக் காலத்தில் பேய்... பிசாசு எல்லாம் மிகவும் சர்வ சாதாரணமான விடயமாகப் போச்சு. அன்றைக்கு ஒருத்தரைப் பார்த்து,

"ஏன் சேர்? நீங்கள் பேயைக் கண்ணால் பார்த்திருக்கிறீர்களா?" என்று கேட்டேன். அவர் மெதுவாக என்னிடம் வந்து...

"என்ன அப்படிக் கேட்கிறீர்கள்...நான் அது கூடத்தானே முப்பது வருடமாக குடும்பம் நடத்திக்கொண்டு வருகிறேன்" என்று சொல்லிவிட்டு அலட்டிக்காமல் போகிறார்.

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

## ஆவரசும், பொன்னாவரசும்

ஆவரசு
Botanical Name - Cassia auriculata -
Family - Fabaceae.

பொன்னாவரசு
Botanical Name - Cassia sophera
Family - Fabaceae

ஆவரசு ஓர் புதர்ப்பொருஞ் செடியாகும். இலையடிக் காம்பின் இரு புறத்திலும் அகன்ற காது வடிவான பசிய இலையடிச் செதில்கள் காணப்படும். கைவிடப்பட்ட தரிசு நிலங்களில் இதன் பரம்பல் அதிகம்.

இதன் இலை, காய், பூ, பட்டை, வேர், பிசின் ஆகிய அனைத்தும் மருத்துவக் குணங்கள் மிகுந்தவை. ஆவரசின் இலைகளும் குளிர்ச்சியுண்டாக்கும் தன்மையிருப்பதால் புராதன மக்கள் வெயிலில் வெகுதூரம் நடப்பவர்கள் இவ்விலைகளைத் தலையின் மீது பரப்பி அதன்மீது தலைப்பாகையிட்டு நடக்க வெப்பம் தாக்காது.

இதன் பூக்களை சமைத்துச் சாப்பிடுவதால் உடல் வெப்பம் தணியும். ஆவாரம் பூக்கள் நீரிழிவு, வறட்சி, வியர்வை நாற்றம் ஆகியவற்றை நீக்கி உடம்பிற்கு பொற்சாயலை கொடுக்கும்.

"தங்கம் எனவே சடத்திற்கு காந்திதரும்
மங்காத நீரை வறட்சி களை - அங்கத்தாம்
மாலைக் கற்றாழை மணத்தை அகற்றிவிடும்
பூவைச்சேர் ஆவாரம்பூ"

விரிந்த பூ இதழ்களை நிறையச் சேகரித்து மஞ்சள் துணியில் உலர்த்தி தேயிலைப் பொடியாகவும் பயன்படுத்தலாம். நீரிழிவைக் கட்டுப்படுத்தலாம்.


அத்துடன் குடலையும் சுத்தமாகவைத்திருக்கும். உடலுக்கு குளிர்ச்சியைக் கொடுக்கும்.

### ஆவாரம் பூ கூட்டு

தோல் வியாதிகளுக்கு சிறந்தது.

நீரிழிவு நோயாளிகளும் பயன்படுத்தலாம்.

ஆவாரம் பூக்களைச் சேகரித்து பூ இதழ்களை மட்டும் சேகரித்து நன்கு கழுவி வைத்துக்கொள்ள வேண்டும். மண் சட்டியில் பாசிப்பயறை நீர் விட்டு அளவான உப்பும் சின்ன வெங்காயமும் அரிந்து போட்டு மூடி வேகவிடவும். பாசிப்பருப்பு நன்கு வெந்ததும் பூக்களைப் போட்டு மஞ்சள் தூளும் போட்டு வேகவிடவும். கறிவேப்பிலை, செத்தல், கடுகு, பெருஞ்சீரகம், சின்னவெங்காயம், மிளகாய்த்தூள் சிறிது போட்டு தாளித்து சேர்க்கவும். சிறிது பின்பும் வேகவிட்டு ஆவாரம் பூ கூட்டு தயாரித்து பயன்படுத்த சிறந்த மேற்கூறிய பயன்களைக் கொடுக்கும். அத்துடன் எமது சீதோஷ்ண நிலைக்கு ஏற்ற உணவாகும்.




பெண்களுக்கு ஏற்படும் வெள்ளை சாய்தல் நோயிற்கும் சிறந்தது.

ஆவாரம் பூக்கள், பச்சைப் பயறு இரண்டையும் சேர்த்து அரைத்து நமைச்சல் உள்ள இடத்தில் தேய்த்து குளித்து வந்தால் நமைச்சல் குணமாகும்.

துவரம் பருப்புடன் ஆவாரம் பூக்களின் இதழ்களைச் சேர்த்து சமைத்து சாப்பிட்டு வந்தாலும் மலக்கட்டு நீங்கும்.

ஆவாரம் பூ, நாவல்விதை, சிறுகுறிஞ்சா ஒவ்வொன்றும் சம அளவு எடுத்து உலர்த்தி பொடித்து 1-2 கிராம் காலை, மாலை வெந்நீரில் உட்கொண்டு வர இரத்தத்தில் சீனியின் அளவு கட்டுப்படுவதுடன் சிறுநீர் அடிக்கடி கழிதல் போன்றவை குணமாகும்.

ஆவரசின் பிசினை சேகரித்து உலர்த்தி பொடி செய்து தினமும் 2 கிராம் அளவிற்கு சாப்பிட்டு வந்தால் உடற்சூடு தணியும். நீரிழிவு நோயும் கட்டுப்படும்.

ஆவாரம் வேர், பட்டை, கொழுந்து ஆகியவற்றை சம அளவு எடுத்து பொடிசெய்து பனைவெல்லத்துடன் சேர்த்து சாப்பிட்டு வந்தால் மாறாத தோல் நோய்கள் படிப்படியாக குறையும்.

ஆவாரை இலை, பூ, காய், பட்டை, வேர், இலை ஒரே நிறையாக எடுத்து சிறுக வெட்டி அரிந்து 4 மடங்கு நீர்விட்டு 1/4 பங்காகச் சுண்டக்காய்ச்சி 60 மில்லி காலை, மாலை அருந்த நீரிழிவு குணமாகும்.

அல்லது ஆவாரை இலை, பூ, காய், பட்டை, வேர் இலைகளை ஒரே நிறையாக எடுத்து உலர்த்தி அரவல்நொருவலாக இடித்து தேயிலைப் பொடிபோல் செய்து 8 கிராம் பொடிக்கு 200 மில்லி வெந்நீரில் போட்டு 15 நிமிடங்கள் ஊறவிட்டு தேநீர் போல் அருந்திவர நீரிழிவு நோய் குணமாகும்.

ஆவாரம் பட்டையை சிறு சிறு துண்டாக்கி குடிநீர் தயாரித்து வாய் கொப்பளித்துவர வாய்த்துர்நாற்றம், வாய்ப்புண் நீங்கும்.




ஆவாரம்பட்டை, வேர்க்கொம்பு இரண்டையும் சம அளவு எடுத்து 200 மில்லி நீரில் போட்டு காய்ச்சி ஆறவைத்து தினமும் இரு வேளை குடித்து வந்தால் கை, கால் வீக்கம் குணமாகும்.

பொன்னாவரசும் பெருஞ் செடி வகையைத்தான் சேர்ந்தது. இலைகள் நீள்வட்ட அல்லது வேலுருவானதாக இருக்கும். ஆனால் பூக்கள் மஞ்சள் நிறமாக இருக்கும்.

இதன் இலைகளை துவையல் செய்து சாதத்துடன் சேர்த்து உண்ண உடலில் உண்டாகும் வெப்பம் தணியும், இலகுவில் மலம் கழியும்.

பொன்னாவரசு இலையும் இரத்தத்தில் சீனியின் அளவை கட்டுப்படுத்தும்.

பொன்னாவரசு இலையை அம்மியில் வைத்து நன்கு அரைத்து கறிமஞ்சள் சேர்த்து மீண்டும் நன்கு அரைத்து சிரங்கு உள்ள உடத்தில் கனமாகப்பூசி 15 நிமிட நேரம் ஊறவைத்து சிரங்குள்ள இடத்திலும் ஏனைய இடங்களிலும் தேய்த்து நன்கு குளித்து ஈரம் உலர்ந்த பின்பு சிரங்குள்ள இடத்தில் தேங்காய் எண்ணெய் தடவிவர சிரங்குகள் ஆறும்.

இதன் இலைகளை பழச்சாறு விட்டரைத்து வட்டக்கடிக்குப் பூசலாம்.

காமாலை நோய்க்கு இதனுடன் இதன் இலைகளை ஒரு கைப்பிடியளவு எடுத்து 50 மில்லி நீரில் 15-20 நிமிட நேரம் ஊறவைத்து காலையில் எடுக்கலாம்.

வட்டக்கடிக்கு இதன் இலைச் சாறிற்கு பதில் இதன் வேரை எலுமிச்சம்பழச்சாறு விட்டு அரைத்தும் பூசலாம்.

பொன்னாவரைக் கீரையை அடிக்கடி சமைத்துச் சாப்பிட்டு வந்தால் உடலில் அதிக வியர்வை உண்டாகி மேலும் மலம் மற்றும் சிறுநீர் வழியாக உடலில் உள்ள அதிகப்படியாக நீர் வெளியேறி உடற்பருமன் குறையும்.

பொன்னாவரசு இலைகளுடன் மஞ்சள் சேர்த்து அரைத்து உடலில் பூசிக்குளித்தால் சொறி, சிரங்கு, தோல் பாதிப்புக்கள் மறையும்.

பொன்னாவரசுக் கீரை விதைகளை பசும்பால் சேர்த்து அரைத்து ஒரு கிராம் அளவு குழந்தைகளுக்கு கொடுத்து வந்தால் கக்குவான் இருமல் நீங்கும்.

### பொன்னாவரை இலை அடை

ஒரு கப் பொன்னாவரசு இலை, அரைக்கப் சிவத்தப் பச்சரிசி, பாசிப்பயறு 1/2 கப், உப்பு, தேங்காய்ப்பூ, இலையுடன் பச்சரிசி, பாசிப்பயறு இவற்றை சேர்த்து அரைத்து அரித்து எடுத்து தேங்காய்ப்பூ, உப்பு சேர்த்துக் குழைத்து அடையாகத் தட்டி நல்லெண்ணெய் அல்லது நெய்யில் பொரித்து சாப்பிட்டு வர உடலின் நோயெதிர்ப்பு சக்தி அதிகரிப்பதுடன் மலம் நன்கு கழியும். நீரிழிவு நோயாளிகள் மேற்படி அடையைத் தேங்காய்ப்பூ சேர்க்காமல் பயன்படுத்தலாம்.

### பொன்னாவரை சூப்

- பொன்னாவரை இலை 4 கைப்பிடி
- வெங்காயம் -1/4 கப்
- தக்காளி-2
- பெருஞ்சீரகம், சீரகம்-தேவையானளவு
- துவரம்பருப்பு- 50 கிராம்
- இலவங்கப்பட்டை- ஒரு துண்டு
- இஞ்சி- ஒரு துண்டு
- உள்ளி- 5 பல்
- மல்லி-25 கிராம்
- உப்பு- தேவையானளவு
- மிளகு-5

மல்லியை நன்கு அரைத்து பெருஞ்சீரகத்தையும் சேர்த்து பொன்னாவரை இலைகளை கழுவி அரிந்து நீரில் வேகவிடவும். அதில் அரைத்த விழுது, உப்பு, வெங்காயம் அரைவாசி சேர்த்து, துவரம் பருப்பையும் வேகவைத்து கடைந்து வேக வைத்து வெந்த பொன்னாவரை இலையில் சேர்க்கவும்.

வாணலியை அடுப் பில் வைத்து சிறிது நெய் சேர் த்து அதில் சீரகம், இலவங் கப்பட்டை போட்டு வெடித்துச் சிவந்ததும் இஞ்சி, உள்ளி அரைத்து விழுதாகப் போட்டு தக்காளி, மிகுதியாக வெங்காயம் போட்டு கிளறி சூப்பை ஊற்றி கிளறிவிடவும். தேவையானால் மிளகுத்தூள் சிறிதளவு சேர்க்கவும். கலக்கி ஆற விட்டபின் சூப்பாகப் பருகலாம்.

உடற்சூடு, உடல்வலி ஆகியவை நீங்கி மலம் நன்கு கழிவதுடன் நாட்பட்ட தோல் நோய் உள்ளவர்க்கும் நீரிழிவு நோயாளர்களுக்கும் சிறந்த சூப் வகையாகும்.

# வெள்ளிக்கிழமைகளில் தேசிய உடை

(கொழும்பு)

**ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் தேசிய உடை அணிந்து சேவைக்கு சமுகமளிக்குமாறு இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர அரச ஊழியர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.**

பன்னல பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அணியப்பட வேண்டிய ஆடை தொடர்பான விதிமுறைகள் எதிர்காலத்தில் அறிவிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது சட்டம் இல்லை எனவும் தேசிய கைத் தொழிலை ஊக்குவிக்க தேசிய ஆக்கங்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பற்றிக் ஆடைகளை அரச ஊழியர்கள் முதல் பாராளுமன்ற உறுப்பினர்கள் வரை அனைவர் மத்தியில் பிரபலப்படுத்தவும் அமைச்சு திட்டமிட்டுள்ளது.

பற்றிக் ஆடை இறக்குமதியை நிறுத்தி உள்ளூர் பற்றிக் உற்பத்திகளை ஊக்குவிக்கவும்



நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தெரிவித்தார். (2-7)

# கண்டியிலுள்ள கட்டடங்களை ஆராய விசேட குழு

(கொழும்பு)

கண்டி நகரிலுள்ள கட்டடங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, பொறியிலாளர்கள் 10 பேரை உள்ளடக்கி இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளதாக மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, குறித்த அறிக்கை இரண்டுவார காலத்துக்குள் தன்னிடம் ஒப்படைக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில், முறையற்ற விதத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டடங்கள் தொடர்பில், கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே குறிப்பிட்டுள்ளார்

கண்டி - பூவெலிகட பகுதியில், ஐந்து மாடிக் கட்டடமொன்று கடந்த ஞாயிற்றுக் கிழமை இடிந்து வீழ்ந்ததில் ஒன்றரை



மாதக் குழந்தை உள்ளிட்ட மூன்று பேர் உயிரிழந்தனர்.

இந்த நிலையிலேயே, கண்டி நகரிலுள்ள கட்டடங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

மேலும், அடித்தளம் உரிய முறையில் இணைக்கப்படாமையே, கண்டியில் குறித்த கட்டடம் இடிந்து விழுந்தமைக்கு முக்கிய காரணமாகும் என தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-7)

# அனைத்து தரப்பினரையும் உள்ளடக்க தவறுவது அரசியலமைப்பின் எதிர்கால தோல்விக்குரிய செயல்

## கரு சுட்டிக்காட்டு

(கொழும்பு)

அரசியலமைப்புத் திருத்தங்களின் உள்ளடக்கங்களைத் தயாரிக்கும் போது அதுகுறித்த கலந்துரையாடல்களில் அனைத்து தரப்பினரையும் உள்ளடக்குவதற்குத் தவறுவது அரசியலமைப்பின் எதிர்காலத் தோல்விக்கு வழிவகுப்பதுடன் அதனை உருவாக்கியவர்களையே அது பிரதிநிதித்துவப் படுத்தும் என முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரிய சுட்டிக் காட்டினார்.

முன்மொழியப்பட்டிருக்கும் அரசியலமைப்பிற்கான 20 வது திருத்தத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு அரசாங்கம் அவசரம் காண்பிக்கக்கூடாது என்றும், முதலில் அந்த யோசனை விரிவான கலந்துரையாடலுக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்றும் கரு ஜயசூரிய தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றார்.

அதுமட்டுமன்றி 19ஆவது திருத்தத்தின் ஊடாக அறிமுகப் படுத்தப்பட்ட ஜனநாயகக் கட்டமைப்புக்கள் 20 வது திருத்தத்தின் மூலம் நீக்கப்படுவது குறித்தும் அவர் விசனம் வெளியிட்டிருந்தார்.



இந்நிலையில் இதுகுறித்து அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ள பதிவொன்றில் அரசியலமைப்புத் திருத்தங்களின் உருவாக்கம் என்பது அதனுடன் தொடர்புடைய தரப்பினர் மத்தியில் பொறுமையையும் பணிவையும் உயர்ந்தளவில் கொண்டிருக்க வேண்டிய மிகவும் கடினமானதொரு கலந்தாராய்வு செயன்முறையாகும்.

அதுமாத்திரமன்றி அரசியலமைப்புத் திருத்தங்களின் உள்ளடக்கங்களைத் தயாரிக்கும் போது அதனை முன்னிறுத்திய கலந்துரையாடல்களில் அனைத்து தரப்பினரையும் உள்ளடக்குவதற்குத் தவறுவது அரசியலமைப்பின் எதிர் காலத்தோல்விக்கு வழிவகுப்பதுடன் அதனை உருவாக்கியவர்களையே அது பிரதிநிதித்துவப்படுத்துகின்றது என தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்பிற்கான 20 வது திருத்தத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு அரசாங்கம் காண்பித்துவருகின்ற அவசரம் ஆச்சரியம் அளிப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஜ-4)

# துப்பாக்கி அனுமதிப்பத்திரங்களை புதுப்பிக்க முடியும்

(கொழும்பு)

2021 ஆம் ஆண்டிற்கான துப்பாக்கி அனுமதிப்பத்திரங்களை புதுப்பிக்கும் நடவடிக்கை அடுத்த மாதம், முதலாம் திகதி முதல் முன்னெடுக்கப்படும் என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி, துப்பாக்கிகளுக்கான அனுமதிப்பத்திரங்களை வைத்துள்ள நபர்கள் மற்றும் நிறுவனங்கள், எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி முதல், டிசெம்பர் 31 ஆம் திகதி வரை தமது அனுமதிப் பத்திரங்களை புதுப்பிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த காலப்பகுதியின் பின்னர், துப்பாக்கி அனுமதிப் பத்திரங்கள் அடுத்த ஆண்டுக்காக புதுப்பிக்கப்பட மாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், செல்லுபடியான அனுமதிப்பத்திரம் இன்றி துப்பாக்கிகளை வைத்துக் கொள்கின்றமை, தண்டனைக்குரிய குற்றமாகும் என பாதுகாப்பு அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. (2-7)

# நல்லாட்சி கால நிதிமுறைகேடுகள் தொடர்பில் பல முறைப்பாடுகள்

(கொழும்பு)

நல்லாட்சி அரச காலத்தில் அரச வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களில் இடம்பெற்ற முறைகேடுகள் தொடர்பில் நூற்றுக்கும் அதிகமான முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அது தொடர்பில் ஆராய நியமிக்கப்பட்ட குழுவில் நூற்றுக்கும் அதிகமான முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன என்று அது தொடர்பில் ஆராய்வதற்காகப் பிரதமரால் நியமிக்கப்பட்ட குழு தெரிவித்துள்ளது.

குறித்த அரச வங்கிகள்,அதனுடன் தொடர்புடைய தொழிற்சங்கள் மற்றும் பொதுமக்களால் இந்த முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன ,என்று நிதி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுவதால் முறைப்பாடுகளை ஏற்கும் இறுதித் திகதி எதிர்வரும் 30 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

முறைப்பாடுகளைப் பரிசீலித்த பின்னர் குற்றம் சுமத்தப்பட்டுள்ள தரப்பினரை அழைத்து வாக்குமூலம் பெறப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-7)

# அரசியலமைப்பு திருத்த விவகாரம்

# மக்களின் கருத்துக்கோரல் வேண்டும்; வலியுறுத்தி நீதிமன்றை நாடவுள்ளோம்

(கொழும்பு)

**அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பில் மக்களின் கருத்துக் கோரல் வேண்டும் என வலியுறுத்தி நீதிமன்றத்தை நாடவுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.**



எதிர்க்கட்சி அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றின் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மக்களின் இறைமைக்காகவே நாட்டின் அரசியலமைப்புத் தயாரிக்கப்பட வேண்டும். அவ்வாறின்றி குடும்பமொன்றுக்காகவும் பரம்பரையொன்றின் தேவைக்காகவும் தயாரிக்க முடியாது.

19 ஆவது திருத்தத்தின் ஊடாக மக்களுக்கு இறைமை கிடைத்தது. மக்களின் இறைமை பலப்படுத்தப்பட்டது. ஆனால் 20 ஆவது திருத்தத்தின் ஊடாக மக்களின் இறைமை கனவாகியுள்ளது.

அவ்வாறு மக்களின் இறைமையை கனவு ஆக்குகின்ற அரசியலமைப்பு திருத்தமொன்றுக்கு மக்களின் கருத்துக் கோரல் வேண்டும்.

அரசியலமைப்புத் திருத்த வரைவு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதும் இது தொடர்பில் ஆட்சேபனைகள் அல்லது கருத்துக்களை முன்வைப்பதற்கு காலஅவகாசம் உள்ளது.

இந்த நிலையில் குறித்த காலப்பகுதியில் மக்களின் கருத்துக் கோரல் வேண்டும் என்பதை வலியுறுத்தி நாம் நீதிமன்றத்தை நாடவுள்ளோம் என அவர் தெரிவித்தார். (ஜ-4)

## கைதி தப்பியோட்டம்

(கொழும்பு)

மாதம்பே பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவர் நேற்று முன்தினம் இரவு 9.45 மணியளவில் அங்கிருந்து தப்பியோடியுள்ளாரென பொலிஸார் தெரிவித்தனர்.

காக்காபள்ளி - சேனாநாயக்கவத்த பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய விஜேதுங்க ஆராச்சிலாகே தோன் நிரோஷன் மதுசங்க என்ற கைதியே இவ்வாறு தப்பியோடியுள்ளார்.

ஹெரோயின் போதைப்பொருள் வர்த்தகச் செயற்பாட்டில் ஈடுபட்ட குற்றச்சாட்டிலேயே கடந்த 17 ஆம் திகதி இவரைக் கைது செய்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர். தப்பியோடிய கைதியைக் கைது செய்வதற்காக மாதம்பே பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.(ஜ-4)

## தகவல்கள் திருடும் செயலிகள்

(கொழும்பு)

இலங்கையர்களின் தனிப்பட்ட தரவுகளை சேகரிக்கும் செயலிகள் தொடர்பில் இலங்கை தகவல் தொழில்நுட்ப பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது.

நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக கூடிய செயலிகள் தொடர்பில் உரிய ஆய்வுகளை மேற்கொண்டு, ஆபத்து உள்ளதா? என்ற விடயத்தை முன்வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இலங்கை தகவல் தொழில்நுட்ப பிரிவு, பாதுகாப்பு அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளது.(ஜ-4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2124

### பிரசாந்

எவ்வளவு தான் மனதை காயப்படுத்தினாலும் நாம் நேசித்த ஓர் இதயத்தை மட்டும் என்றுமே நம்மால் மறக்கவோ... வெறுக்கவோ முடியவில்லையெனில் அது தான் உண்மையான அன்பு...

### சிந்துஜன்



எந்த சூழ்நிலையிலும் எவரையும் நம்பாதிருங்கள்... இப்போதுள்ள மனிதர்கள் எல்லாம் எவ்வித குற்றவுணர்ச்சியும் இல்லாமல் துரோகமிழைக்கக் கற்றுக்கொண்டுள்ளனர்..!

### சுஜீவா

எத்தனை சொந்தங்கள் இருந்தாலும் ஓர் ஆணுக்கு மனைவி தான்... மனைவிக்கு கணவன் தான்.. அதற்கு இணை வேறு எதுவும் இல்லை... விழுதுகள் மரத்தை தாங்கலாம் வேர் மட்டுமே அதை வாழ வைக்க முடியும்... கணவன், மனைவி எனும் உறவும் இதைப்போல தான்..



### தர்சிகா



ஒரு காலத்தில் உன்னை வெறுத்தவர்கள்... உன் உயர்வை கண்டு உனக்காக ஏங்குவார்கள்...

### பிரியன்



நீ நேசிக்கும் பலர்... உன்னை மறக்க நினைத்தாலும் உன்னை நேசிக்கும் சிலரை... நீ நினைக்க மறக்காதே..!

### பானு



தன்னைத்தானே சரி செய்துகொள்ள முயலுங்கள்... அதைவிட சிறந்த மாற்றம் வேறொன்றுமில்லை...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# புரட்டாதி மாத இராசி பலன்கள்

## 17.09.2020 - 16.10.2020



சார்வரி வருடம் புரட்டாதி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சனி, வக்கிர நிவர்த்தியாகி இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றார். உங்கள் இராசிக்கு மூன்றாமிடம் எனப்படும் சகாய ஸ்தானத்தில் செவ்வாய் பலம் பெற்றிருக்கின்றார். அஷ்டமத்தில் சூரியனும், புதனும் இணைந்து புத ஆதித்ய யோகத்தை உருவாக்குகிறார்கள்.

உங்கள் இராசிக்கு அதிபதியான சனி குடும்ப ஸ்தானாதிபதி குருவோடு இணைந்திருப்பதால் குடும்ப முன்னேற்றம் கூடுதலாக இருக்கும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். தற்சமயம் உங்கள் இராசிக்கு 4 ஆம் இடத்தில் ராகுவும், 10ஆம் இடத்தில் கேதுவும் வந்திருக்கின்றார்கள். தொழில் ஸ்தானத்தில் கேது சஞ்சரிப்பதால் தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். மறைந்த புதனால் நிறைந்த தனலாபம் கிடைக்கும். என்றாலும், அவரோடு சூரியன் இணைந்து அஷ்டமத்தில் இருப்பதால் அரசியல் ஈடுபாடு கொண்டவர்களால் சில பிரச்சினைகள் வரலாம். ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும்.

### துலாம் புதனின் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு அஷ்டமத்தில் சஞ்சரித்து வந்த புதன், செப்டெம்பர் 21ஆம் திகதி துலாம் இராசிக்கு வருகின்றார். ஒன்பதாம் இடத்திற்கு வரும் புதன் பொன், பொருள் சேர்க்கைக்கு வழிவகுத்துக் கொடுப்பார். ஐந்தும் ஒன்பதும் மிஞ்சும் பலன் தரும் என்பார்கள். எனவே 5-க்கு அதிபதியான புதன், 9 ஆம் இடத்திற்கு வரும் இந்த நேரத்தில் தொழில் வளம் சிறப்பாக இருக்கும். தொகை கேட்ட இடத்தில் கிடைக்கும். இதுவரை வாடகைக் கட்டடத்தில் நடந்து வந்த தொழில் இனிச் சொந்தக் கட்டடத்தில் நடப்பதற்கான சூழ்நிலை உருவாகும். பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும்.

## ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும்

### சிம்ம சுக்கிரனின் சஞ்சாரம்

செப்டெம்பர் 28ஆம் திகதி, சிம்ம இராசிக்குச் சுக்கிரன் வருகின்றார். உங்கள் இராசிக்கு 4, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் சப்தம ஸ்தானத்தில் வரும் பொழுது வாழ்க்கைத் துணை வழியே ஒரு நல்ல தகவல் வரலாம். அவர்களின் வேலைவாய்ப்பு சம்பந்தமாக ஏதேனும் முயற்சி செய்திருந்தால் அது கிடைக்கும். பத்திரப்பதிவில் இருந்த தடைகள் அகலும். இடம் வாங்கி மனை




கட்ட வேண்டுமென்ற எண்ணம் அதிகரிக்கும். இடம் வாங்கிக் கட்டுவதா? அல்லது கட்டிய வீடாக விலைக்கு வாங்குவதா? என்று சிந்திப்பீர்கள்.

### புதனின் வக்கிர இயக்கம்

செப்டெம்பர் 30ஆம் திகதி துலாம் இராசியிலும், ஒக்டோபர் 8ஆம் திகதி கன்னி இராசியிலும் புதன் வக்கிரம் பெறுகின்றார். இதன் விளைவாக உங்களுக்கு நற் பலன்கள் ஏற்படும்.

பஞ்சம அஷ்டமாதிபதியாக விளங்கும் புதன் வக்கிரம் பெறும் பொழுது பிள்ளைகளால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். அவர்களின் கல்யாண வாய்ப்பு, கல்வி முன்னேற்றம், கடல்தாண்டிப் பணிபுரியும்சூழ்நிலை உருவாகும். மாமன், மைத் துனர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்புகள் மாறும்.

இம்மாதம் பிரதோஷத்தன்று நந்தி பதிகம் பாடி நந்தியை வழிபடுவது நல்லது.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் சனியின் பார்வை உங்கள் இராசியில் பதிவதால் எதையும் துணிந்து முடிவெடுக்க முடியாது. சகோதர ஸ்தானத்தைக் குரு பார்ப்பதால் உடன்பிறப்புகளின் திருமண முயற்சிகள் நிறைவேறும். சப்தமாதிபதி அஷ்டமத்தில் இருப்பதால் கணவன்-மனைவி இடையே பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும். பிள்ளைகளின் கல்வியில் கவனம் செலுத்துவீர்கள். பணிபுரியும் இடத்தில் கவனம் தேவை. பெண் தெய்வ வழிபாடு பெருமையைச் சேர்க்கும்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



சார்வரி வருடம் புரட்டாதி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, உங்கள் இராசிநாதன் குருபகவான் 10ஆம் இடத்தில் இருந்து பலம்பெற்றிருக்கின்றார். அவரோடு 11, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சனிபகவானும் இணைந்து சஞ்சரிக்கின்றார். எனவே தொழிலில் வளர்ச்சி ஏற்படும் நேரமிது. குரு, சனி ஆகிய இரண்டு கிரகங்களும் வக்கிர நிவர்த்தியாகி விட்டதால் இந்த மாதத்தில் தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும்.

2இல் செவ்வாய் சொந்த வீட்டில் இருப்பதால் தன ஸ்தானம் வலுவடைகின்றது. எனவே பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். 10இல் சனி இருந்து கர்ம ஸ்தானம் வலுவடைவதால் பெற்றோர்களின் உடல்நலத்தில் மிகுந்த கவனம் தேவை. 10இல் குரு வந்தால் பதவி மாற்றம் என்பார்கள். அந்த அடிப்படையில் உங்களுக்கு மாற்றங்கள் வந்தாலும் குருவோடு சனியிருப்பதால் நன்மையே செய்யும்.

குருவின் பார்வை 2, 4, 6 ஆகிய இடங்களில் பதிவதால் வாக்கு, தனம், குடும்பம், வாகனம், கல்வி, ஜீவனம் ஆகிய ஸ்தானங்கள் புனிதமடைகின்றன. மேலும் குருசந்திர யோகம், குருமங்கள யோகம், புத ஆதித்ய யோகம் போன்ற யோகங்கள் இருப்பதால் சுபகாரியப் பேச்சுக்கள் முடிவிற்கு வரும்.

### துலாம் புதனின் சஞ்சாரம்

இதுவரை கன்னி இராசியில் உச்சம் பெற்றிருந்த புதன், துலாம் இராசிக்கு செப்டெம்பர் 21ஆம் திகதி வருகின்றார். 4, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் 8ஆம் இடத்தில் மறைவது யோகம்தான். புதிய வாகனம் வாங்கும் எண்ணம் உருவாகும். பெற்றோர் வழியில் இருந்த பிரச்சினை அகலும். சிலருக்கு கற்ற கல்விக்கேற்ற வேலை கிடைக்கும். உற்றார், உறவினர்கள் உங்கள் முன்னேற்றத்தைக் கண்டு ஆச்சரியப்படுவர்.

### சிம்ம சுக்கிரனின் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 6ஆம் இடமான சிம்மத்திற்கு செப்டெம்பர் 28ஆம் திகதி சுக்கிரன் வரப்போகின்றார். உங்கள் இராசிநாதன் குருவிற்கு சுக்கிரன் பகைக்கிரகமாகும். எனவே மறைவிடமான 6ஆம் இடத்திற்கு வரும் பொழுது முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள். தொழில் வளர்ச்சி பெறும். உத்தியோகத்தில் சலுகைகள் கிடைக்கலாம். தெய்வத் திருப்பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். சக பணியாளர்களால் உங்களுக்கு ஏற்பட்ட தொல்லை அகலும்.




## சுபகாரியப் பேச்சுக்கள் முடிவிற்கு வரும்

### புதனின் வக்கிர இயக்கம்

உங்கள் இராசிக்கு 4, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் வக்கிர இயக்கத்தில் சஞ்சரிக்கும் பொழுது பலமடங்கு நன்மைகளைச் செய்வார். செப்டெம்பர் 30ஆம் திகதி துலாம் இராசியிலும், பிறகு ஒக்டோபர் 8 ஆம் திகதி கன்னி இராசியிலும் புதன் வக்கிரம் பெறுவதால் கல்யாண வாய்ப்புகள் கைகூடும். விவசாயத் தொழில் புரிவோர் விரும்பிய பலனைக் காண்பர். சிலர் உத்தியோகத்தில் விருப்ப ஓய்வில் வெளிவந்து சுயதொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவர்.

இம்மாதம் வியாழக்கிழமை தோறும் குரு பகவானுக்கு துதிப்பாடல்களைப் பாடி வழிபடுவதோடு, ஜீவ தீபமும் ஏற்றி வழிபடுவது நல்லது.


### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் மாதமாகும். சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டு. கணவன்-மனைவிக்குள் அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளின் எதிர்கால நலன்கருதி எடுத்த முடிவு வெற்றி பெறும். தாய் மற்றும் உடன் பிறப்புகள் உங்கள் மனம் போல நடந்துகொள்வர். பணிபுரியும் பெண்கள் இனி தனித்து இயங்கலாமா? என்று யோசிப்பர். ஆரோக்கியத் தொல்லை அகலும். இம்மாதத்தில் நடராஜர் வழிபாடு நன்மைகளை வழங்கும்.

(முற்றும்)

## நியூடயமண்ட் கப்பல்

# இழப்பீட்டு தொகையை மேலும் கோர சட்டமா அதிபர் திணைக்களம் முடிவு




(கொழும்பு)

கிழக்குக் கடற்பரப்பில் தீ விபத்துக்குள்ளான எம்.டி நியூ டயமண்ட் எண்ணெய்க் கப்பலின் உரிமையாளர்களிடம் மேலும் இழப்பீட்டுத் தொகையை கோர தீர்மானிக்கப்பட்டுள்ளது.

விபத்துக்குள்ளான எம்.டி. நியூ ட்யமண்ட் கப்பல் தொடர்பான மற்றுமொரு சுற்று விவாதம் நேற்று முன்தினம் சட்டமா அதிபர் திணைக்களத்தில் நடைபெற்றது.

கடல் சுற்றுச் சூழல் மாசுபாடு ஆணையகத்தின் மற்றும் எண்ணெய்க் கப்பலால் ஏற்படும் கடல் மாசுபாடு குறித்த அறிக்கையை தயாரிக்கும் நிபுணர்கள் குழுவுடன் இதன்போது சட்டமா அதிபர் கலந்துரையாடலை மேற்கொண்டதாக சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஒருங்கிணைப்பாளரும் சட்டத்தரணியுமான நிஷார ஜெயரத்ன தெரிவித்தார்.

விபத்துக்குள்ளான எண்ணெய்க் கப்பலின் உரிமையாளர்கள் சட்டத்தரணிகளிடம் முன்னதாகவே 340 மில்லியன் ரூபாய் கோரிக்கை விடுத்துள்ள சட்டமா அதிபர் திணைக்களம், தீ விபத்தைத் தொடர்ந்து கடல் சூழலுக்கு ஏற்பட்ட சேதங்கள் குறித்த அறிக்கையையும் தொகுத்து வருகின்றனர்.

அதன்படி, தீ விபத்தால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்புகள் குறித்த நிபுணர் மதிப்பீட்டைத் தொடர்ந்து மேலும் இழப்பீட்டுத் தொகையை கோர தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

## ஆன்மீகம்



### அவமானங்களையே வெகுமானங்கள் ஆக்குவோம்

(நேற்றைய தொடர்ச்சி...)

அவமானம் செய்பவர்கள் அந்த நேரம் மட்டும் ஒரு அற்பசுகம் அடைகிறார்கள். அந்த அவமானத்தையே உரமாக்கிக் கொண்டு நாம் வளர்ந்தால் நிரந்தர சுகத்தை நாம் நிச்சயம் பெறலாம். கிரேக்க நாட்டின் பள்ளி ஒன்றில் பல சிறுவர்கள் பயின்று வந்தனர். ஆடியும், பாடியும் திரிந்த இளமைப் பறவைகளான அவர்கள் கூட்டத்தில் காப்மேயர் என்ற ஒரு சிறுவன் மட்டும் தனிமைப்படுத்தப்பட்டான். காரணம் எல்லோரையும் போல் சரளமாக அவனுக்குப் பேச வரவில்லை.

திக்கித் திக்கி பேசும் சுபாவம் கொண்ட அவனைத் 'திக்குவாயன்' என்றே எல்லோரும் கூப்பிட்டுக் கேலி செய்தனர். வகுப்பில் அனைவரும் ஐந்து நிமிடத்தில் ஒப்பிக்கும் மனப்பாடப் பகுதியை காப்மேயர் சொல்லி முடிக்கக் கால்மணி நேரத்திற்கும் அதிகமானது.

பலர் செய்த அவமானம் அவனுக்கு ஆத்திரத்தை வரவழைத்தாலும் இவர்களை விடவும் சரளமாக நாம் பேசியே ஆக வேண்டும் என்ற உத்வேகத்தையும் உருவாக்கியது. பெரும் பேச்சாளரான டெமஸ்தனிஸ் தன்னைப் போலவே சிறு வயதில் ஒரு திக்கு வாயராக இருந்து பிறகு திக்கெலாம் புகழும் சிறந்த சொற்பொழிவாளராக உயர்ந்தார் என்பதையும் அவர் தன் வாயில் கூழாங்கற்களை வைத்துக்கொண்டு கடல் அலைகளுக்கு முன்பாக நின்று உரக்க பேசிப்பேசி தன் திக்கு வாய்ப் பேச்சை மாற்றிக் கொண்டார் என்பதையும் காப்மேயர் அறிந்தான். அவரைப் போலவே முயற்சி செய்தான்! அன்றாடம் கண்ணாடி முன் நின்று பேசிப் பழகினான். முயன்றால் முடியாதது ஒன்றுண்டோ? திக்கு வாய் அடியோடு நீங்கியது.

கேலி செய்தவர்களின் வாய் அடியோடு மூடியது. "எலி என உன்னை இகழ்ந்தவர் நடுங்க புலி என புறப்படு' - என்கிறார் பாவேந்தர் பாரதிதாசன். 'இகழ்வார் முன் ஏறு போல் பீடு நடை'போட வேண்டும் என்கிறார் திருவள்ளுவர். பாழ்பட்டு நின்ற பாரத தேசத்தை வாழ்விக்க வந்தவர்தான் காந்தி மகாத்மா. விடுதலையின் பூப்பறிக்க விரல்கள் சேர்த்தவர்தான் அந்த வித்தகர். வெள்ளையர்களை வெளியேற்ற அறப்போரை முன்னின்று நடத்த அவருக்கு அடி உரமாக அமைந்தது எது தெரியுமா? அவர் அவமானப்படுத்தப்பட்ட ஒரு நிகழ்ச்சிதான். தென் ஆபிரிக்காவில் ரயில் பயணம் மேற்கொண்டார் காந்தியடிகள். முதல் வகுப்புக்கான பயணச்சீட்டு வாங்கி முதல் வகுப்பில் ஏறிய காந்தியை 'கறுப்பர்' எனக் காரணம் காட்டி ரயில் அதிகாரியான ஒரு வெள்ளையர் தடுத்தார்.

"உரிய டிக்கெட் உள்ளதே, நான் ஏன் முதல் வகுப்பில் ஏறக்கூடாது?" என காந்தி எதிர்த்து வாதம் புரிந்தார். வெள்ளைக்கார அதிகாரி காந்தியைக் கீழே பிடித்துத் தள்ளினார். அவர் பொருட்களையும் வீசி வெளியே எறிந்தார். 'கறுப்பர்களுக்கு முதல் வகுப்பா?' என அவமானப்படுத்தினார், வெள்ளையரான அந்த ரயில் அதிகாரி. அப்போது காந்திக்குள் உருவான கனல்தான் சுதந்திர ஜோதியை பின்னாளில் சுடரவைத்தது.

அண்ணல் காந்தி அவமானத்தை எதிர்கொண்ட விதத்தால்தான் தன்மான இந்தியர்களாக நாம் தலை நிமிர முடிந்தது. எதிரிகள் நமக்கு ஏற்படுத்தும் தலைகுனிவுச் சம்பவங்களையும் ஏற்றமுறையில் நாம் எதிர்கொண் டால் சுவரில் அடித்த பந்து போல தலைகுனிவு அவர்களிடம் போய்ச் சேரும். நாம் தலை நிமிர்ந்து நடை போடலாம்.

## செய்தித்துளிகள்

# ஆபத்தான நிலையில் மேலும் ஒரு கட்டடம்

(கொழும்பு)

கண்டி பூவெலிகட பகுதியில் கடந்த 20 ஆம் திகதி இடிந்து வீழ்ந்த கட்டடத்தை போன்று ஆபத்தான நிலையில் ஹெம் மாதகம பகுதியில் ஒரு மூன்று மாடி கட்டடம் கண்டுபிக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் , பொதுமக்களின் நலன் கருதி இக்கட்டடம் நேற்று முன்தினம் பொலிஸ் உத்தரவின் பேரில் மூடப்பட்டது. ஹெம் மாதகம நகரில் அரனாயக்க வீதியில் அமைந்துள்ள இக்கட்டடம் பாதுகாப்பு இல்லாத ஆபத்தை ஏற்படுத்தக் கூடிய நிலையில் உள்ளதாக அடையாளப்படுத்தப்பட்டிருக்கிறது. இதனாலேயே இத்தீர்மானத்தை மேற்கொண்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இக்கட்டடத்தின் பல பிரதான தூண்கள் மற்றும் சுவர்கள் வெடித்து இடைவெளிகள் காணப்படுகின்றன. இக்கட்டடத்தின் முன்னால் மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் கணிசமான அளவில் நடமாடுகின்றனர்.

இவ்விடத்தில் பாரிய விபத்தொன்று இடம்பெறுவதைக் தவிர்ப்பதற்காகவும் இவ்விடத்தில் விசேட பொலிஸ் நட்மாடும் பாதுகாப்பு நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஜ-4)

# விசேட சுற்றிவளைப்பு 417 பேர் கைது

(கொழும்பு)

மேல் மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின் போது பல்வேறு குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடைய 417 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை 5 மணி முதல் நேற்றுக் காலை 6 மணிவரையான காலப் பகுதியில் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையின் போதே இந்த கைது சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச் சுற்றிவளைப்பில் 180 பேர் ஹெரோயினுடனும், 88 பேர் கஞ்சாவுடனும், 101 பேர் சட்டவிரோத மதுபானத்துடனும், 20 பேர் ஐஸ் போதைப்பொருளுடனும் இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர். மேலும் பல்வேறு குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடைய பல நபர்களும் இதன்போது கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஜ-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 150 | 130 | 120 | 120 |
| உருளைக்கிழங்கு | 160 | 130 | 130 | 140 |
| பச்சைமிளகாய் | 200 | 160 | 180 | 200 |
| தக்காளி | 200 | 200 | 180 | 180 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 80 | 110 | 80 |
| கோவா | 120 | 130 | 140 | 120 |
| கரட் | 80 | 200 | 200 | 200 |
| பூசணி | 120 | 120 | 100 | 140 |
| புடோல் | 100 | 80 | 80 | 100 |
| வாழைக்காய் | 130 | 120 | 100 | 120 |
| சின்னவெங்காயம் | 140 | 160 | 160 | 140 |
| பெரியவெங்காயம் | 170 | 180 | 180 | 160 |
| பாகற்காய் | 400 | 380 | 400 | 280 |
| வெண்டிக்காய் | 120 | 100 | 80 | 100 |
| கருணைக் கிழங்கு | 120 | 150 | 140 | 120 |
| பயற்றங்காய் | 200 | 200 | 160 | 120 |
| லீக்ஸ் | 80 | 130 | 100 | 100 |
| பீற்றூட் | 80 | 90 | 100 | 100 |
| கறிமிளகாய் | 300 | 300 | 280 | 300 |
| முருங்கைக்காய் | 400 | 300 | 240 | 160 |
| போஞ்சி | 300 | 300 | 300 | 280 |
| கத்தரிதம்புள்ள | 120 | 80 | 100 | 80 |
| கீரை - 1 பிடி | 50 | 30 | 40 | 40 |
| தேசிக்காய் | 100 | 100 | 80 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 100 | 70 | 60-80 |
| இராசவள்ளி | -- | -- | -- | -- |
| வெங்காயப்பூ | 250 | 240 | 200 | 240 |
| முள்ளங்கி | 80 | 90 | 60 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | 30 |
| வல்லாரை | 15 | 80 | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | 90 | -- | 100 |




# மனச்சாட்சி

பாலைவனத்தில் பயணம் செய்து கொண்டிருந்த ஒருவன் குடிக்கத் தண்ணீர் இல்லாமல் மயங்கி விழும் நிலைக்கு வந்து விட்டான்.

தாகத்தால் உயிர் போய் விடுமோ என்று நினைத்த போது தூரத்தில் ஒரு குடிசை போல ஏதோ ஒன்று தெரிந்தது.

மிகவும் கஷ்டப்பட்டு அவன் அந்த இடத்திற்கு சென்று விட்டான்.

அங்கே ஒரு கையால் அடித்து இயக்கும் பம்பும், அதன் அருகில் ஒரு ஜாடியில் தண்ணீரும் இருந்தன. ஒரு அட்டையில் யாரோ எழுதி வைத்திருந்தார்கள்.

"ஜாடியில் உள்ள தண்ணீரை அந்தப் பம்ப் செட்டில் ஊற்றி அடித்தால் தண்ணீர் வரும்.

குடித்து விட்டு மறுபடியும் ஜாடியில் தண்ணீரை நிரப்பி வைத்து விட்டுச் செல்லவும்."

அந்தப் பம்ப்போ மிகவும் பழையதாக இருந்தது. அது இயங்குமா?, தண்ணீர் வருமா? என்பது சந்தேகமாக இருந்தது.

அது இயங்காவிட்டால் அந்தத் தண்ணீர் வீணாகி விடும். அதற்குப் பதிலாக அந்தத் தண்ணீரைக் குடித்து விட்டால் தாகமும் தணியும், உயிர் பிழைப்பதற்கு உத்தரவாதமும் உள்ளது.

அவன் யோசித்தான். தண்ணீரைக் குடித்து விடுவதே புத்திசாலித்தனம் என்று அறிவு கூறியது.

ஒருவேளை அதில் எழுதி வைத்திருப்பது போல் அந்தப் பம்பு இயங்குவதாக இருந்து அது இயங்கத் தேவையான அந்தத் தண்ணீரைக் குடித்து விட்டால் இனி தன்னைப் போல தாகத்தோடு வருபவர்களுக்கு அது பயன்படாமல் போகத் தானே காரணமாகி விடுவோம் என்று மனச்சாட்சி எச்சரித்தது.



அவன் அதற்கு மேல் யோசிக்கவில்லை. ஆனது ஆகட்டும் என்று அந்தப் பம்பில் அந்தத் தண்ணீரை ஊற்றி விட்டு அதை அடித்து இயக்க ஆரம்பித்தான்.

தண்ணீர் வர ஆரம்பித்தது. தாகம் தீர, வேண்டிய அளவு தண்ணீர் குடித்து விட்டு அந்த ஜக்கில் நீரையும் நிரப்பி விட்டுச் செல்கையில் அவன் மனமும் நிறைந்திருந்தது.


நாம் அவசியமான காலத்தில் அனுபவிப்பதை அடுத்தவருக்கும் அதேபோல பயன்படும்படி விட்டுப் போக வேண்டும். எந்த நன்மையும் நம்முடன் நின்று விடலாகாது.

**நீதி: நேர்மறை எண்ணம் உங்களை வாழ வைக்கும், எதிர்மறை எண்ணம் உங்களை அழிக்கும்.**

# ராஜராஜ சோழப்பேரரசின் வரலாறு

## சர்ச்சைகளின் காலம்

76



தஞ்சைப் பெரிய கோயிலில் சுந்தரர் ஓவியம்

சோழர்கால கட்டத்தில் தொடர்ச்சியாகப் புதிய வேளாண் நிலங்கள் உருவாக்கப்பட்டு ஏராளமான நஞ்சை நிலங்கள் உருவாயின. நில விளைச்சல்களால் அங்கே குடியேற்றங்கள் நிகழ்ந்தன.

நிலங்கள் ஊர்களாக ஆனபோது அங்கே கோயில்கள் நிறுவப்பட்டன. கோயில்கள் அனைத்திலும் ஒரே வகையான ஆகமமுறை பூஜைகளைச் செய்வதற்காகப் பிராமணர்கள் ஈடுபடுத்தப்பட்டார்கள். சர்ச்சைகள் தொடங்க அதுவே வழி வகுத்தது.

ராஜராஜன் காலகட்டத்தில் நிறைய நகரங்களும் வணிகச் சந்தைகளும் நகர வசதிகளும் அதிகமாகின. சந்தைகளும் வீதிகளும் வீதியோரக் கோயில்களும் கோயில்களைச் சுற்றி ஊர்களும் நகரங்களும் உருவாகி ஒரு மொடல் நகரத்தை கண்முன் நிறுத்தின.

கோயில், நகர்ப்புற மையமாக இருந்தது. இதனால் அரசியல், பொருளாதார, அரசியல் அமைப்பாக கோயில் செயற்பட்டது.

ராஜராஜன் ஆட்சியில் ஆலயங்கள் அனைத்திலும் மாறுபட்ட பூஜைமுறைகள் தடைசெய்யப்பட்டு ஆகம முறை கட்டாயமாக்கப் பட்டது.

இந்த ஆதிக்கக் கட்டமைப்புக்குச் செவிசாய்க்கவும் செய்து முடிக்கவும் பிராமணர் தேவைப்பட்டார்கள்.

அரசரின் கட்டளையை ஏற்று நடந்ததால் பிராமணர்களுக்கு நிறையச் சலுகைகள் வழங்கப்பட்டன.

கோயில்கள் கட்டப்பட்டு அதன் அருகில் பிராமணர்களுக்கு நிலம் அளித்துக் குடியேற்றுவது என்பது அந்தக் காலக் கட்டத்தில் ஒரு வழக்கமாகவே இருந்துள்ளது.

அதையேதான் ராஜராஜனும் செய்தார். பிரம்மதேயங்கள் என்ற பெயரிலும் சதுர்வேதி மங்கலங்கள் என்ற பெயரிலும் பிராமணர் குடியேற்றங்கள் உருவாக்கப்பட்டு அவர்களுக்குப் பிரத்தியேக உரிமையுடன் கூடிய நிலங்கள் வழங்கப்பட்டன.

மதங்களைக் கொண்டு மக்களைக் கட்டுப்படுத்தவும் ஒற்றுமையோடு செயற்படவும் பிராமணர்களின் பங்களிப்பு அவசியம் என்று ராஜராஜன் நினைத்தார்.

இதனால் சோழர் காலத்தில் ஆதிக்கத்தின் கருவியாகப் பிராமணர்கள் செயற்பட்டார்கள். அவர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகள் மக்களிடையே பல்வேறு கருத்துக்களை உருவாக்கின.

பிரம்மதேயம் என்கிற நிலமானியங்கள் வழங்கப்பட்டாலும் அரசதிகாரம் முழுவதும் அவர்கள் கைக்குச் சென்றுவிடவில்லை. அது எப்போதும் போல மன்னர் கையிலேயே இருந்தது. ராஜராஜனுக்குத் தேவையான மூன்று ஞானங்கள் பிராமணர்களிடம் இருந்தன. ஒன்று மதஞானம்.

(தொடரும்)

இப்போது செய்வதை விட, இன்னும் சிறப்பாக பணியாற்ற திறமையும், வாய்ப்பும் இருந்தும் அப்படி செய்யாமல் இருப்பவனும் சோம்பேறியே. – சாக்ரடீஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அரச நிறுவனங்கள் தமது பணியை விரைவுபடுத்த வேண்டும்

அரச நிறுவனங்களின் செயலொழுங்கும் மக்களுக்கான அவற்றின் பணிகளும் இன்னமும் மந்தமும் காலதாமதமும் உடையதாகவே இருந்து வருகிறது.

அரச நிறுவனங்களின் நுழைவாயில்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள நோக்கக் கூற்று, பணிக்கூற்று என்பவற்றைப் பார்க்கும் போது மாலை ஆறு மணிக்கு முற்பட்ட ஆட்டோ சாரதி வடிவேலு போல இருக்கும்.

அந்தளவுக்கு பண்பு, பணிவு, விரைவு என்பன வார்த்தைகளில் விஞ்சி நிற்கும். ஆனால் ஒரு வேலையைப் பெறுவதற்குச் சென்றால்தான் அங்கிருக்கக்கூடிய நடைமுறைப் பிரச்சினைகள் தெரியவரும்.

எந்தப் பணியையும் உரிய நேரத்தில் செய்து முடிக்க முடியாத அளவிலேயே நிலைமை உள்ளது.

சுருங்கக்கூறின் மாலை ஆறு மணிக்குப் பின்பான ஆட்டோ சாரதி வடிவேலுவின் நிலைமை போல இருக்கும் எனலாம்.

இவ்வாறாக அரச பணிகள் தாமதமும் சிக்கல்களும் நிறைந்திருப்பதனால், பொது மக்கள் பல மணிநேரங்களை அரச அலுவலகங்களில் காத்திருப்புக்காகச் செலவிடுகின்றனர்.

இந்த நிலைமை எங்கும் எதிலும் என்றாகி விடும்போது, பொதுமக்களின் வேலைகள் பாதிக்கப்படுகின்ற துரதிர்ஷ்டம் ஏற்படுகிறது.

எனவே பொதுமக்களுக்காக இயங்குகின்ற அரச அலுவலகங்கள் மக்கள் பணியை விரைவுபடுத்த வேண்டும்.

இதற்கான செயற்றிட்டங்களை வகுப்பது சம்பந்தப்பட்ட அரச நிறுவனத் தலைவர்களின் கடமையாக இருக்கும்.

உதாரணத்துக்கு நெல் விதைப்புக் காலம் தொடங்கியதும் உரமானியம் வழங்குகின்ற வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படும்.

உரமானியத்தைப் பெறுவதற்காகப் பல மணி நேரம் விவசாயிகள் காத்திருக்கின்ற அவல நிலை ஏற்படவே செய்யும்.

பயிர்செய் காலங்களில் விவசாயிகளுக்கு நேரம் என்பதே கிடையாது.

இந்நிலையில் உரமானியம் பெறுவதற்கு பல மணிநேரத்தைக் காத்திருப்புக்காகச் செலவிடுவது மற்றும் அலைவது என்பனவெல்லாம் தவிர்க்கப்பட வேண்டும்.

இங்கு தவிர்த்தல் என்பது எங்ஙனம் சாத்தியமாகுமென ஆராய்ந்தால், நெல் விதைப்புக்கு முன்பாகவே உரமானியத்தை வழங்க நடவடிக்கை எடுப்பதாகும்.

இங்கு மானிய உரத்தை முன்கூட்டியே வழங்குவது தொடர்பில் மத்திய அரசின் ஒத்துழைப்புத் தேவைப்படும் என்பதால், நம் மக்கள் பிரதிநிதிகள் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களுக்கு நிலைமையை எடுத்துக்கூறி உரமானியம் முன்கூட்டியே கிடைப்பதற்கு ஆவன செய்ய வேண்டும்.

அவ்வாறு செய்யும்போது விவசாயிகளின் நேரம் வீணடிக்கப்படமாட்டாது என்பதுடன் உரியநேரத்தில் உரப் பசளையை வயலுக்கு இடவும் முடியும்.

இதுபோலவே ஏனைய விடயங்களையும் நாம் சிந்தித்துச் செயலாற்றினால் எமது முயற்சிக்கான விளைச்சல் நிச்சயம் கிடைக்கப் பெறும்.

# அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தொடர்பான பிரச்சினைகளுக்கு நடவடிக்கை எடுக்கப்படும்

## அரச அதிபர்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட அரசாங்க அதிபரை வடமாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சங்க அங்கத்தவர்கள் நேற்று முன்தினம் யாழ். மாவட்ட செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடினர்.

அதன் போது மிக நீண்டகாலமாக யாழ்ப்பாணத்தில் இருந்து வெளி மாவட்டங்களுக்கு சென்று கடமையாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கும் இடமாற்ற பிரச்சினை தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டது.

அதாவது மாவட்ட நிர்வாக எல்லை கடந்து தேசிய ரீதியாக மேற்கொள்ளப்பட வேண்டிய இடமாற்ற கொள்கையின் அடிப்படையில் தீர்க்கப்பட வேண்டிய இந்த பிரச்சினைக்கு தன்னாலான ஒத்துழைப்புக்களை வழங்குவதாக அரச அதிபர் உறுதியளித்ததோடு குறித்த இடமாற்ற பிரச்சினைகளை எவ்வாறான வழி வகைகளில் தொழிற்சங்கங்கள் கையாள வேண்டுமெனவும் ஆலோசனை வழங்கினார்.

தொடர்ந்து யாழ். மாவட்ட ரீதியாக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்ட போது சுட்டிக்காட்டிய விடயங்கள் தொடர்பாக தான் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் உறுதியளித்தார். (5-8)

# 20 ஆவது திருத்தத்தை நிறைவேற்றுவதற்கு மக்கள் பெரும்பான்மையை வழங்கியுள்ளனர்

## அமைச்சர் மகிந்தானந்த தெரிவிப்பு

(கொழும்பு)

20ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை நிறைவேற்றி 19ஆவது அரசியலமைப்புச் சட்டத்தை நீக்க மக்கள் அரசாங்கத்திற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை வழங்கி இருப்பதாக இராஜாங்க அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

அரசாங்கத்திற்கு மக்கள் வழங்கியுள்ள ஆணையை புறந்தள்ள முடியாது. அரசாங்கம் மக்களின்ஆணைக்கு அமைய செயற்படும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை வலுப்படுத்தவே 19ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது. அத்துடன் ராஜபக்சவினரை அரசியலில் இருந்து ஒதுக்கி வைக்க 19ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ராஜபக்சவினரை அரசியலில் இருந்து ஒதுக்கி வைக்க கடந்த அரசாங்கம் முயற்சித்த போதிலும் நாட்டில் வாழும் பெரும்பான்மை மக்கள் ராஜபக்சவினர் மீது தொடர்ந்தும் நம்பிக்கை வைத்துள்ளனர். ராஜபக்சவினர் நாட்டுக்கு எதிராக செயற்படமாட்டார்கள் எனவும் மகிந்தானந்த அளுத்கமகே குறிப்பிட்டுள்ளார். (ம-03)

## நீதிமன்ற தடையை மீறி

## நீராவியடியில் பிக்குவால் பெயர்ப்பலகை அமைப்பு

நீதிமன்ற உத்தரவை மீறி முல்லைத்தீவு நீராவியடிப் பிள்ளையார் கோவில் வளாகத்தில், பிக்கு ஒருவர் "இரஜமகாராம விஹாரை" என்ற சீமெந்து பெயர்ப் பலகையை அமைத்துள்ளார்.

இது தொடர்பில், நீராவியடிப் பிள்ளையார் கோவில் நிர்வாகத்தினரால், நேற்று முன்தினம் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ம-03)

## கோப் குழுவின் தலைவராக ஹேரத்

(கொழும்பு)

9 ஆவது பாராளுமன்றின் அரச பொறுப்பு முயற்சிகள் பற்றிய (கோப்) குழுவின் தலைவராக பேராசிரியர் சரித ஹேரத் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவரதுபெயரை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே முன்மொழிந்தார்.

கடந்த ஓகஸ்ட் மாதம் 27 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டு ஒருமனதாக முன்மொழிவு பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் 22 உறுப்பினர்களைக் கொண்ட கோப் குழுவும் நியமிக்கப்பட்டது. (ஜ-4)

# பேஸ்புக் களியாட்டம் 16 பேர் கைதாகினர்

(கொழும்பு)

மாதுறுஓயா பகுதியிலுள்ள விடுதியொன்றில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த முகப்புத்தக களியாட்ட விருந்திற்கு சென்ற 16 இளைஞர்கள் நேற்று செவ்வாய்க்கிழமை பொலநறுவை போதைப்பொருள் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடமிருந்து ஒருவகை போதைப்பொருள் 33. 17 கிராம், கஞ்சா, போதைப்பொருள் அடங்கிய சுருட்டுக்கள் 11, சங்கீத உபகரணங்கள், வான், சிறிய ரக கெப் வாகனம் மற்றும் மோட்டார் சைக்கிள் ஆகியன கைப்பற்றப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அம்பாறை, கண்டி, பொலநறுவை, பெதிவெள மற்றும் செவனப்பிட்டிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். (ஜ-4)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 24 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**கிளிநொச்சி பிரதேசத்தில்** வேரவில், வலைப்பாடு, கிராஞ்சி ஆகிய இடங்களிலும்,

**வவுனியா பிரதேசத்தில்** தவசிகுளம் கிராமத்திலும் மின்சாரம் தடைப்படும்.

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

நடந்து முடிந்த எதையும் நான் ஒருபோதும் கவனிப்பதில்லை. எதைச் செய்து முடிக்க வேண்டும் என்பதில் மட்டும் கவனமாக இருக்கிறேன். -புத்தர்

## ஆன்மீகச் சிந்தனைகள்

### திருத்திக் கொள்ளுங்கள்

❖ நல்லவர்கள் சொல்லும் குறைகளைத் திருத்திக் கொள்ளவும், மூடர்கள் சொல்லும் குறையை புறக்கணிக்கவும் பழகுங்கள்.

❖ மனிதனாகப் பிறந்த அனைவருக்கும் லட்சியம் இருக்க வேண்டும் இல்லாவிட்டால் மிருகநிலைக்கு தாழ்ந்து விடுவோம்.

❖ படிப்பினால் ஏற்படும் அறிவை விட, அனுபவத்தால் உண்டாகும் அறிவு அதிக பயனைக் கொடுக்கும்.

❖ வெயில் அதிகமாக இருந்தால் மழை வர வாய்ப்பு உண்டாகும். அதுபோல, அநீதி அதிகமாகும் போது பூமியில் மகான்கள் பிறக்கின்றனர்.

# ஐதராபாத்தை வீழ்த்தி தொடரில் முதல் வெற்றியை பதிவு செய்தது பெங்களூர்




ஐபிஎல் 2020 கிரிக்கெட்டின் 3 ஆவது போட்டி டுபாயில் நேற்று முன்தினம் நடைபெற்றது. டொஸ் வென்ற சன்ரைசர்ஸ் அணி கப்டன் டேவிட் வார்னர் டொஸ் வென்று பந்து வீச்சை தேர்வு செய்தார்.

அதன்படி ரோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர் அணியின் தேவ்தத் படிக்கல், ஆரோன் பிஞ்ச் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினர்.

ஆரோன் பிஞ்ச் நிதானமாக விளையாட தேவ்தத் படிக்கல் சன்ரைசர்ஸ் ஐதராபாத் பந்து வீச்சை தெறிக்கவிட்டார்.

36 பந்தில் 8 பவுண்டரியுடன் அரைசதம் கடந்த தேவ்தத் 56 ரன்கள் எடுத்திருந்த நிலையில் ஆட்டமிழந்தார். ஆரோன் பிஞ்ச் 29 ரன்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார்.

3 ஆவது விக்கெட்டுக்கு விராட் கோலியுடன் டி வில்லியர்ஸ் ஜோடி சேர்ந்தார். ஆனால் விராட் கோலி 13 பந்தில் 14 ரன்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார்.

சிறப்பாக விளையாடிய டி வில்லியரஸ் 30 பந்தில் 51 ரன்கள் எடுத்தார். இதனால் பெங்களூர் அணி 20 ஓவர் முடிவில் 5 விக்கெட் இழப்பிற்கு 163 ரன்கள் சேர்த்தது.

இதன்படி 164 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணியின் டேவிட் வார்னர், ஜானி பிரிஸ்டோ களமிறங்கினர்.

6 பந்துகளில் 6 ரன்கள் எடுத்த நிலையில் வார்னர் ரன் அவுட் முறையில் வெளியேறினார். பின்னர் மணிஷ் பாண்டே உடன் ஜோடி சேர்ந்த பிரிஸ்டோ பெங்களூர் பந்து வீச்சை துவம்சம் செய்தார்.

அந்த ஜோடி ஐதராபாத் அணியின் ஸ்கோரை சடுதியாக உயர்த்தியது. அரைச்சதம் கடந்த பிரிஸ்டோ 43 பந்துகளில் 6 பவுண்டரிகள் 2 சிக்சர்கள் உட்பட 61 ரன்கள் எடுத்திருந்த நிலையில் சாஹல் பந்துவீச்சில் ஆட்டமிழந்து வெளியேறினார். நிதான்மாக ஆடி 33 பந்துகளில் 34 ரன்கள் குவித்திருந்த பாண்டேவும் சாஹல் பந்து வீச்சில் கட்ச் கொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த விஜய் சங்கர் சாஹல் பந்து வீச்சில் முதல் பந்திலேயே ரன் எதுவும் எடுக்காமல் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த வீரர்களும் பெங்களூர் அணியின் சிறப்பான பந்து வீச்சில் அடுத்தடுத்து ஆட்டமிழந்து வெளியேறினர்.


இறுதியாக கடைசி ஓவரில் 18 ரன்கள் தேவை என்ற நிலையில் 9 விக்கெட்டுகளை இழந்து ஐதராபாத் திணறியது.

களத்தில் சந்தீப் சர்மா, டி நடராஜன் களத்தில் இருந்தனர். 3 பந்துகளில் 11 ரன்கள் தேவைப்பட்டது. ஆனால் 19.4 ஓவரில் டெயில் ஸ்டெயின் வீசிய பந்தை சந்தீப் சர்மா சிக்ஸ் அடிக்க முயன்று பவுண்டரி லைனில் நின்று கொண்டிருந்த விராட் கோலி கட்ச் பிடித்தார்.

இதனால், ஐதராபாத் அணி 19.4 ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 153 ரன்கள் மட்டுமே எடுத்தது. இதனால் ஐதராபாத் அணியை 10 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்திய பெங்களூர் அணி இந்த ஆண்டு ஐபிஎல் தொடரில் தனது முதல் வெற்றியை பதிவு செய்தது.

பெங்களூர் அணி தரப்பில் சாஹல் 4 ஓவர்களில் 18 ரன்கள் மட்டுமே விட்டுக்கொடுத்து 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார். சிவம் டுபேயும் 3 ஓவர்களில் 15 ரன்கள் விட்டுக் கொடுத்து 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார். நவ்தீப் சைனியும் 4 ஓவரில் 25 ரன்கள் கொடுத்து 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார். (4)

## நொதேன் பிறிமியர் லீக் - 2020 (வவுனியா)




நொதேன் பிறீமியர் லீக் - 2020 தொடரில் யாழ்.மாவட்ட அணி முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், வவுனியா மாவட்ட அணிகளை வீழ்த்தி அதிகூடிய புள்ளி பெற்று முன்னணியில் உள்ளது

## கே.சி.சி.சி வெற்றிக்கிண்ணம் - 2020
## கிறாஸ்கொப்பர்ஸ் அணி 2 வது சுற்றுக்கு தகுதி

கே.சி.சி.சி. வெற்றிக் கிண்ணம் 2020 தொடரின் முதலாவது சுற்றில் 3 ஆவது போட்டி கடந்த 13ஆம் திகதி கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. போட்டியில் கிறாஸ்கொப்பர்ஸ் அணி றெயின்போ அணியை 5 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்று 2ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய றெயின்போ அணி 30 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 156 ஓட்டங்களை பெற்றது.

போட்டியில் ராஜன் 14, கிருபா, 52, செந்தூரன் 20, டிக்சிகன், 16, சிம்ஸன் 11 ஓட்டங்களையும் பெற்றனர். களத்தடுப்பில் மதூஸன் 01, ஜெனன்தன் 02, ரசிகரன் 02, நவராஜா 01 விக்கெட்டுக்களைகைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கிறாஸ்கொப்பர்ஸ் அணி 19.4 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 157 ஓட்டங்களை பெற்றது. டிலோஸன் 24, கோகுலன் 16, மதூஸன் 52, வரலக்ஸன் 39 ஓட்டங்களை பெற்றனர். களத்தடுப்பில் கிருபா 04, செந்தூரன் 01 விக்கெட்டுக்களை கைப்பற்றினர். (4)

## கே.சி.சி.சி.வெற்றிக்கிண்ணம்-2020
## AB அணி 2 ஆவது சுற்றுக்குத் தகுதி

கே.சி.சி.சி.வெற்றிக்கிண்ணம் 2020 தொடரின் முதலாவது சுற்றின் 6 ஆவது போட்டி கடந்த 13 ஆம் திகதி விக்டோரியா கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் AB அணி டிறிபேக் ஸ்ரார் அணியை 38 ஓட்டங்களால் வெற்றி பெற்று 2 ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய AB அணி 28.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 177 ஓட்டங்களைப் பெற்றது. போட்டியில் விஷ்ணு-11, ஞானா-12, ஆதித்தன்-71, யாதவன்- 15, ராகுலன்-11, லிங்கம்-21 ஓட்டங்களைப் பெற்றனர். களத்தடுப்பில் சாகித்தியன்-3, தர்ஸன், தசின்தன், பிரதீப் -2, சுஜன்தன்-1 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய டிறிபேக் ஸ்ரார் அணி 26 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 139 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. போட்டியில் தசின்தன்-50, சாகித்தியன்-16, சங்கீதன்-35 ஓட்டங்களையும் பெற்றனர். களத்தடுப்பில் AB அணியின் விஷ்ணு, லிங்கம், ராகுலன், ஞானா-1, சயந்தன் -2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். (4)

# கொல்கத்தா அணிக்கு மார்கனை தலைவராக நியமிக்க வேண்டும்

கொல்கத்தா அணிக்கு தினேஷ் கார்த்திக்குக்கு பதிலாக இங்கிலாந்தை சேர்ந்த மார்கனை கப்டனாக நியமிக்க வேண்டும் என்று இந்திய அணியின் முன்னாள் கப்டன் கவாஸ்கர் வலியுறுத்தியுள்ளார்.

ஐ.பி.எல். போட்டியில் 2 முறை சம்பியன் பட்டம் வென்ற கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணிக்கு தமிழகத்தை சேர்ந்த தினேஷ் கார்த்திக் கப்டனாக உள்ளார்.

தினேஷ் கார்த்திக் 2018 ஆம் ஆண்டு கொல்கத்தா அணிக்கு கப்டனாக நியமிக்கப்பட்டார். காம்பீருக்கு பதிலாக அவர் அந்த பொறுப்பை ஏற்றார். 2018 இல் அவரது தலைமையிலான கொல்கத்தா அணி பிளேஓப் சுற்றுக்கு முன்னேறியது.

ஆனால் கடந்த முறை கொல்கத்தா அணி 5 ஆவது இடத்தை பிடித்தது. தினேஷ் கார்த்திக்கின் பட்டிங்கும், சிறப்பாக அமையவில்லை. அவர் 14 ஆட்டத்தில் 253 ஓட்டங்கள் எடுத்தார்.

35 வயதான தினேஷ் கார்த்திக் இந்த ஐ.பி.எல். போட்டியில் சிறப்பான பங்களிப்பை வெளிப்படுத்தும் வேட்கையில் உள்ளார்.

இந்த நிலையில் கொல்கத்தா அணிக்கு தினேஷ் கார்த்திக்குக்கு பதிலாக இங்கிலாந்தை சேர்ந்த மார்கனை கப்டனாக நியமிக்க வேண்டும் என்று இந்திய அணியின் முன்னாள் கப்டனும், தொலைக்காட்சி வர்ணனையாளருமான கவாஸ்கர் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது,

கொல்கத்தா அணியின் பட்டிங் வரிசை துடிப்பாகவும், எல்லோரையும் கவரும் வகையில் உள்ளது. மார்கன் மிடில் ஆர்டரில் மிகப்பெரிய பலமாக இருப்பார். அவர் நிலையாக ஆடக்கூடியவர். அனுபவம் வாய்ந்தவர். அவர் ஒரு அபாயகரமான பட்ஸ்மேன் என்பதை பல முறை நிரூபித்துள்ளார்.

கொல்கத்தா அணி இந்த சீசனில் முதல் 4 அல்லது 5 ஆட்டத்தில் சிறப்பாக செயற்படாவிட்டால் தினேஷ் கார்த்திக்குக்கு பதிலாக மார்கனை கப்டனாக நியமிக்க வேண்டும் என கவாஸ்கர் தெரிவித்தார்.

மேலும் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி தனது ஆரம்ப ஆட்டத்தை இன்று மும்பையுடன் எதிர்கொள்ளவுள்ளார். (4)

## தமிழ்க் கட்சிகள்...

சந்திக்கிறார்கள்.

திலீபன் நினைவேந்தலை தடை செய்ய நீதிமன்றம் உத்தரவிட்டுள்ள நிலையில், நாளை யாழ்.நீதிமன்றம் சாதகமாக தீர்ப்பளிக்குமா? இல்லையா? என்பதை தீர்மானிக்க முடியாத நிலையில், இன்று திட்டமிட்டபடி தமிழ்க் கட்சிகள் ஒன்றுகூடுகின்றன. (ம-3)

## 13ஆவது திருத்...

எனினும் இக் கலந்துரையாடலில் 13ஆவது திருத்தம் பற்றிய விடயம் இடம் பெறாது எனத் தெரியவருகிறது.

ஒன்லைன் ஊடாக குறித்த பேச்சை நடத்த இரு நாட்டு பிரதமர்களும் இணக்கம் வெளியிட்டுள்ளனர்.

இரு நாடுகளுக்குமிடையிலான அரசியல் மற்றும் பொருளாதார உறவுகளை வலுப்படுத்தல் தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்படவுள்ளதோடு டில்லியின் உதவியுடன் இலங்கையில் முன்னெடுக்கப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்கள் சம்பந்தமாகவும் கவனம் செலுத்தப் படவுள்ளது.

இதேவேளை இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு ஒன்றைக் காண்பதற்கான நடவடிக்கைகள் குறித்தும் உரையாடப்படும் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ம-3)

## தோட்டக் காணி...

ஒன்றை உழவு செய்யும்போது, நிலத்துக்குள் புதைத்து வைக்கப்பட்டிருந்த வெடி பொருட்கள் சில கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இந்த வெடிபொருட்கள் நேற்று செவ்வாய்க்கிழமை கண்டறியப்பட்டுள்ளன என்றும் அவை தொடர்பில் ஆராயப்பட்டதாகவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

சிறப்பு அதிரடிப் படையினரின் உதவியுடன் இன்று குறித்த வெடிபொருள்கள் மீட்கப்படும் என்றும் பொலிஸார் அறிவித்துள்ளனர். (ம-3)

## வீடு புகுந்து...

பாய் பகுதியில் அதிகாலை குழு ஒன்றினால் வாள்வெட்டு வன்முறை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வீடு புகுந்து மேற்கொள்ளப்பட்ட வாள் வெட்டு சம்பவத்தில் தந்தையும் மகனும் படுகாயம் அடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

முன்னைய பகை காரணமா? அல்லது திருட்டு முயற்சியா? என்பது தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (ம-3)

## உயர்நீதிமன்ற...

எதிர்க்கட்சியினரின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் அரசியலமைப்பின் 20ஆம் திருத்த சட்டமூலம் நீதியமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரியினால் பாராளுமன்றத்தில் நேற்று முன்வைக்கப்பட்டது.

கையில் கறுப்பு பட்டியை அணிந்திருந்தவாறு எதிர்க்கட்சியினர் எதிர்ப்பினை வெளியிட்டனர்.

20 ஆம் திருத்தச்சட்ட மூலம் பாராளுமன்றில் நீதியமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் ஒழுங்கு பிரச்சினையை எழுப்பிய எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ, அதற்கு எதிர்ப்பினை தெரிவித்தார்.

எவ்வாறிருப்பினும் சட்டமூலத்தினை நீதியமைச்சர் சபையில் முன்வைத்தார்.

இதன்போது, எதிர் கட்சியினர் கூச்சலிட்டதுடன் சபைக்கு நடுவே பிரவேசித்து தங்களது எதிர்ப்பினை தெரிவித்தனர். (ம-3)

## சமாதானத்தை...

2020 செப்ரெம்பர் 14ஆம் திகதி உங்களால் வெளியிடப்பட்ட கருத்துரைக்கு இலங்கை என்ற தீபகற்பத்தின் தமிழ் மக்கள் தங்களது மனமார்ந்த நன்றியையும் வரவேற்பையும் தெரிவித்துக் கொள்கின்றார்கள்.

இலங்கை அரசாங்கத்தினுடைய கவலை தரும் போக்கினை நீங்கள் அறிந்துள்ளமை எமக்கு மகிழ்வைத் தருகின்றது. அதாவது அதிகார நிறுவனங்களின் சுதந்திரத்தைப் பேணாதிருத்தல், குடியியல் பதவிகளுக்கு இராணுவத்தினரை நியமித்தல், போர்க்குற்றங்கள், மனிதத்திற்கு எதிரான குற்றங்கள், இனப்படுகொலை போன்றவற்றினோடு தொடர்பிருக்கும் அலுவலர்களின் குற்ற ஆராய்வு சம்பந்தமாக பொறுப்புக்கூறல் அற்ற நிலை போன்றவை அவை.

மேற்கூறிய அரசியல் ரீதியான குறைபாடுகளை வெளிக்கொண்டு வரவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளதை தமிழ் மக்கள் சுட்டிக் காட்ட விரும்புகின்றார்கள். இது தனிப்பட்ட ஒரு ஜனாதிபதிக்கு அப்பால் தொடர்ந்து வந்த நிர்வாக அலகுகளின் செயற்பாடுகள் தங்களால் குறிப்பிடப்பட்ட பண்பியல்புகளை வெளிப்படுத்துவதாக அமைந்திருக்கின்றன. இவை இலங்கையின் இதுவரை கால அரசாங்க முறைமையின் குறைபாடுகளாவன.

இந் நாட்டினுடைய அரசியல் ரீதியான தத்துவார்த்த வெளிப்பாடுகள் இவை. இப் பிராந்தியத்தின் சமாதானத்திற்கும் நிரந்தர அபிவிருத்திக்கும் நீங்கள் கூறுவது போல் இவை பாதிப்பாக அமையக் கூடும் என்பதில் சந்தேகமில்லை.

மேலும் சர்வதேச வழிமுறைகளுக்கும் செயற்பாடுகளுக்கும் அமைய சகலரும் நடந்துகொள்வதில்தான் உண்மையான நல்லிணக்கம் ஏற்படும் என்பதில் தமிழ் மக்களிடையே மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

இதற்கான முக்கிய அடிப்படைக் கருத்துருவாக்கம் ஐக்கிய நாடுகள் சாசனத்தின் முதலாவது உறுப்புரையில் இடம் பெற்றுள்ளது.

அதாவது சர்வதேச சமாதானமும் பாதுகாப்பும் வெவ்வேறு மனித குழுமங்களின் சம உரித்துக்களிலும் சுயநிர்ணயத்திலும் பிரிக்க முடியாதவாறு தங்கி இருக்கின்றன என்பதே அது.

மனித உரிமைகளுக்கான உயர் ஸ்தானிகர் அலுவலகத்தின் இலங்கை மீதான பார்வை சர்வதேச சமூகங்களுக்கு மீண்டும் சமாதானத்தையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த வேண்டிய அவசியத்தை அவர்களுக்கு எடுத்துக் காட்டுகின்றது.

இதனை அடைய எடுக்கப்படும் சகல முயற்சிகளுக்கும் தமிழ் மக்கள் உற்ற துணையாக இருப்பார்கள் என்பதை உங்களுக்கு சொல்லி வைக்கின்றேன். தங்களுக்கு என்னுடைய நன்றிகள் உரித்தாகுக என்றுள்ளது. (ம-3)

### 20ஆவது திருத்தச் சட்டமூலத்தினால்

# ஆளும் தரப்பினர் மக்களிடம் மன்னிப்பு கேட்பார்கள்

### விஜித ஹேரத் எம்.பி தெரிவிப்பு



(கொழும்பு)

20ற்கு ஆதரவாக தற்போது கருத்து வெளியிடு வோர் இன்னும் சில வருடங்களில் இதற்காக மக்களிடம் மன்னிப்புக் கேட்பார்கள் என்று ஜே.வி.பி யின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று இடம்பெற்ற சபை ஒத்திவைப்பு வேளையில் உரையாற்றியபோது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், “20 ஆவது திருத்தச் சட்டமூல வர்த்தமானி வெளியே வந்தவுடன், நாட்டு மக்கள் கடுமையான எதிர்ப்பினை வெளியிட்டார்கள். ஆளும் தரப்பு உறுப்பினர்களே இதற்கு எதிர்ப்பினை வெளியிட்டார்கள்.

இதனால் தான் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இதற்காக குழுவொன்றை ஸ்தாபித்தார்.

20 இற்கு ஆதரவாக இன்று குரல் எழுப்பும் உறுப்பினர்கள், இன்னும் சில வருடங்களில் மக்கள் மத்தியில் இதற்காக மன்னிப்புக் கேட்பார்கள். இது உறுதியாகும். ஏனெனில், கடந்த காலங்களில் 18 ஆவது திருத்தச் சட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்தவர்கள் பிற்காலத்தில் இதனையிட்டு மன்னிப்புக் கேட்டார்கள்.

20 இன் ஊடாக ஆளும் தரப்புக்கு தான் முதல் அடி விழுந்துள்ளது. இப்படி தங்களுக்கு இதன் ஊடாக அடி விழும் போதுதான் இதன் வீரியம் புரியும்” என கூறினார். (ம-3)


நீரோகா
திகதி 22/09/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0705
லக்கினம்: மிதுனம் — வெற்றி இலக்கங்கள்: 06 47 55 59

மஹஜன சம்பத
திகதி 2020/09/22
சீட்டிழுப்பு இலக்கம் 4253
T 8 3 1 1 8 3
தேசிய லொத்தர் சபை

கொவிசெத — உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 22-09-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2548
J 04 31 45 56
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 22/09/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0620
K 13 1 33 53 75

தன நிதானய
திகதி - 2020.09.22
சீட்டிழுப்பு இலக்கம் - 319
W 16 40 64 77
ஆங்கில எழுத்து — வெற்றி இலக்கங்கள்

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1223 — நிறம் நீலம்
சீட்டிழுப்பு திகதி 22.09.2020 — தினம் செவ்வாய்க்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்: P 25 31 36 53
57,625,280.40
SUPER 500: 9 0 9 3

அத கோடிபதி
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல: 1049
வர்ணம்: இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 2020.09.22
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 72,015,900/-
வெற்றி இலக்கங்கள்: 04 32 52 71 Z
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம் 8659
ரூ. 100/- பரிசுக்கான விசேட இலக்கம் 886
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.


சனிதா
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2020.09.22
சீட்டிழுப்பு இல.: 3379
வர்ணம்: இளநீலம்
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 42,100,202.50
வெற்றி இலக்கங்கள்: 03 04 09 26 D
ரூ 500/- பரிசுக்கான விசேட இலக்கம் 1247
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

I 40 43 65 67
628
22.09 2020 செவ்வாய்க்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 84,243,365
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

ராசி அதிர்ஷ்டம்
திகதி 22.09.2020 — வெற்றி வாரம் 2930 — வர்ணம் சிவப்பு
வெற்றி இலக்கங்கள்: 24 26 46 56 — மிதுனம்
ரூ.500 பரிசுக்குரிய 8961
ரூ.100 பரிசுக்குரிய 386
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,467,160
www.dlb.lk
தொ. பே.: 0112 333 546/47
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

# சஞ்சு சாம்சன், ஆர்ச்சர், ஸ்மித் அபாரம்

# சென்னையை வீழ்த்தியது ராஜஸ்தான்



ராஜஸ்தான் அணிக்கு எதிரான ஐ.பி.எல். லீக் போட்டியில் பவுலர்கள் ஏமாற்றியதால் சென்னை அணி 16 ரன் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

ஐ.பி.எல்., தொடரின் 13ஆவது சீசன் ஐக்கிய அரபு எமிரேட்சில் நடைபெறுகிறது. சார்ஜாவில் நேற்று நடந்த லீக் போட்டியில் டோனியின் சென்னை அணி, ஸ்டீவ் ஸ்மித் தலைமையிலான ராஜஸ்தானை எதிர்கொண்டது.

சென்னை அணியில் ருதுராஜ் கெய்க் வாத் அறிமுகமானார். ராஜஸ்தான் அணியில் 19 வயதுக்குட்பட்ட உலக கோப்பை தொடர் நாயகன் இந்திய வீரர் யாஷஸ்வி ஜெய்ஸ்வால் அறிமுக வாய்ப்பு பெற்றார்.




"டாஸ்" வென்ற சென்னை அணி கப்டன் டோனி முதலில் பவுலிங் தேர்வு செய்தார். ராஜஸ்தான் அணிக்கு சஞ்சு சாம்சன் (74), கப்டன் ஸ்டீவ் ஸ்மித் (69) கைகொடுக்க, 20 ஓவரில் 7 விக்கெட்டுக்கு 216 ரன்கள் எடுத்தது. ஆர்ச்சர் (27), டாம் கரான் (10) அவுட்டாகாமல் இருந்தனர். சென்னை அணி சார்பில் சாம் கரான் 3 விக்கெட் வீழ்த்தினார்.

கடின இலக்கை விரட்டிய சென்னை அணிக்கு டுபிளசி (72), வாட்சன் (33), கப்டன் டோனி (29) கைகொடுத்த போதும், 20 ஓவரில் 6 விக்கெட்டுக்கு 200 ரன்கள் மட்டும் எடுத்து தோல்வியடைந்தது. ராஜஸ்தான் சார்பில் ராகுல் திவாட்டியா 3 விக்கெட் கைப்பற்றினார். போட்டியின் ஆட்ட நாயகராக ராஜஸ்தான் அணியின் சஞ்சுசாம்சன் தெரிவானார். (ம-03)


**அண்ணா விரைவுப் பொதிகள் சேவை**

பிரான்ஸ் ஜேர்மனி டென்மார்க் கொலன்ட் பெல்ஜியம் ஸ்பெயின் 1250/=

மேலதிகமாக எவ்வித கட்டணங்களும் வெளிநாட்டில் இல்லை

லண்டன்-1050/=, பிரான்ஸ்-ஜேர்மனி-டென்மார்க்-கொலன்ட்- 1150/=
கனடா- அமெரிக்கா- 1450/= சுவிஸ்- 1400/= (வரி உள்ளடக்கப்படவில்லை)
வெளிநாட்டில் வரி அறவிடப்படும் சாத்தியம் உள்ளது (C-366)

இந்தியா - டுபாய் - சைனா போன்ற நாடுகளில் இருந்து பொருட்களை விரைவாக பெற்றுக் கொள்ள தொடர்புகொள்ளவும்

070 330 5500 077 888 9388 075 330 5500

976,KKS வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | 355, A9 வீதி கந்தசுவாமிகோவிலடி கிளிநொச்சி | சங்கானை நெல்லியடி சங்கத்தானை | புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு ஒட்டிசுட்டான் | களகராயன்குளம் மல்லாவி /துணுக்காய் மன்னார்/வவுனியா



**வாடகைக்கு**

யாழ். திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்தியில் பலாலி வீதியை முகப்பாகக் கொண்ட கட்டடம் ஒன்றில் தரைப்பகுதி மற்றும் முதலாவது மாடியில் வாடகைக்கு இடம் உண்டு.
வணிக, சேவை நிலையங்களுக்கு உகந்தது. (4063)

தொடர்பு - 077 953 0496



**வாடகைக்கு**

வவுனியா,
Station Road இல் இரண்டு
அறை வீடு வாடகைக்கு உண்டு. (4061)

தொடர்பு - 077 772 9721



**பணிப்பெண் தேவை**

திருநெல்வேலிப் பகுதியில் வீட்டு வேலைக்கு ஆள் தேவை.
வயதெல்லை :- 30 - 50 yrs.
வேலை நேரம் :- 7.30 a.m - 5.00 p.m
நேர்மையான பொறுப்பானவர்கள் தொடர்பு கொள்ளவும். (4052)

தொடர்பு - 077 760 7248



**A/L - 2020 கருத்தரங்கு**

தமிழ் - யாழ். முன்னணி சிரேஷ்ட தமிழ் ஆசான்

D.C.M யாழ். நகர்

( வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அருகாமை. )

காலம் :- 26.09.2020, 27.09.2020
நேரம் :- 1.00 p.m - 5.00 p.m

எதிர்பார்க்கை வினாக்கள்

( 20 மணித்தியால கருத்தரங்கு ) (4062)

தொடர்பு : 077 011 9434 நிர்வாகி



**வேலை வாய்ப்பு**

- விற்பனை முகாமையாளர் - ஆண், பெண்
  ( சிங்களம் பேச்சுத்திறன் உடையோர் தேவை. )
- விற்பனைப் பிரதிநிதி - ஆண்
- விற்பனை உதவியாளர்கள் - ஆண், பெண்
- கணக்காளர் உதவியாளர் - பெண்
  (கணினி அறிவுடையோர். )

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம். நேரில் சமுகளிக்கவும்
குரு ஹாட்வெயார், கரடிப்போக்குச் சந்தி, கிளிநொச்சி

தொடர்புகளுக்கு 077 743 5265
உரிமையாளர் குரு ஹாட்வெயார். (C-368)



**உளச்சார்பு / நுண்அறிவு**

வேலை வாய்ப்புக்களுக்கான போட்டிப் பரீட்சைகள், பதவி உயர்வுப் பரீட்சைகள் என்பவற்றிற்கான நுண்ணறிவு / உளச்சார்பு வகுப்புக்கள் தனிப்பட்ட முறையிலும், குழுவாகவும் கற்பிக்கப்படும்.

ஆறுமுகம் நித்தியானந்தன்
( B.Sc, Dip. in Ed. )
ஆசிரியர், யா/கொக்குவில் இந்துக் கல்லூரி (4057)

தொடர்பு - 076 799 9005



**ஆங்கில வாசிப்பு பயிற்சி நெறி**
( 2 Months )

முழுமையாக வாசிப்பதற்கும், தெளிவாகவும், அழகாகவும், உச்சரிப்பதற்கும் அடிப்படையில் இருந்து பயிற்றுவிக்கப்படும்.

கட்டணம் 3,000/- மட்டுமே

ஆரம்பம் - 26.09.2020 - ( சனி, ஞாயிறு )
28.09.2020 - ( திங்கள், செவ்வாய் )
நேரம் - 1.30 மணி தொடக்கம் 3.30 மணி வரை
3.30 மணி தொடக்கம் 5.30 மணி வரை (4058)

முன்பதிவினை மேற்கொண்டு கற்கைநெறியில் இணையவும்.

ELAS இல. 51, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Tel : 076 223 5678, 076 697 3040



**A/L - 2020 கருத்தரங்கு**

இடம் :- D.C.M யாழ். நகர்

இந்து நாகரிகம் T. ஸ்ரீஸ் B.A (Hons.)
கிறிஸ்தவ நாகரிகம் J.J. வசந்தன் B.A (Hons.)

நாளை :- 24.09.2020
நேரம் :- 2.00 p.m - 5.00 p.m

எதிர்பார்க்கை வினாக்கள்

( வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அருகாமை. ) (4062)

தொடர்பு : 077 011 9434 நிர்வாகி



**விரைவு பொதிகள் சேவை**

V2 TRAVELS
UK- 1025 /=Kg
0768226240

எமது நேரடிக்கிளைகள்
- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை

(C-112)



**மீண்டும்**

**வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை**

அசாதாரண சூழ்நிலை காரணமாக முடங்கியிருந்த எமது சேவை மீண்டும் வழமைபோல் அனைத்து நாடுகளுக்கும் 100% பாதுகாப்புடன் நடைபெறுகின்றது. (C-245)

**அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்**
இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 6113

**அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்**
இல.10, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 3536



**A/L வரலாறு**

மாபெரும் கருத்தரங்கு - 2020

வளவாளர்கள்

வடக்கு மாகாணத்தின் முதல்நிலை வரலாற்றாசிரியர்
M. பத்மன்
B.A (Hons.), P.G.D. (Edu.), Dip. in Psy., M.A (History)

தென்மராட்சியின் புகழ்மிகு வரலாற்றாசிரியர்
S. சுஜிகரன்
B.A (SL), P.G.D. (Edu.)

இடம் :- D.M.I கல்வி நிறுவனம், யாழ்ப்பாணம்

காலம் :- 26.09.2020 (சனிக்கிழமை)
27.09.2020 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் :- 7.30 a.m - 4.00 p.m (C-365)

வெளி மாணவர்களும் பங்குபற்றலாம்.
சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்படும்.



**COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS**

Care Giver Course - பராமரிப்பாளர் பயிற்சி நெறி

சிறுவர் பராமரிப்பு / முதியோர் பராமரிப்பு
விசேட தேவையுள்ளோர் பராமரிப்பு /வீட்டு பராமரிப்பு

- கனடாவில்/வெளிநாடுகளில் வேலைவாய்ப்பை பெற்றுக்கொள்ள
- படித்துக்கொண்டே 50'000/= சம்பளம் பெறலாம். (C-112)

CIMS

அனுமதிகளுக்கு-0777-069-777



**அமெரிக்க லொத்தர் விசா 2020**

நீங்களும் இந்த ஆண்டு அமெரிக்க லொத்தர் விசா அதிஸ்டசாலி ஆகலாம்.

இறுதி நேர ஏமாற்றத்தினை தவிர்த்திட
உடனடியாக கடவுச்சீட்டினை எடுத்து வைத்துக்கொள்ளுங்கள்

என்றும் உங்கள் மீது அக்கறையுடன் V2 TRAVELS
0768226244


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.09.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.